

# ஞானச்சுடர்

மார்கழி

2009



ௐ

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ

# குறள்வழி



**இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்**

**முயல்வாரு ளெல்லாந் தலை**

பொருள் : இல்வாழ்க்கையில் நின்று அதற்குரிய நல்ல முறையில் வாழ்கின்றவன் மறுமை இன்பத்தை நாடி முயற்சி செய்கின்றவர்கள் எல்லாருள்ளும் தலைவனாவான். (47)

**ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா இல்வாழ்க்கை**

**நோற்பாரின் நோன்மை யுடைத்து**

பொருள் : தவஞ் செய்வாரையும் அவர் வழியில் ஒழுகச் செய்து, தானும் தன் அறத்தில் வழுவாது நிற்றலால் இல்வாழ்க்கையானது தவஞ் செய்வார் நிலையினும் உயர்ந்ததாகும். (48)

☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆☆

# நற்சிந்தனை




## மறப்பேனோ குருநாதன் தன்னை

திருத்தாண்டகம் - 2

பண்ணவன்கா ணிசையவன்காண் பரவு வார்கள்
கண்ணவன்காண் கங்காள வேடத் தான்காண்
எண்ணவன்காண் எழுத்தவன்காண் எங்கு மான
விண்ணவன்காண் விளங்குமதிச் சென்னி யன்காண்
பெண்ணவன்காண் ஆணவன்காண் பெருமான் தான்காண்
மண்ணவன்காண் மாருதம்வா னாயி னான்காண்
அண்மையன்காண் சேய்மையன்காண் அன்று மின்றும்
உண்மையன்காண் என்னுயிருக் குயிரா னானே 4

வடிவுசேர் மழுவேந்தி யாடு வான்காண்
மாணிக்க வாசகனுக் கருள்செய் தான்காண்
கடிகமழுங் கொன்றையங் கண்ணி யன்காண்
கரும்புதரு சுவையெனக்குக் காட்டி னான்காண்
படிபுகழும் பாசுபத வேடத் தான்காண்
பகலோ டிராவாறியாப் பண்பி னான்காண்
நெடியமா லயன்றேட நீண்டு நின்ற
நிறைசோதிப் பிழம்பன்காண் நெஞ்சுள் ளானே 5

# ஞானச்சுடர்



வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை




# 2009 மார்கழி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| "யாவர்க்குமாம் உண்ணும்..... | கு. சோமசுந்தரம் | 1 - 2 |
| இந்து ஆலயங்களில்.... | கு. கோபிராஜ் | 3 - 4 |
| அறிவும் திருவும் | கு. குணாளன் | 5 - 7 |
| ஆசாரக்கோவை | - . | 8 - 10 |
| "ராம" பிரம்மம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 11 - 14 |
| சிவத்தமிழ்ச் செல்வியின்.... | கே. எஸ். சிவஞானராஜா | 15 |
| வேலை வணங்குவது.... | இரா. செல்வவடிவேல் | 16 - 21 |
| கொன்றை வேந்தன் | ஔவையார் | 22 - 23 |
| மருத்துவம், பஞ்சபூதியம், சமயம் | செல்வன் சி. செல்வலிங்கம் | 24 - 27 |
| நித்திய அன்னப்பணி | - | 28 - 29 |
| நாலும் இரண்டும்.... | மூ. சிவலிங்கம் | 30 - 33 |
| வட இந்திய ஸ்தலயாத்திரை | - | 34 - 35 |
| திருவிளையாடற்புராண.... | ஆறுமுகநாவலர் | 36 - 38 |
| இராமலிங்க சுவாமிகள்... | த. நாகராசா | 39 - 41 |
| வேண்டுதல்கள் | திருமதி சி. யோகேஸ்வரி | 42 - 45 |
| இருபடிப்பினைகள் | தி. பொன்னம்பலவாணர் | 46 - 47 |
| பசு, புத்திர செல்வம் | சி.மு. தம்பிராசா | 48 - 50 |
| ஆழ்வார்கள் கண்ட.... | செல்வன் தி. மயூரகிரிசர்மா | 51 - 53 |
| மரணத்தின் பின்... | வாரியார் சுவாமிகள் | 54 |
| செய்திச் சிதறல்கள் | - | 55 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 56 - 61 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 62 - 64 |


அன்பளிப்பு : **மலர் ஒன்று 30/- ரூபா**

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம் : 021 - 2263406, 021 3219599

Web Site : WWW. Sannithiyan.org

பதிவு இல. Q.D/38/NEWS/2009

அச்சுப்பதிப்பு : சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு

மார்கழி மலர் 2009 ஞானச்சுடர்

உ

ஞானச்சுடர்

# கார்த்திகை மாத வெளியீடு

## வெளியீட்டுரை

கார்த்திகை மாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை ஆச்சிரமத்தோடு, நீண்டகாலத் தொடர்புகளை மேற்கொண்டு வருபவரும் கிராம சேவையாளருமாக பணியாற்றி வருபவருமான திரு. க. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையின் போது ஆச்சிரமம் ஆனது பல்வேறுபட்ட பணிகளையும் தனது பெயருக்கேயுரிய சிறப்போடு காலமறிந்து செய்யும் தனித்தன்மையுடன் ஆற்றிவருவது சிறப்பிற்குரியதாகும்.அப்பணிகளில் ஒன்றாக பேரவையினால் வெளியீடு செய்யப்பட்டு வரும் 143ஆவது மலரை வெளியிட்டு வைப்பதோடு, இம்மலரானது எவ்வித தடைகளுமின்றி வெளிவர சந்நிதி வேற்பெருமான் அருள்புரியவேண்டும் என்று கூறி தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

## மதிப்பீட்டுரை

143ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையினை பிரம்மஸ்ரீ ப. சிவானந்த சர்மா (கோப்பாய் சிவம்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையினில் ஆச்சிரமம் பலபணிகளை ஆற்றிவந்தாலும் தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்து ஆற்றும் பணி நித்திய அன்னப் பணியேயாகும். அப்பணிகளின் வகையில் பெருமை பெற்றதுதான் 143ஆவது மலராக தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கும் இஞ்ஞானச்சுடர் மலர் ஆகும். இம்மலர் வெளியிடும்போது வருடத்தில் ஒரு மலருக்கான மதிப்பீட்டுரையையாவது நிகழ்த்துவதற்கு என்னை அழைத்திருப்பது ஆற்றங்கரை வேலவனின் அருட்செயலே என வியந்து கூறினார்.

அத்துடன் இம்மலரானது தொடர்ந்து வெளிவந்துகொண்டிருப்பதனால் இலைமறை காயாக இருக்கும் பலரது சமய ஆக்கங்கள் கட்டுரை வடிவிலும் கவிவடிவிலும் வெளிவர ஊக்கமும் அளிக்கின்றது. இச்சமயக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்ற இம்மலரானது நம் சமூகத்துக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைவதோடு, மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் ஆழ்ந்த உண்மைகளை சபையில் கூடியிருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு, இம்மலர் தொடர்ச்சியாக வெளிவர சந்நிதி வேற்பெருமான் அருள் வேண்டித் தனது மதிப்பீட்டுரையினை நிறைவு செய்தார்.



**நிகழ்வின் இறுதியில் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டியினை சமரபாகு உடுப்பிட்டியைச் சேர்ந்த தில்லையம்பலம் சுதேசினி என்பவரிடம் கையளித்திருந்தார்கள். E.S.P நாகரத்தினம் அவர்கள் கையளித்ததோடு நிகழ்வுகள் இனிதே நிறைவு பெற்றது.**

# சுடர் தரும் தகவல்



சந்நிதியான் ஆச்சிரமத்தின் பல்வேறு சமூகச் செயற்பாடுகளில் வைத்திய சேவைச் செயற்பாடுகள் மிகவும் காத்திரமான முறையில் நடைபெற்றுவரும் ஒரு செயற்பாடாகும். இத்தகைய வைத்தியசேவைச் செயற்பாடுகள் ஆச்சிரமம் செயற்படும் கட்டிடத்திற்குள் நேரடியாக ஆச்சிரமத்தின் மேற்பார்வையின் கீழ் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஆச்சிரமத்தில் நித்திய அன்னதானச் செயற்பாடுகள் எவ்வாறு அடியார்களின் பசிப்பிணி போக்குகின்ற மகத்தான செயற்பாடாக இடம்பெற்று வருகின்றதோ அதே போல இந்த வைத்திய சேவைச் செயற்பாடுகளும் பிரதிவாரம் தோறும் குறிப்பிட்ட நாட்களில் ஒழுங்கு தவறாது முழுமையாக இலவசமாக மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அன்னதானச் செயற்பாட்டைப் போல இந்த வைத்திய சேவைச் செயற்பாடும் அன்பர்களின் உடலியல் பிணியைப் போக்குகின்ற மகத்தான செயற்பாடாக அமைந்துள்ளது. இதனை மேலும் விரிவுபடுத்துவதற்கு வசதியாக இந்த வைத்திய சேவைக்கென தனியான ஒரு கட்டடத் தொகுதியை உருவாக்க வேண்டும் என்ற திட்டம் சுவாமிகளுக்கு நீண்டகாலம் இருந்து வந்தது. அவர் நினைத்தது போலவே அந்த செயற்திட்டம் தற்பொழுது செயல்வடிவம்பெற்று நிறைவேறுகின்றது.

வைத்தியசேவைக்கென கட்டப்பட்ட புதிய கட்டடத் தொகுதி 2010ஆம் ஆண்டு தைமாதம் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை புதுவருடத்தினத்தன்று திறந்து வைக்கப்படுகிறது. ஆச்சிரமத்திற்கு அன்பர்கள் வழங்குகின்ற உதவிகள், அன்பளிப்புக்களிலிருந்து சிறிதுசிறிதாக சேமிக்கப்பட்ட நிதியிலிருந்து இக்கட்டிடம் உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கட்டான காலகட்டங்களில் ஆச்சிரமத்தின் பணிகளுக்குத் தன்னாலான முழு ஒத்துழைப்புக்களையும் வழங்கியதோடு மட்டுமல்லாமல் ஆச்சிரமத்தின் ஊடாக பல இந்துநிறுவனங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்த முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர் அமரர் திரு.தியாகராஜா மகேஸ்வரன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவாக இக்கட்டிடம் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கட்டிடத்தின் மூலம் கடந்த பல வருடங்களாக ஆச்சிரமத்தில் இடம்பெற்று வரும் வைத்தியசேவைகள் மேலும் மேம்படுகின்ற அதேவேளை அமரரால் பயனடைந்த எம் அனைவரினதும் மனங்களில் அவர் நீங்காத இடம்பெறுவார் என்றும் நாம் நம்புகின்றோம். இவை எல்லாவற்றிற்காகவும் சந்நிதிவேற்பெருமானை பிரார்த்திப்போமாக.

உ

# சந்நிதியான் காவடிச் சிந்து

ஆற்றங் கரையில் வாழும் முருகன் - நல்ல
அழகு முகங்காட்டும் ஒருவன்
இந்த
அவனி யடியா ரெல்லாம் தொழுது கைகூப்பும்
அப்பன் அன்பு பக்தன்
உயர்
அன்னக் கொடையாளன் அன்பின் அடையாளன்
அருளுஞ் சந்நிதியின் பெரிய புகழாளன்
ஐயன் பெரு மெய்யன்



II

காற்றைப் போலுலகில் திரிவான் - மாயக்
கண்ண னது திரு மருகன்
கொடிய
கயவன் சூரனை வென்ற நெடிய வேலுடைய
கைலை நாதன் பெற்ற புதல்வன்
புனக்
கன்னி வள்ளிதனை எண்ணி வேடனாகி
கருத்தில் திளைமா வுண்ட காந்தன்
அருள் வேந்தன்

III

கீரன் ஆற்றுப்படை கேட்டே - எதிர்த்த
பூத கணத்தைத் அழித் தொழித்தான்
அன்பு
பொதிந்த அடியா ரெல்லாம் விரும்ப இடர்களையும்
போற்றும் வடிவேலின் படையான்
உயர்ந்த
பொதியின் முனிவருக்கு பொழிந்து தமிழ் கற்பித்த
பொருவில் புண்ணியத்தின்சீலன் - உயர்
புகழுஞ் சந்நிதியின் புனிதன்
என்தன் புலவன்

முதுபெரும் புலவர் மணி
கலாபூஷணம் ஆசிரியர்
வை.க. சிற்றம்பலம்

# மார்கழி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**அ. தபேசன்**
(இரசாயணவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
**மு. சுஸ்ருதன்**
(சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்)
**சி. மணிவண்ணன்**
(ஆசிரியர், செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு)
**வே. சம்பந்தநாதன்**
(கிராமசேவகர், புன்னாலைக்கட்டுவன்)
**செ. சுப்பிரமணியம்**
(இளை. அதிபர், சாவகச்சேரி)
**ம. சிவானந்தன்**
(ஆசிரியர், நீர்வேலி தெற்கு)
**கோ. கணேஸ்வரன்**
(இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், அச்சுவேலி)
**சங்கரப்பிள்ளை இரத்தினம்**
(கிருஸ்ணா மில், சாரையடி)
**செல்வி நற்குணம் விஜிதா**
(கூவில், புலோலி தெற்கு)
**செ. சின்னத்துரை**
(ஆசிரியர், மகாத்மாலேன், நெல்லியடி)
**சி. வீரசிங்கம்**
(நீதிமன்ற பதிவாளர், கரவெட்டி)
**செ. சுரேந்திரா**
(சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், அல்வாய்)
**M. தங்கவேல்**
(நடராஜா வீதி, வல்வெட்டித்துறை)
**K. ஸ்கந்தபாபு**
(H.N.B. கிளை, நெல்லியடி)
**கு. சின்னக்கிளி**
(மணல் தெரு, கம்பர்மலை)
**மா. மகாலிங்கம்**
(பழைய பொலிஸ் ரேசன் வீதி, ஆனைக்கோட்டை)
**சி. வேலாயுதம்**
(கந்த உடையார் ஒழுங்கை, பருத்தித்துறை)

**திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம்**
(சுழிபுரம் மேற்கு)
**கிருபைநாதன் அஜந்தன்**
(இணுவில் மேற்கு)
**பரமநாதன் மயூரன்**
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
**இ. விஜயரத்தினம்**
(K.K.S. வீதி, யாழ்ப்பாணம்)
**திருமதி த. தவேந்திரன்**
(ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி)
**இ. சந்திரசேகரசர்மா**
(முருகபதி, திருநெல்வேலி கிழக்கு)
**கு. கந்தரூபன்**
(கமலவாசம், இணுவில்)
**சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள்**
(நீர்வேலி)
**அ. பஞ்சாபகேசசர்மா**
(ஆவரங்கால்)
**A.T. சிவனேசபிள்ளை**
(ஞானத்தில்லை, இடைக்காடு)
**சிதம்பரி சிவபாதம்**
(மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை)
**இ. வசந்தகுமார்**
(மானிப்பாய் வடக்கு)
**ச. ஸ்ரீகுகன்**
(மலையாளம் தோட்டம், கரணவாய்)
**ச. சசிகரன்**
(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)
**மு. மயில்வாகனம்**
(அல்வாய் வடக்கு)
**S. சுப்பிரமணியம்**
(A.G.A. லேன், நெடியகாடு)
**சி. சிவனேசன்**
(கவிஞர் செல்லையா வீதி, அல்வாய்)
**இ. கந்தசாமி**
(வசந்தகம், இமையாணன்)
**நா. விக்னேஸ்வரன்**
(கோகுலம், சுதுமலை)

ஏரம்பமூர்த்தி சிவபாக்கியம்
(குப்பிளான் தெற்கு)
சி. சிவபாதசுந்தரம்
(உயரப்புலம், ஆனைக்கோட்டை)
ந. சிவராஜா
(குமரக்கோட்டம், கோண்டாவில்)
சு. ஸ்ரீஸ்கந்தராசா
(பலாலி வீதி, திருநெல்வேலி)
சி. இரத்தினசபாபதி
(கன்னாதிட்டி ஒழுங்கை, யாழ்ப்பாணம்)
ஸ்ரீரஜனி அமரசிங்கம்
(நூலகர், அளவெட்டி)
S.R. சரவணபவன்
(பிள்ளையார் கோயிலடி, அளவெட்டி)
க. வாமதேவன்
(பஜனைச்சபை, வழக்கம்பரை)
திருமதி ச. செல்வரஞ்சனா
(சுண்ணாகம் கிழக்கு)
S. மனோகரன்
(மாதா கோயிலடி, கோப்பாய்)
சு. இலங்கநாயகம்
(இராமகிருஷ்ண மகாவித்தியாலய வீதி, கோண்டாவில்)
நடராஜா சறோஜா
(குடும்பநலசேவை உத்தியோகத்தர், அச்சுவேலி)
த. வேலுச்சாமி
(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)
கந்தையா காங்கேசன்
(பலாலி வீதி, உரும்பராய்)
சி. சரவணப்பெருமாள்
(மாணிக்கவளவு, கரணவாய்)
வே. கிருஷ்ணபிள்ளை
(C.T.B., நெசவுசாலையடி, கரணவாய்)
S. நவரெட்ணம்
(கெருடாவில் வடக்கு, தொண்டைமானாறு)
S. சத்தியமூர்த்தி
(காட்டுவளவு, வல்வெட்டித்துறை)
சு. சிவலிங்கம்
(குகன்குடிசை, பொலிகண்டி)

**பா. பாலச்சந்திரன்**
(சண்முகபவனம், மயிலணி)
**செ. சுந்தரேஸ்வரன்**
(மாதகல்)
**M. செல்வராசா**
(தும்பளை பருத்தித்துறை)
**செ. அரியானந்தம்**
(வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு)
**N. குணரெட்ணம்**
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
**V. சிவனேசன்**
(கமலை, மானிப்பாய் வீதி)
**செல்வி ச. சரவணமுத்து**
(சந்தை வீதி, ஆவரங்கால்)
**பத்மநாதன் மதுரா**
(இராஜவீதி, அச்சுவேலி
**க. முருகானந்தன்**
(கட்டுடைச்சந்தி, மானிப்பாய்)
**செ. உலகநாதபிள்ளை**
(வியாபாரிமூலை, பருத்தித்துறை
**க. சிவலிங்கம்**
(பத்மாலயம், உரும்பராய்)
**தம்பன் இரத்தினசிங்கம்**
(நாவற்காடு)
**ச. கிருபைராசா**
(வலவந்தோட்டம், கரணவாய்)
**இ. கந்தசாமி**
(பெரியமதகடி, துன்னாலை)
**சு. பொன்னம்மா**
(மணலாவத்தை, நெல்லியடி)
**நமசிவாயம்பிள்ளை சிவனருட்காந்தி**
(மானாங்கானை, வல்வெட்டித்துறை)
**கந்தையா தம்பிராசா**
(குணயாவளவு, ஈவினை)
**இ. நடராசா**
(தாவடிச்சந்தி, கொக்குவில்)
**R. நந்தகோபால்**
(K.K.S வீதி, யாழ்ப்பாணம்)

உ

# "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி"

- குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் -

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்த வற்றுள் எல்லாந் தலை"
"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"
"ஐயமிட்டுண்"
"தானங்களிற் சிறந்தது அன்ன தானம்"

எனத் தலைசிறந்த வாழ்க்கை நெறிகளை வகுத்து வாழ்ந்து காட்டியவர்கள் எமது முன்னோர்கள். இத்தகைய வாழ்க்கை நெறிகள், சைவநெறிகள் ஆகிவிட்டன.

நல்ல வழியாற் தேடிய பொருட்களைப் பகுத்துத் தானும் உண்டு, ஏனைய உயிர்களுக்கும் கொடுத்து அவைகளையும் காப்பாற்றுதல், அறங்கள் எல்லாவற்றினுள்ளும் தலையாய அறமாகும்.

பசிப்பிணியே உடலுக்கு வரும் நோய்களுள் மிகக் கொடியது. அதுவே ஏனைய நோய்களுக்கும் காரணமாகின்றது. இதனாலேயே ஔவைப்பிராட்டியாரும், "கொடிது, கொடிது, வறுமை கொடிது" என்றார். பசிப்பிணியைப் போக்க வல்லவர்களே உண்மையான வள்ளல்கள்" என உலகம் போற்றி வந்தது.

உயிரை வளர்க்க வேண்டுமானால் உடல் ஓம்பப்பட வேண்டும். எனவே, உடல் புறக்கணிக்கக் கூடிய ஒன்றல்ல, என்கிறார் திருமூலர். உடலை வளர்ப்பதற்கு உணவு இன்றியமையாததாகும். அதனாலேயே "யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி" என்று திருமந்திரம் கூறுகிறது.

தென்புலத்தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார் தான் என்ற ஐந்து தரப்பினரையும் பாதுகாத்து, அவர்களுக்கு உணவளித்தல் இல்வாழ்வானின் கடமை என வள்ளுவப் பெருந்தகை எடுத்துரைக்கின்றார். வீட்டிலிருந்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம், பசித்து உணவு கேட்டு வருபவர்களுக்கு உணவு அளிப்பதற்கே ஆகும். தம்மை நோக்கி உணவு கேட்டு வந்தவர்கள் புறத்தே இருக்கத் தான் மட்டும் உண்டு இன்புறுவது சைவநெறிக்குப் புறம்பானது. இவ்வாறு செய்வதினாலேயே, இல்லறம் சைவநெறிப்படி நல்லறமாகியது. பசித்தவர்களுக்கு உணவளித்த பின், மிஞ்சிய உணவினைத் தாம் உண்டு வாழ்பவர்களைத் துன்பம், துயர், இடையூறுகள் அணுக அஞ்சுகின்றன. இவர்களின் வாழ்க்கையில் எந்நாளும் இன்பம் பொங்கும்; இவர்கள் துன்பத்தில் துவண்டு வருந்துவதில்லை.

சைவமரபு, பசித்தோருக்கு உணவளிக்கும் பண்பினைக் கட்டி வளர்த்து

வந்திருக்கிறது. கோயில்களுக்கு அணித்தாகத் திருமடங்கள், சத்திரங்கள், என்பனவற்றை அமைத்தல்; உற்சவங்களின் போதும், முடிவிலும் மாகேஸ்வர பூசை எனப்படும் அன்னதானம் வழங்கல்; வீடுகளில் நடைபெறுகின்ற சமய, சமூக வைபங்களின் போது உணவளித்தல், என்பன சைவமரபு வளர்த்த நற்கருமங்கள் ஆகும். இப் பண்புகள் பேணிவளர்த்துத் தொடரப்பட வேண்டியவை. சர்வ லோக நாயகிக்கு அன்னபூரணி என்று அழைத்து வழிபடும் பெருமையும்; பெற்ற தாய், அன்னம் அளித்துக் காப்பாற்றி வருவதால் அவளை, அன்னை என்றழைக்கும் பாங்கும் சைவமரபிற்கே உள்ளன.

சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவாரூர் மக்களின் பசித்துயரைப் போக்க, குன்றையூரில் பெற்ற நெல்மணிகளை திருவாரூருக்கு அனுப்பிவைக்க உதவுமாறு தோழமை நிலையில் திருக்கோளிலி எம்பெருமானுக்கு விண்ணப்பம் செய்தார். ஞானசம்பந்தரும், அப்பரும் பஞ்சத்தால் வருந்திய மக்களின் பசித்துயரைத் துடைப்பதற்காகச் சிவபெருமானை நோக்கிப் பதிகம் பாடிப் படிக்காசு பெற்றனர். அர்த்தசாமத்தில், அடைமழை நேரத்தில், வறுமை வாட்டிய நிலையிலும் உணவு கேட்டு வந்த சிவனடியாருக்கு அன்போடு அமுதூட்டியவர் இளையான் குடிமாறநாயனார். அப்பூதியடிகள் மடங்களும், தண்ணீர்ப்பந்தல்களும் அமைத்துத் தொண்டு செய்தார். இவற்றையும் இவை போன்ற சம்பவங்களையும் சேக்கிழார் பெரியபுராணத்தில் சிறப்பித்துக் கூறியுள்ளார். இப்பண்பு சைவமரபாக, சைவநெறியாக, தமிழ் மக்கள் மத்தியில் வளர்ந்து வந்துள்ளன.

சென்ற நூற்றாண்டில், யாழ்ப்பாணத்தில், பஞ்சத்தால் வருந்திய மக்களின் பசிப்பிணியைப் போக்குவதற்குக் கஞ்சித்தொட்டிகளை ஊர்தோறும் அமைத்துத் தொண்டு புரிந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். பிடியரிசி வழங்குவதன் மூலம் இப்புண்ணிய கைங்கரியத்தில் ஒவ்வொரு வீட்டாரையும் ஈடுபடுத்திய பெருமை நாவலரையே சாரும். “யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி” என்ற திருமூலர் வாக்கு இங்கு செயலாகின்றதைக் காண்கின்றோம். இதன்படி தினமும் உலையில் போடப்படுகின்ற அரிசியில் ஒரு பிடி அரிசியை அள்ளி எடுத்து ஒரு பாத்திரத்தில் இட்டுச் சேமித்து வருவர். இவ்வாறு ஒரு மாதகாலம் சேர்த்த அரிசியை ஏழைகளின் பசியைப் போக்க வழங்குவர். இந்த மாதிரியாக, பசித்தோருக்கு உணவளிக்கும் பண்பு பண்டைக் காலத்திலிருந்து நாவலர் காலம் வரை சைவமக்களிடையே சைவப் பாரம்பரியமாக வளர்ந்து வந்துள்ளது. ஆனால் தற்காலத்தில் இப்பண்பு அருகிவருவதை உணரக்கூடியதாக உள்ளது. இத்தகைய பசித்துயர் துடைக்கும் பண்பாட்டினை சைவமக்களாகிய நாம் நன்குணர்ந்து, அதனை மீளவும் வளர்க்க முயல்வோமாக. இதேவேளை, “உண்ணும் உணவைப் பழித்தலாகாது. இது விரதமாகும்; “உணவை வீணாக எறியலாகாது. இது விரதம்.” என்னும் உபநிடதக் கூற்றுக்களையும் நாம் கவனிக்க வேண்டும். உயிரைக் காப்பாற்றும் உணவு மிக அருமையானது. மிக்க அருமையான உணவுப் பொருளை அலட்சியம் செய்வதோ வெறுப்பதோ ஒழுக்கம் அன்று என்பதையும் உணர்வோமாக.

உ

(தொடர்ச்சி...

# இந்து ஆலயங்களில் மிருகப் பலி

## தமிழ் இலக்கியத்தில் அசைவ உணவு

ஆய்வு

**(சிறப்பாக யாழ்ப்பாணம்)** - **குணரத்தினம் கோபிராஜ் அவர்கள்**



சங்ககால தமிழ் இலக்கியங்களில் சமுதாய வாழ்வில் மக்கள், உணவுப் பழக்கவழக்கங்களை பார்க்கின்றபோது ஊன்உண்டதை, மீன்சாப்பிட்டதை, இறைச்சியை சோற்றுடன் கலந்து வேகவைத்து உண்டதை தீயில் வாட்டி சுட்டுத்தின்றதை யும், மிருகப்பலி பற்றிய செய்திகளும் உள்ளது. அக்கால நூல்களில் கோழி, மான், அரிசி, குரங்கு, அணில் போன்றவற்றை தம் உணவாக மக்கள் ஏற்றனர். அத்துடன் செம்மறியாட்டு உணவை மக்கள் மகிழ்வுடன் உண்டதாக ஔவையாரது புறநானூறு 96ஆவது பாடல் சொல்கிறது. பழந்தமிழா் ஆமை இறைச்சியைத்தின்று கள்குடிப்பர். பின் கடைவாயில் ஆரல்மீன் சூட்டை வாயில் அடக்குவர் என நூல்கள் கூறுகின்றன. மருதநில மக்கள் நெல்லரிசிச் சோற்றுடன் கோழிப் பொரியலையும் உண்டனர். காட்டுமுயலை சங்ககாலத்தே விரும்பி உண்டனர். இதில் இதன் இறைச்சி சுவைமிக்கதாக காணப்பட்டது. இதை புறநானூறு

> **"குறுமுயலினினம் பெய் தந்த**
> **நறு நெய்ய சோறென்கோ"**

எனப்படுகின்றது. மேலும் வெள்ளாட்டு இறைச்சியை பழந்தமிழா் உண்டார்கள் என்பதை பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

> **"கொடுவாள் கதுலிய பல்லூண் கொழுங்குறை**
> **வல்லோனட்ட பல்லூன் கொழுங்குறை.........."**

அடுத்து சிலப்பதிகாரத்தில் போரில் தம் அரசன் வெற்றிபெற கொற்றவையை வேண்டித் தங்கள் தலையை தாங்களே வெட்டி பலி கொடுத்தனா் என்ற செய்தி காணப்படுகிறது. இது சிலப்பதிகார புகார்காண்டத்தில் இளங்கோவடிகள்.

> **"சுடுங்கொள்ளி போலுங் கடைசி வந்த**
> **பார்வையுடைய தமது பசுந்தலையை, வேந்தன்**

**நேரில் உன்னைக்கண்டு பயப்படுகிறவன், நீ இல்லாதபோது உன்னை வெறுப்பான்**

வெற்றி கொள்க என்று நன்றாகிய பலிபீடத்தில்
நன்மை பொருந்த வைத்து, அப்பொழிதே
உயிர்பலியுண்ணும் இடியின் குரல்..........

என்று கூறப்படுகின்றது. மேலும் இளங்கோ அடிகள் சங்கரி, அந்தரி, நீலி, அடாமுடியிலே செங்கண் அரவும் பிறையும் ஒருசேரச் சூடுபவனே! எயினர் இடும்பலிக் கடன்கள் ஏற்று உண்பாயாக என்று கூறுகின்றார்.

**கடவுளரும் பலிவழிபாடும்**

"அ" என்ற நாமம் முதல் அரவணிந்தோன் ஆனையுரித்தோன், புலித்தோலு டையோன் மீன்வேடன் எனும் 772 பெயரை உடையவர் சிவபெருமான் சிவப்பு நிற மும், 5சிரமும் முக்கண்ணும் கைகளில் மான் மழுவும் பிரம்ம கபாலமும் உடுக்கை யும் உடையவர் என்றும் தலையிலே பிறைச்சந்திரனையும், கங்கையையும் கொண்ட சிவபெருமான் சுயம்பு வகையால் சாம்பமூர்த்தி எனும் சங்காரத்துக்கு கர்த்தராகை யினால் சங்கரனென்றும் மகாதேவன் என்றும் பல பெயர்கள் உண்டு. சிவபிரான் பலிவழிபாடு பற்றிய செய்திகள் "ஆரியர் பாதையில் பசுவதை" என்ற நூலில் காண லாம். மாணிக்கவாசகரது திருவாசகத்தில்

"சாவ முன்னாள் தக்கன் வேள்வித்தகர் தின்று
நஞ்சம் அஞ்சி ஆல எந்தாய யென்ற..........

தகர் என்றால் ஆடு என இந்நூலாசிரியர் கூறுகின்றார்.

சுடலைப்பொடி, எலும்புமாலை மண்டையோடுகள் என்பவற்றுடன் சிவன் புலித்தோல், மான், சர்ப்பம், பூதம், முண்டதலை, அபஸ்மாரம் என்பன உடையவர் கொடூரமுகத்தை உடையபுலி தப்பிக்கொண்டு சிவன் சமீபத்தில் வர அதை அடித் துக் கொன்று தோலை வஸ்திரம் ஆக்கினார் எனப்படுகிறது. சிவனுக்கு மாமிசம் படைத்த செய்தி தேவாரத்தில் காணப்படுகின்றது.

"கட்டக்காட்டின் டைமாடு வாரியாவர்க்குங் காட்சி யொண்ணார்
சுட்ட வெண்ணீறணிந்தாடுவர் பாடுவர்........."

என இந்நூலாசிரியர் கூறுகிறார். இவரது கருத்து பொருத்தமுடையதா என்பது சிந்திக்கத்தக்கது.

முருகன் அடியார்கள் சிறிய தினையரிசியுடன் மலர்களும் சேர்த்து பிரம்பரிசி யாக வைத்து ஆடு, கோழி உணவுடன் ஒவ்வோர் இடத்திலும் நிறுத்தி முருகனை வழிபட்டனர்.

சிறுதெய்வவழிபாடும் பலிவழிபாடும் இந்துசமயத்தில் இடம்பெற்று உள்ளது. அதாவது சமூக ஆரம்பநிலையில் வேட்டுவ சமூக அமைப்பு இருந்ததால் இறைச்சி படைத்தல், மிருகத்தைக் கொல்லுதல் போன்றன அவசியமாக இருந்து அவர்கள் உணவுத் தேவைக்காக இதைச்செய்தனர். இதைவிட மிருகத்தின் தோலை ஆடையாக அணிந்தனர், மிருகத்தை வாகனமாக்கியமை அவரது அற்புதமாகும். இருப்பினும் வேதகாலத்தே வேள்வி காணப்பட்டாலும் உபநிடதகாலத்தே அதன் பொருள் வேறா கவே காணப்பட்டது.

உ

# அறிவும் திருவும்

- கு. குணாளன் அவர்கள்-

இந்து மதத்தவரின் கடவுள் கொள்கை முற்றிலும் மனித வாழ்க்கையை ஒட்டியதே ஆகும். குடும்ப வாழ்க்கையின் பிரிவுகளை தெய்வ அம்சங்களாகச் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன.

எமது சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவனுக்கு பார்வதிதேவி என்ற இல்லாள் உண்டென்றும், முருகன், பிள்ளையார் ஆகிய சற்புத்திரர்கள் உண்டெனவும் ஒரு குடும்பத்தை எடுத்துக் காட்டி உள்ளனர். சிவனது ஒவ்வொரு அவதாரத்திலும் சக்தியும் அவதாரம் செய்து கணவன், மனைவி ஆகின்றனர்.

சிவன் சொக்கநாதன் எனப்பெயர் பெற்றால் சக்தி மீனாட்சி ஆகிறாள். சிவன் ஏகாம்பேஸ்வரர் ஆனால் சக்தி காமாட்சி ஆகிறாள். அப்படியாக இறைவனும் இறைவியும் பெயர்களைப் பெறுகின்றனர். இது போலவே வைஷ்ணவ மதத்திலும் திருமாலும் திருமகளும் ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு நாமங்களைப் பெறுகின்றனர்.

திருமால் கண்ணன் ஆனால் திருமகள் ருக்மணி ஆகிறாள். திருமால் வேங்கடத்தான் ஆனால், திருமகள் அலர்மேலு ஆகிறாள். சைவர்கள் சிவனையும், வைஷ்ணவர்கள் திருமாலையும் தந்தையாகக்கொண்டு இயங்குகின்றனர். சைவர்களும், வைஷ்ணவர்களும் சம்பந்திகளே. சைவ, வைஷ்ணவ தகராறு என்பது சம்பந்திகள் தகராறே ஆகும். திருமாலின் தங்கையைத்தான் சிவன் திருமணம் புரிந்து கொண்டார். இவ்வாறு ஒவ்வொரு கடவுளர்க்கும் ஒவ்வொரு பத்தினிகள் உள்ளனர். படைத்தல் தொழிலைப்புரியும் பிரம்ம தேவனுக்கு கல்விக்கு அதிபதியான சரஸ்வதிதேவி, இந்திரலோகத்துக்கு அதிபதியான இந்திரனுக்கு இந்திராணி, அழகன் முருகனுக்கு தெய்வயானை, வள்ளி என இரு பத்தினிகளும் உள்ளனர். பிள்ளையார் மட்டுமே பிரம்மச்சாரியாக உள்ளார். இப்படியாக கடவுளர்க்கும் குடும்பங்களை ஏன் வகுத்தார்கள்? கடவுளும் லௌகிகத்துக்கு தப்பவில்லை என்பதை எடுத்துக்காட்டவே.

இந்து மதம் லௌகிகத்தையே முதற்படியாகக் கொள்கிறது. துறவை இரண்டாம்படியாகவே கருதுகிறது. மனித குடும்பங்களில் கணவன், மனைவி பிரச்சனைகள் எவ்வாறு உருவாகிறதோ அது போல சிவனுக்கும், சக்திக்கும் பிரச்சனைகள் வந்ததாகப் புராணக்கதைகள் பல கூறுகின்றன. எமது குடும்பங்களில் என்னென்ன காரணங்களுக்காகப் பிரச்சனைகள் உருவாகின்றனவோ, அதே காரணங்களுக்காகத்தான் கடவுள் குடும்பங்களிலும் பிரச்சனைகள் தோன்றி இருக்கின்றன. இவற்றை கேட்கின்ற வேறு நாட்டவர்க்கு வியப்பாகவும், ஆச்சரியமாகவும் இருக்கின்றன. உலகில் உள்ள வேறு எந்த ஒரு மதமும் இறைவனை கணவன், மனைவியாகக் கண்டதில்லை. இந்து மதமானது வெறும் சந்நியாசிகளுக்கும், வாழ்க்கையைக் கண்டு பயந்தவர்க்கும் அடைக்கலம் கொடுப்பதல்ல. அது போலவே மனித வாழ்விலும் நாகரிகம், கலைகள், கலாச்சாரம் அனைத்தையுமே எதிரொலிக்கிறது. வாழ்க்கையில் எத்தனை கோணங்களுண்டோ, அத்தனை கோணங்களும் இந்துமதக்

நான் மற்றவர்களைவிட அறிவாளி என பிறரிடம் கூறாத புத்திசாலியாக நீ இருக்க வேண்டும்

கொள்கைகளிலும் உள்ளன. கல்வி பற்றியும், கல்லாமைபற்றியும் கதைகள் உள்ளன. கல்விக்கு அதிபதி சரஸ்வதி, செல்வத்துக்கு அதிபதி இலக்குமி என்றெல்லாம் வாழ்க்கைத் தேவைக்கும் கடவுள்களை வைத்துள்ளது இந்துமதம். கலைகளைக் கூட தன் வழிகளில் ஒன்றாக ஏற்றுக்கொண்டது இந்துமதம். இறைவன் நடனமாடியதாக இந்துமதம் தவிர்ந்த வேறு எந்த மதத்திலாவது உண்டா? சரஸ்வதி வீணை மீட்டுகிறாள். நாரதர் தம்புரா மீட்டுகிறார். நந்தி மிருதங்கம் கொட்டுகிறது. நடராசர் நடனம் புரிகிறார். இப்படியாக மனிதர்களின் ஆசைகளுக்கும் உல்லாசப் பொழுது போக்குகளுக்குக் கூட இந்து மதம் வழிசமைத்துள்ளது.

போர் புரிவதுபற்றியும் கதைகள் உள்ளன. தூது செல்வது பற்றியும் கதைகள் உள்ளன. ஏன் சமாதானம், பேரம்பேசுவது, கடன்வாங்குவது, பொய் கூறாமல் இருப்பதுபற்றியும் கதைகள் உள்ளன. இப்படியாக ஒவ்வொரு தலைப்புகளுக்கும் பல கதைகள் உள்ளன. இந்து மதத்தின் மூல நோக்கம் வாழ்க்கையின் சகல பகுதிகளையும் சுட்டிக்காட்டுவதே ஆகும். மாற்றான் மனையாளை கவர்ந்து சென்றது, மாற்றான் மனையாளை தாயாக நினைத்த கதைகளும் என கதைகள் பல உள்ளன.

தெய்வப் புலவரின் குறள் எப்படி போகின்ற பக்கம் எல்லாம் எதிரொலிக்கின்றதோ, ஒவ்வொரு அனுபவத்திலும் ஓடி வந்து நிற்கின்றதோ அதுபோல் புராணக் கதைகளும் வந்து நிற்கின்றன. அந்தக் காலமே இந்துக்கள் விஞ்ஞான ரீதியாகவும் சிந்தித்தார்கள். ஆம் அது தான் வானில் பறக்கும் புஸ்பக விமானத்தை அறிமுகம் செய்தார்கள். கடல் நீரை முகில் மூலம் மேகம் வாங்கி மழையாகப் பொழிவதை அப்பவே சொல்லிவிட்டார்கள். புவி சுழலுதல், கிரகணங்கள் தோன்றுதல் போன்றவற்றையும் தத்துவமாகச் சொன்னார்கள்.

நட்சத்திரங்கள் பற்றியும் எழுதி வைத்துள்ளனர். சந்திரமண்டலம், செவ்வாய்க்கிரகம் என்பன புவியில் இருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளன என்பதனையும் எப்பொழுதோ சொல்லிவிட்டனர். இந்துக்களின் விஞ்ஞான அறிவு மிகவும் அற்புதமானது. இராமாயணம், மகாபாரதம் ஆகியபோர்களில் வரும் அஸ்திரங்களின் அடிப்படையைக் கொண்டே தற்போதைய நவீன சுடுகலன்களை மேலை நாட்டவர்கள் தயாரித்தனரோ என எண்ணத் தோன்றுகிறது. எமது இந்து மதம் மிகவும் பெருமை வாய்ந்தது. பிற இனத்தவர்கள் எமது மதத்தின் மகிமையை அறிந்து ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். இவ்வாய்வுகளை நான் நேரில் கண்டும் இருக்கிறேன். 1998ஆம் ஆண்டு நான் இந்தியா சென்றவேளை தஞ்சைப் பெரிய கோயிலைத் தரிசிக்க சென்றவேளை அங்கு ஆங்கிலேய ஆய்வாளர்கள் எமது மதத்தின் தொன்மைப்பற்றி ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். புராண, இதிகாசங்கள், கல்வெட்டுக்கள் போன்றவற்றையும் ஆய்வு செய்தனர். ஆங்கிலேயப் பெண்மணிகள் எமது கலாச்சாரத்தைப் பின்பற்றி இருந்தமையைப் பார்த்தபோது நான் மிகவும் சந்தோஷப்பட்டேன். ஆனால் எமது மக்கள் எமது கலை, கலாச்சாரத்தை காற்றில் பறக்கவிட்டு அந்நியதேச கலை கலாச்சாரத்தைப் பின்பற்றி நடப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகிறது. பல நூற்றாண்டுகளாக மனித வாழ்வின் சகல கோணங்களையும் விஞ்ஞான ரீதியாக இந்துக்கள் கூறி வைத்துள்ளனர்.

ஆரம்ப காலத்தில் இந்து மதத்தில் பல தெய்வ வணகங்கள் இருந்து வந்துள்ளன. சூரிய வணக்கம் அவற்றுள்

முக்கியமானது. எமது மதத்தில் காலத்துக்குக் காலம் புதிய புதிய தத்துவங்கள் தோன்றி உள்ளன. இந்து மதமானது நீண்டகாலமான மதமானதால் ஆண்டுக்கு ஆண்டு பக்குவப்பட்டு இன்று அது தளைத்து பெருவிருட்சமாக பூத்துக் குலுங்குகிறது. மிகவும் நுணுக்கமாக ஆராய்ந்தால் ஒவ்வொரு பண்டிகைகளுக்கும் ஒவ்வொரு அர்த்தம் உள்ளன.

நாம் சரஸ்வதிபூசை, ஆயுத பூசை செய்கிறோம். சரஸ்வதியையும், மகாலட்சுமியையும் வணங்குகிறோம். அதாவது அறிவையும், செல்வத்தையும் வணங்குகிறோம். அறிவும், செல்வமும் தான் வாழ்க்கை. அறிவுக்குத் தலைவியான சரஸ்வதி யார்? அவளுக்கு வாணி, கலைமகள், சரஸ்வதி என்ற நாமங்கள் உள்ளன. திருப்பாற் கடலில் தேவர்கள் அமுதம் கடைகிறபோது கல்விக்கு அதிபதியான சரஸ்வதி தோன்றினாள் என்பது ஐதிகக்கதை. சரஸ்வதி கல்வி, கலைகளுக்குத் தலைவி. அமுதம் கடைந்தபோது தோன்றினாள் என்று ஏன் கூறினார்கள்? உள்ளத்தை அறிவால் தோண்டி எடுக்கும்போது வாழ்க்கை ஒளி அடைகிறது என்பதாம். கலைக்கு முக்கியம் தெய்வ வழிபாடு செய்து தொடங்குவது. அதுவே கலைமகள் கையில் உள்ள ஜெபமாலை. மறுகையில் வைத்திருக்கும் ஏடு கல்வியின் வடிவம். கையில் உள்ள வீணை நாதவடிவம். சரஸ்வதி தேவிக்கு வெள்ளை உடை ஆசனம் வெண்தாமரைப் பூ. கல்வியும், கலையும் வளர்வதற்கு இவையே மிகவும் முக்கியமானவை. கல்வியும் கலையும் எமக்குக் கிடைக்க வேண்டுமாயின் எமது உள்ளமானது சூது, வாது இல்லாத வெள்ளை உள்ளமாக வைத்திருக்க நாம் ஒவ்வொரு வரும் இறைவன் மீது பற்று வைக்க வேண்டும். இறைவன் தூய்மையான உள்ளத்தில் குடி கொள்வான் என்பது இந்து மதக் கொள்கை. மன்னன் கட்டிய பெருங் கோயிலுக்குச் செல்லாது ஏழையாகிய பூசலார் என்ற அடியவர் உள்ளத்தில் அமைத்த கோயிலுக்குச்சென்று எழுந்தருளினார் என்று இந்து மதம் கூறி உள்ளது. எனவே நாம் ஒவ்வொருவரும் எமது உள்ளத்தை அழுக்காறு, அவா, வெகுளி இல்லாத தூய்மையான இடமாகப் பேணிவந்தால் இறைவன் எம் மனதிலும் குடிகொள்வான் என்பதற்கு சந்தேகமே இல்லை.

அதுபோல திருமால், செல்வத்துக்கு அதிபதி திருமகள். வாழ்க்கைக்கு கல்விமட்டும் போதாது. பொருளும் வேண்டும். இதனைக் குறிக்கவே திருமகள் வடிவம். புவியில் வாழும் எல்லா உயிர்களையும் காப்பவர் திருமால். அவரது இல்லாள்தான் திருமகள். இத்திருமகளே எல்லா உயிர்களுக்கும் செல்வத்தை வழங்குபவள் ஆவாள்.

ஒட்டுமொத்தமாக உற்று நோக்குமிடத்து மனித வாழ்வின் குறிக்கோளை இந்து மதமே பூர்த்தி செய்கிறது. இந்து மதத் தத்துவங்கள், கல்வெட்டுக்கள், ஓலைச் சுவடிகள், திருமுறை ஏடுகள் போன்றவற்றை அறிவுடையோர் மதிப்பர். திருவுடையோர் அதற்கு நன்றி கூறுவர். மனித வாழ்வில் அறிவும், திருவும் எமது இரண்டு கண்கள் போன்றவை. இரண்டு கண்கள் எமக்கு எவ்வளவு முக்கியமோ, அதுபோலவே எமது வாழ்க்கையிலும் அறிவும் திருவும் முக்கியத்துவம் பெறுகின்றன. மனித சமுதாயத்தில் அறிவும், திருவும் இருந்தால் தான் அம்மனித குலம் பூரணத்துவம் அடைகிறது.

"அன்னையை மதிப்பவர்கள் வாழ்க்கையில் பிறர்பார்த்து பொறாமைப்படும் அளவிற்கு முன்னுக்கு வந்து உயர்ந்த ஸ்தானத்தில் வாழ்வர்"

செழிப்பு நண்பர்களைச் சேர்க்கிறது, வறுமை நண்பர்களைச் சோதிக்கிறது

உ

# பெருவாயின்முள்ளியாரின்

# ஆசாரக்கோவை

*52. நல்லவர் உள்ளம்*

படிறும் பயனிலவும் பட்டி உரையும்
வசையும் புறனும் உரையாரே என்றும்
அசையாத உள்ளத்தவர்.

பொய் பேசமாட்டார்கள். பயனற்ற சொல் கூறமாட்டார்கள். வீண் வார்த்தைகளை விளம்பமாட்டார்கள். வைய மாட்டார்கள். புறங்கூறமாட்டார்கள் என்றும் நடுவுநிலை தவறாத நல்ல உள்ளம் உடையவர்கள்.

படிறு - பொய்; பட்டி உரை - வீண்வார்த்தை; புறம் - கோள்.

*53. செய்யக்கூடாத சில.......*

தெறியொடு கல்ஏறு வீளை விளியே
விகிர்தம் கதம்கரத்தல் கைபுடை தோன்ற
உறுப்புச் செகுத்தலோடு இன்னவை எல்லாம்
பயிற்றார் நெறிப்பட்டவர்.

ஒரு பொருளை எத்தி எறிதல், கல் எடுத்து வீசுதல், கனைத்தல், சத்தம் போட்டு எட்ட உள்ள ஒருவரைக் கூப்பிடுதல், ஒருவரின் நடத்தையை, பேச்சைச் சொல்லிக்காட்டி; தானும் அதுபோலச் செய்து பழிச்சுக்காட்டுதல், கோபித்தல், ஒளிந்துகொள்ளுதல், கைதட்டிப் பேசுதல், கூப்பிடுதல், உடலுறுப்புக்களால் சைகை காட்டுதல் போன்றவற்றைச் செய்யமாட்டார்கள் ஒழுக்கம் உடைய சான்றோர்கள்.

தெறிதல் - எத்துதல்; ஏறு - எரிதல்; வீளை - கனைப்பு; விளி - கூப்பிடல்; விகிர்தம் - பழிச்சுக் காட்டுதல்; கதம் - கோபம்; கைபுடை - கைதட்டுதல்; செகுத்தல் - சைகை; பயிற்றுதல் - செய்தல்; நெறி - ஒழுக்கம்.

*54. விருந்தினர்க்கு விரும்பிச் செய்ய வேண்டியவை*

முறுவல் இனிதுரை கால்நீர் மணை பாய்
கிடக்கையோடு இவ்வைந்தும் என்ப தலைச்சென்றார்க்கு
ஊணொடு செய்யும் சிறப்பு

விருந்தென வருவோரை சிரித்த முகத்தோடு வரவேற்க வேண்டும். அவரோடு இன்சொல் பேச வேண்டும். கால்கழுவ நீரும், இருக்க மணையும், படுக்கப்

பாயும், தங்க இடமும் தந்திட வேண்டும். இந்த ஐந்துமே வீடு தேடிவரும் விருந்தினருக்கு; உணவளித்தலோடு செய்யவேண்டிய உபசாரம் என்று, பெரியோர் கூறுவர்.

கிடக்கை - இருக்க இடம்; ஊண் -உணவு.

### 55. அறிஞர்தம் இயல்பு

**கறுத்த பகைமுனையும் கள்ளாட்டுக் கண்ணும்**
**நிறுத்த மனம் இல்லார் சேரி அகத்தும்**
**குண நோக்கிக் கொண்டவர் கோள் விட்டுழியும்**
**நிகரில் அறிவினார் வேண்டார் பலர்தொகு**
**நீர்க்கரையும் நீடு நிலை.**

கோபம் கொப்பளிக்கும் போர்க்களத்திலும், கள்ளுண்டவர் நிலை குலைந்து ஆட்டம் போடும் இடத்திலும், நிலையின்றி - அலை பாயும் உள்ளம் உடைய விலை மாதர் வாழும் இடத்திலும்; தம்குண நலன்களை விரும்பி நட்புக் கொண்டவர்கள், தம்மேல் வைத்த மதிப்பை விட்ட நிலையில், அவர்கள் இருக்கும் இடத்திலும்; பலர் கூடும் நதிக்கரை குளக்கரையும், நீண்டநேரம் இருப்பதை; ஒப்புவமை அற்ற அறிவுடையோர் விரும்பமாட்டார்.

கறுத்த - கோபித்த; கள் ஆட்டு - கள் உண்டு ஆடும்; நிறுத்த - நிலையான; சேரி - வாழும் இடம்; கோள் - மதிப்பு; தொடு - கூடும்; நீடு - நீண்டநேரம்.

### 56. குலப்பெருமை கெடச் சம்மதியார்

**முளி புல்லும் கானமும் சேரார் தீக்கூட்டார்**
**துளிவிழக் கால்பரப்பி ஓடார் தௌவிலாக்**
**கானம் தமியார் இயங்கார் துளிய.்.கி**
**நல்குர வாற்றப் பெருகினும் செய்யாரே**
**தொல் வரவில் தீர்ந்த தொழில்.**

முற்றிய புல், அடர்ந்த காடு இவற்றைச் சேர்ந்திருக்கமாட்டார். அவற்றை நெருப்பிட்டு அழிக்கமாட்டார். திடீர் என்று மழை பிடித்துக் கொண்டால், காலைப் பரப்பி வைத்துக்கொண்டு ஓடமாட்டார். வழிதெரியாத காட்டில் தனியாகப் போகமாட்டார். மழை பெய்வது குறைந்து, வறுமை மிகப் பெரிதாக வந்தாலும், தங்கள் பழம் பெரும் குடிப்புகழ், கெடத்தக்க காரியங் களை; ஒரு போதும் மேலோர் செய்யார்.

முளி - முற்றிய; கானம் - காடு; துளி - மழை; அங்கி - குறைந்து; நல்குரவு - வறுமை; தொல்வரவு - தொன்று தொட்டு வரும் குடிப்புகழ்.

*57. நோயின்றி வாழ*

பாழ்மனையும் தேவ குலனும் சுடுகாடும்
ஊரில் வழியெழுந்த ஒற்றை முதுமரனும்
தாமே தமியர் புகாஅர் பகல்வளரார்
நோயின்மை வேண்டுபவர்.

பாழடைந்த வீட்டிலும், கோயிலுக்குள்ளேயும், சுடுகாட்டிலும், ஊரில்லாத பாதையோரம் இருக்கும், வயதான ஒற்றை மரத்தின் கீழும், தனியாகப் போய்த் தங்கமாட்டார்கள்; பகல் நேரத்தில் சென்று படுத்துறங்கமாட்டார்கள் - நோயின்றி வாழ விரும்புபவர்கள்.

தமியர் - தனியாக; வளர்தல் - தூங்குதல்.

*58. புறப்படும் போது........*

எழுச்சிக்கண் பின் கூவார் தும்மார் வழுக்கியும்
எங்குற்றுச் சேறீரோ என்னாரே முன்புக்கு
எதிர்முகமாக நின்றும் உரையார் இருசார்வும்
கொள்வர் குரவர் வலம்.

ஓர் இடம் புறப்பட்டுச் செல்ல முற்படும் போது, பின்னால் இருந்து, முன் செல்வோரைக் கூப்பிடக் கூடாது. ஒருவர் பயணம் புறப்படும் போது தும்மக் கூடாது. மறந்து போய்க் கூட, எங்கே போகிறீர்கள் என்று கேட்கக் கூடாது. புறப்பட்டுச் செல்பவர் முன்னே போய், அவருக்கு நேர் எதிராக நின்று கொண்டு; எதையும் சொல்லக் கூடாது. அவர்களின் இடப்பக்கமோ, வலப்பக்கமோ நின்றே பேசவேண்டும். பெரியவர்களை வலம் வந்து வணங்கிப்பின் செல்லவேண்டும்.

கூவுதல் - கூப்பிடுதல்; தும்மார் - தும்மல் போடமாட்டார்; வழுக்கியும் - மறந்தும்.

*59. பெரியோர் பண்பு*

உடம்பு நன்று என்றுரையார் ஊதார் விளக்கும்
அடுப்பினுள் தீநந்தக் கொள்ளார் அதனைப்
படக் காயார் தம்மேல் குறித்து.

நேரில் பார்த்த ஒருவரிடம் அவர் உடல் நன்றாக இருக்கிறது - என்று, அவர் எதிரிலேயே கூறமாட்டார்கள். எரியும் விளக்கை, வாயால் ஊதி அணைக்கமாட்டார்கள். அடுப்பில் எரியும் நெருப்பை, அடுப்பு அணைய எடுக்க மாட்டார்கள். தீ தம்மேல் படுமாறு அமர்ந்து குளிர்காயமாட்டார்கள். பெரியோர்கள்.

நந்த - கெட; காயார் - குளிர்காயமாட்டார்

உ

# 'ராம' பிரம்மம்

**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் - அவர்கள்**

தசாவதாரங்கள் எடுத்த மேன்மைக்குரியவர். நீலமேனியும் நீள் கருணை விழிகளும், பவளம் போல் அதரங்களும் உடைய அற்புதக் கடவுள் ஆராவமுதன் அடியவர்க்கெளியவன் அயோத்தி ராமன், தொண்டர்க்கினியவன், தேவர் துயர் தீர்த்த தூயவன், எங்கள் கண்ணீர் துடைக்கும் கருணைக் கடல், "மையோ மரகதமோ மறி கடலோ மழைமுகிலோ ஐயோ இவன் வடிவென்பதோர் அழியா அழகு" என கம்பர் உருகிய மரகதமணி, தரணி காக்கும் தலைவன், திருமகளின் பதியாகிய அந்த சரணாகதவத்ஸலனை பேராபத்து வருங்கால் அவன் திருநாமத்தைக் கூறி சரணடைவோமாக. எம்பெருமானை சுத்த உள்ளத்துடன் யார் சரண் புகுந்தாலும் தோஷங்களைப் பாராமல், சந்தேகம் கிளப்பாமல் எம்பெருமான் ஒப்புக்கொள்வான். சகல தோசங்களும் அந்த சரணாகதி முயற்சியில் வெந்து சாம்பலாகிப் போகும். உதாரணம் பிரகலாதன், விபீடணன், திரௌபதை, திரௌபதையின் மானத்தை சம்ரட்சணம் செய்தவன். பாஞ்சாலி யாரும் காப்பாற்றாத நிலையிலே முழு நம்பிக்கையோடு, கைகளை தலைமேல் தூக்கி லோகநாதா, கோவிந்தா, ஈசனே என்று கலங்கி கண்ணன் ஒருவனே துணை என்று சரணடைகிறாள். "காப்பாற்று கண்ணா" என்று அச்சுதன் பெயரைச் சொல்லி மயக்கமுறுகிறாள். இதனை வில்லி புத்தூர் ஆழ்வார்,

ஆறாகி இருதடங்கண் அஞ்சனவெம்புல் சோர அளகஞ்சோர
வேறானதுகில் தகைந்தகைசோர மெய்சோர வேறோர் சொல்லும்
கூறாமல் கோவிந்தா கோவிந்தா என்ற ரற்றிக் குளிர்ந்து நாவில்
ஊருத அமிழ் தூற உடல்புளகித்து உள்ளமெல்லாம் உருகினாள்.

திரௌபதையின் வஸ்திரங்கள் புதிது புதிதாக உண்டாகிக் கொண்டே வந்தன "நீயே கதி!" என சரணடைந்த பாஞ்சாலியின் மானங்காத்தான் கண்ணன். உலகினைப் படைத்து காத்து உயிர்கள் உய்வதற்கு மறைகளைத் தந்தருளி இராமனாகவும், கிருஷ்ணனாகவும் அவதாரம் எடுத்து மானிடர்களிடம் கலந்தவன். குவலயம் காத்தவன், கருணை பொழிந்தவன். நாராயணன் ஒருவனே. அவனை தூய உள்ளத்துடன் சரணடைந்தால், "பயப்படாதே, கவலைப்படாதே, எல்லாத் துன்பங்களிலிருந்தும் உன்னை விடுவிப்பேன்" என்று கூறிய நல்வழிப்படி காத்தருள்வான். பகவானின் கல்யாண குணங்களை இரண்டு இதிகாசங்களும் போற்றுகின்றன. தூய்மை இல்லாதவனும், தூய்மை உள்ளவனும், எந்நிலையிலிருப்பவனும், தாமரைக் கண்ணனை நினைத்தவுடன் உள்ளமும், புறமும் தூய்மை அடைகிறான். லட்சுமி பதியின் திருவடிகளை நினைக்கும்வேளை நல்லவேளை. நல்ல நாள், நினைத்தவுடனே நட்சத்திரபலனும், சந்திர பலமும், தெய்வ அருள் பலமும் கூடுகின்றன.

சகல புவனங்களையும் சிருஷ்

**மற்றவர்களின் வழிகள் நமக்குப் பாடமாக அமைய வேண்டும்**

டித்து, காத்து ரட்சித்தருளும் எம் பெருமான் ஸ்ரீமன் நாராயணன் திரேதாயுகத்தில், உலகை உய்வித்தல் பொருட்டு அறம் காத்த வள்ளல் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியாக அவதரித்தார்.

தெய்வத்தை மறந்து, உலக சௌக்கியங்களே உயர்ந்ததெனக் கருதி மாயையில் வீழ்ந்து கிடக்கும் நாம், மனித வாழ்க்கையை வீணாக்காது தெய்வீக நிலைக்கு உயர தாஸானு தாஸனான ஸ்ரீராமனின் கமல மலர்ப்பாதங்களை சரணடைந்தால் போதும், நம்முடைய துக்கங்களையெல்லாம் நீக்கி ஆனந்தத்தை அளிக்கும் ஸ்ரீராமனை, "காத்தருளும் கடவுளே! என்னால் இயன்றது எதுவுமில்லை, என்னைக் காத்தருள வேண்டியே உந்தன் திருவடிகளை நான் சரணடைகின்றேன்'' என்று உறுதியோடும், முழு நம்பிக்கையோடும் சரணடைந்தால்; அவன் அபயமளித்துக்காப்பான்.

"ஒரு காலே சரண்" என என்னை அடைகின்றார்க்கும், "உன் அடிமை" என்று ஒரு கால் சொன்னவர்க்கும், உயர் கதி அளித்துக் காக்கும் உத்தமர் ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி.

**உலகம் யாவையும் தாமுள வாக்கலும்**
**நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கலா**
**அலகு இலா விளையாட்டு உடையார் அவர்**
**தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே.**

என இறைவனை அடையச் சரணா கதியன்றி மற்றோர் உபாயமில்லை. சரணாகதி மந்திரத்தின் தத்துவத்தை விளக்க எடுத்த அவதாரம் "ராமாவதாரம்". மற்றைய அவதாரங்கள் தீமையை ஒழித்து, சீலங்களை நிலை நாட்ட எடுக்கப்பெற்றவை. இறைவனின் மென் மலர்ப் பாதங்களை நாயன்மார்களும், அருளாளர்களும் போற்றிப் பாடியுள்ளனர். எம்பெருமானுடைய திருவடிகளிலே மனதை நிறுத்தி அவனுக்கு ஆட்பட்டு மீளா ஆளாய் கொய் மலர்ச்சேவடிகளை அடையவேண்டும். அருணகிரிநாதர் கந்தப் பெருமானுடைய திருவடி தரும்பயன்களை கந்தர் அலங்காரப் பாடல்களிலே பாடியுள்ளார். கல்லாக இருந்த அகலிகை பெண்ணாக மாறியதை, "கல்லின்வடிவமான அகலிகை பெண்ணான கமலபத மாயன்" என ராமரின் திருவடித் தாமரைகளை அருணகிரிநாதர் பாடுகிறார்.

எம்பெருமானின் காலில் வீழ்ந்து சரணாகதி என்று மலர்ப்பாதத்தைப் பற்றிக்கொண்டால், எப்படிப்பட்டவனாக இருந்தாலும்சரி, அவனைத் தூக்கி நிறுத்தி காப்பாற்றி கரை சேர்ப்பது பகவானின் கடமையாகவுள்ளது. பகவானின் திருப்பாதங்கள் தாமரைபோல் மென்மையானது, அழகும், இனிமையும் குளிர்மையும் கொண்டது புனிதத் தன்மையானது. ரகு நாயகனின் பாதங்கள் பட்ட இடமெல்லாம் பட்டமரம் ஒன்று கொத்துக் கொத்தாக பூக்கள் பூத்துக் குலுங்குவதைப் போல் துளிர்விட்டுப் பிரகாசிக்கும். காலமாகிய வெள்ளத்தில் எதிர் நீச்சல் அடிக்க முடியாமல், சம்சார சாகரத்தில் மூழ்கித் தத்தளிக்கும் நமக்கு அந்த ஸ்ரீராமனின் பாத தாமரைகள் தான் பிறவியை அறுத்து முத்தியை அளிக்கும் அருமருந்தாகும். குரங்குகள் போன்று அலையும் மனக்குரங்கை சரண கமலங்களுள் லயப்படுத்தி தியானிக்க துன்பங்களெல்லாம் நீங்கிப் பேரின்பம்

பெறலாம். பற்றற்றவன் மேல் பற்று வைக்கவும், எமது பற்றை அறுக்கவும் எம்பெருமான் மலரடிகளை வழிபட அவன் அருள் செய்யவேண்டும். சரண டைந்தவர்க்கெல்லாம் அபயமளித்துக் காத்த ராம பிரம்மத்திடம் நெஞ்சக்கன கல்லு நெகிழ்ந் துருகி துதித்துப் பிறவி நோய் நீங்குவோமாக. ஸ்ரீ ராமன் திரு வடிகளில் பிரேமை உண்டாவது எல்லா மங்களங்களுக்கும் மூலதனம். ரகு நாய கன் மிகவும் கிருபையுள்ளவர். சரண டைந்தவர்களின் பயத்தைப் போக்குபவர். எவ்வளவு கோடி பாவம் செய்திருந் தாலும் ராமனிடம் சரணடைந்தவுடனே அவர்களின் பாவங்கள் அழிந்துபோகும். ஸ்ரீராமன் மீது பக்தி கொண்டு அவன் பாதங்களில் சரணாகதி செய்தாலே போதும், சர்வ வல்லமைபெற்ற அந்தப் பாதங்கள் நமக்குச் சகல நன்மைகளை யும் அள்ளிக் கொடுத்து விடும். ராகவனின் பாதமும் சரி, நாமமும் சரி நம்மை நல்ல பதவிக்கு இட்டுச் செல்லும்.

**"மும்மைசால் உலகுக் கெல்லாம் மூலமந்திரத்தை முற்றும்**
**தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத் தாமே**
**இம்மையே எழுமை நோய்க்கும் மருந்துமாம் இராமன் என்றும்**
**செம்மை சேர் நாமம் தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்"**

ஸ்ரீ ராமன் தன்னிடம் சரணம் அடைந்த எல்லார்க்கும் அவர்கள் குற்றங் களை மன்னித்து அடைக்கலம் அளித் தார். சரணடைந்த தேவர்களையும், ரிஷி களையும் காத்தார். யாகம் காக்க விசு வாமித்திரர் சரணடைந்தார். குகன் சரணடைந்தான். சுக்கிரீவன், விபீஷணன் இப்படிச் சரணடைந்தவர்களையெல்லாம் ஆட்கொண்டு அபயமளித்தாய் ராமா!. ஜனகவல்லித் தாயாருக்கு ஊறு விளை வித்த காகாசுரனும் கூட உன்னிடம் சரண டைந்து அபயம் பெற்றானே! ராமா! எமைக் காப்பதற்காகவே கோதண்டம் ஏந்தி நிற்கிறாய். ஸ்ரீ ராமா! நின் திருவடிகளே சரணம்! சரணம்! கௌசல்யாஸுப்ரஜா ராமனே! எல்லோர்க்கும் ஆனந்தம் அருள் வாயாக! கலியுகக் கருணைத் தெய் வமே! எங்கள் ஆனந்தராமா! காலங்களைக் கடந்த காவல் நாயகா! இருளையும், பகலையும் கடந்த ஏக ஜோதியே!

திருமகள் உறையும் உன் கருணா இதயவாசலின் திருக்கதவங்கள் ஏழையராம் எங்கள் அடைக்கலத்திற் காகத் திறந்திருக்கட்டுமே! உன் தேனே மலரும் கமலத் திருப்பாதங்கள் எங்க ளுக்கு காவல் ஆகட்டுமே! உன் பொன் னடிகள் எங்கள் அவல அச்சங்களைத் தீர்க்கட்டுமே! உன் கோதண்டம் எங்கள் தீவினைகளை அறுத்தெறியட்டுமே! உன் புன்னகைச் சாரலில் நாங்கள் இளைப் பாற உன் கருணைக் கண்கள் அருள் புரியட்டுமே! பயங்களைப் போக்கி ஜெயங் களை அருளும் பாதங்களே கதி! அருள் மணங்கமழும், அன்பின் இலக்கணம், தனிப் பெருங்காப்பியம் இராமாயணத்தின் காவிய நாயகனே நின் சேவடிக்கு அடைக் கலம்.

சத்திய குணாதிபனே வித்தக ராமனே உன் பூவடிக்கு அடைக்கலம். பக்தர்க்கருளும் பரமதயாளனே உன் பாத கமலங்களுக்கு அடைக்கலம். தாரக மந் திர ரூபனே தசரத நந்தனனே நின்பொன் னடிக்கு அடைக்கலம். கருணையின் வடிவே கார் முகில் வண்ணனே உன் திருவடிக்கு

**பணம் சேர்க்க வேண்டும் என்ற பேராசையை எந்தப் பணமும் திருப்தி செய்வதில்லை**

அடைக்கலம். கோசலை பாலனே மைதிலி நாதனே நின் செந்தாமரைச் சேவடிக்கு அடைக்கலம். முத்தி அருளும் முதல்வனே உன் பொற்பாத தாமரைக்கு அடைக் கலம்.

அநுதினம் நான் போற்றும் ஆனந்தமே அடைக்கலம் என்போர்க்கு அபயம் தரும் சீதா ராமனே ராமப்பரப்பிரம்மமே அடைக்கலம்! அடைக்கலம்!

அருமறைகள் போற்றும் திருவடியே, அகிலத்தில் இல்லை அதற்கினையே. சீதாராமனே! அனைவர்க்கும் முழுமையான அருளைப் பொழிவாயாக.

*ஸ்ரீராமச்சந்திரனுக்கு ஜெய மங்களம்*
*நல்ல திவ்விய முகச் சுந்தரனுக்கு சுப மங்களம்*
*(ஸ்ரீராமச்சந்திரனுக்கு)*

*மாராபி ராமனுக்கு மன்னு பரந்தாமனுக்கு*
*ஈராறு நாமனுக்கு ரவிகுல சோமனுக்கு*
*(ஸ்ரீராமச் சந்திரனுக்கு)*

*கொண்டல் மணி வண்ணனுக்கு கண்ணனுக்கு மங்களம்*
*கௌசலை குமாரனுக்கு வீரனுக்கு மங்களம்*
*புண்டரீகத் தாளனுக்கு பூச் சக்கரத் தாளனுக்கு*
*தண் துளவத் தோளனுக்கு ஜானகி மணாளனுக்கு*
*(ஸ்ரீராமச்சந்திரனுக்கு)*

*கோவை மணி வாயனுக்கு மாயனுக்கு மங்களம்*
*கோதண்டக் கையனுக்கு மெய்யனுக்கு மங்களம்*
*தாவு குணசீலனுக்கு சத்திய விலாசனுக்கு*
*தேவர் அனு கூலனுக்கு தசரதன் பாலனுக்கு*
*(ஸ்ரீராமச்சந்திரனுக்கு)*

*பகிரண்ட நாதனுக்கு வேதனுக்கு மங்களம்*
*பரதனும் அன்பனுக்கு முன்பனுக்கு மங்களம்*
*சகல உல்லாசனுக்கு தருமந்தகாசனுக்கு*
*அகில விலாசனுக்கு அயோத்தியா வாசனுக்கு*
*(ஸ்ரீராமச்சந்திரனுக்கு)*

முற்றும்.

உ

சிவத்தமிழ்ச் செல்வியின் நினைவலைகள்

# அன்னையிடம் நாம் கற்கவேண்டியவை

- கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் -

ஆன்மீக வரலாற்றில், தற்போதைய நாகரீக சமூகம், நேரடியாகப் பார்த்து அனுபவித்த பேற்றிற்கு உரியவர் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி, செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி அம்மையார் அவர்கள். அவர் காட்டிய ஆன் மீகப் பாதை மிகவும் தூய்மையானது. நேர்த்தி யானது. நீளமானதும், அகலமானதும், சமச்சீரானது மாகும். அந்தப்பாதையில் நாமும் பயணிக்க வேண் டியவர்களாக இருப்பது காலத்தின் விண்ணப்ப மாகும். இந்நிலையில் அன்னையிடமிருந்து நாம் கற்கவேண்டியவை பலவாகும். அவற்றை இங்கு நோக்குவோமாக.



- தன்னைத் தானுணர்தல். என்னை நானுணர் தல். உன்னை நீ உணர்தல்.
- இறையருளே இவ்வுலகில் பேரின்பம் பயப்பதால், அதைப்பெறுவதற்கான பிரார்த்தனையைத் தினமும் ஒழுங்காக ஆற்றுதல்.
- ஆடம்பரமற்ற அடக்கமான, எளிமையான வழிபாடு கொண்டிருத்தல்.
- தமிழைத் தெளிவாக, அழகாக, அளவாக, அளவோடு தாற்பரியமாகப் பேசுதல்.
- தமிழை அழகாக எழுத்துப்பிழையின்றி எழுதுதல்.
- தன்னலமற்ற பணி ஆற்றுதலை, ஒவ்வொரு செயற்பாட்டிலும் உறுதிப்படுத்துதல்.
- தன்னை நன்றாகப்படைத்த இறைவனுக்கும், தான் சார்ந்த சமூகத்திற்கும் நன்றியுடையவராக இருத்தல்.
- அனுப்பப்படும் கடிதங்கள், பணங்களுக்குக் கிடைத்த அன்றைய தினமே பதில் அனுப்புதல்.
- எடுத்துக்கொள்ளப்பட்ட ஒருவேலையை செவ்வனவே நிறைவேற்றுதல்.
- சிவத்தமிழை இடையறாது கற்றுணர்ந்தவண்ணம் இருத்தல்.
- பாத்திரமறிந்து பிச்சைகொடுத்தலும், அறநினைவுகளோடு வாழ்தலும்.
- அடுத்த சந்ததிக்காய் ஆவணப்படுத்தல்.
- உலகம் சாந்திபெற ஆராதித்தல்.
- அவப்பொழுதினை ஏற்காது தவப்பொழுதாக்குதல்., போன்ற இன்னோரன்ன நற்பண்புகளை நாமும் கற்று, உணர்ந்து, அதன்வழி சென்று வாழ்வில் உய்வோமாக.

உ

# வேலை வணங்குவது எமக்கு வேலை


**"செஞ்சொல் வாணர்" இரா. செல்வவடிவேல் அவர்கள்**

மனிதராய்ப் பிறந்த நாம் எவற்றைப் பெற்றிருக்கின்றோம்; எவற்றைப் பெற்றிருக்க வில்லை என்பதை அறிந்து கொள்வது அவசியமாகும். பழநியில் எழுந்தருள் முரு கனைப் போற்றிப் புகழும் அருணகிரிநாதர்.

*மூலமந்திரம் ஓதல் இங்கிலை*
*ஈவதிங்கிலை நேயம் இங்கிலை*
*மோனம் இங்கிலை ஞானம் இங்கிலை*

என்று உரைக்கிறார். அவரே உள்ள வற்றையும் எடுத்துக்காட்டுகின்றார்.

*மோக முண்டுஅதி தாப முண்டுஅப*
*சார முண்டுஅப ராத முண்டிடு*
*மூக னென்றொரு பேருமுண்டு*



இவ்வடிகள் நமக்கு என்ன போதிக்கின்றது? நாம், நம்மிடத்தில் உள்ளவற்றையும் இல்லாதவற்றையும் எண்ணிப்பார்க்க வேண்டும் என்பதை நன்றாக ஞாபகப்படுத்துகின்றது. எக்காலத்தும் எந்நாளிலும் எப்பொழுதிலும் இச்சிந்தனை நமக்கு மிக வேண்டும். நும்பால் இருப்பவை நம்மிடத்தில் இருக்க வேண்டுமா? அன்றிப் போக வேண்டுமா? போகவேண்டும் எனில் எதன் துணை கொண்டு போக்கு தல் வேண்டும்? சற்றுச் சிந்திப்போம்!.

நம்மிடம் உள்ளவற்றில் போக்க வேண்டியவை பல உண்டு. அவை அனைத்தையும் எடுக்காது ஒன்றை மட்டும் கவனத்திற்கு எடுப்போம். அது என்ன? அதுவே பகையாம். நம்மிடத்தில் உள்ள பகை, உட்பகை வெளிப்பகை என இருவகைப்படும். வெளிப்பகையையும் இருவகையாகப் பகுக்கலாம். பகைவர் என்றறிய வெளிப்படையாக நடந்து கொள்பவர் ஒருசாரார். ஆனால் நண்பனைப் போன்று நகை முகங்காட்டி இன்சொற்கூறி நெஞ்சகத்திலே கொஞ்சமும் நல்லெண்ணமின்றிப் பகையெண்ணமே மிகுதி யாகக்கொண்ட மற்றொருசாரார். முன்னவரிலும் பின்னவரோ நண்பரைப் போல் நடித்து தகுந்த நேரம் பார்த்து தீமை விளைவிக்க முற்படுவர். இவ்விரு வெளிப்பகையையும் விட, நம் உள்ளிருக்கும் பகையே மிகக் கொடியதாகும். இவ் உட்பகைவனே நமக்கும் துன்பம் இழைக்கின்றான். இவ்வுலகத்தில் வாழும் யாரும் எனக்கு துன்பமே இல்லை என்று சொல்ல முடியுமா? துன்பம் உண்டென்பானேயன்றி இல்லை என மாட்டான்.

அத்துன்பம் தோன்றுவதற்குக் காரணம் யார் என்று சிந்திப்பின், அத்துன்பத்திற்குத் தலைவன்நம்பாலே உளன் என்று முடிவுக்கு வருவோம். அவன் யார்? தமிழில் அறியாமை என்றும் வடமொழியில் அஞ்ஞானம் என்றும் அவன் சொல்லப்படுவான். அவன் நம்முள் இருக்கின்றான். நம்முள் எனும் பொழுது உடம்பைக் குறிப்பதல்ல! உடம்பானது நமக்கு ஒரு நண்பனைப் போன்றது. ஆனால் நம்மோடு தொடர்புடைய தன்று. இவ்வுடம்பு நமக்கு பெருந்தீமைகளைச் செய்யாது உடம்பு நீண்ட நெடுங்காலம் வாழ்வதில்லை. ஆகவே உடம்பாலாகும் துன்பம் நீண்ட காலம் இருக்கப் போவது இல்லை. ஆண்டுக்கணக்கில் அடங்காத நீண்ட நெடும் பகைவன் அறியாமைதான். இவ் அறியாமை நம்மை எப்போது அடைந்தான்? இவன் நம்முடன் இடைக்காலத்து வந்து சேர்ந்தவனல்லன். நம்முடன் பழகி நமக்கு எப்போதும் துன்பத்தையே விளை வித்து தன்னையும் அறிவிக்காது, மற்றொருவரால் நமக்குத் துன்பம் வருவதாக நம்மை நம்பவைத்துக் கொண்டிருக்கும் இயல்பினை உடையது. நெல்லுக்குத் தவிடும், உமியும் முளைக்கும் சக்தியும் எக்காலத்து உண்டாகியது? நெல் என்று தோன்றியதோ, அன்றே இத்தன்மை உண்டாகிவிட்டது. அவ்வாறே உயிர் என்றோ அன்றே அஞ்ஞானமும் தோன்றியது. பலமுறை உரலில் இட்டுக் குத்தினால் தவிடு, உமி, முளைக்கும் சக்தி ஆகியவை விலகும். அவ்வாறே உயிருடன் கலந்து நிற்கும் அறியாமையையும் நீக்க முடியும். அதற்கு என்ன செய்தல் வேண்டும்?.

நமக்கு கண்கள் இருக்கின்றன. அவை இருள், ஒளி இவ்விரண்டுடனும் பழகுகின்றன. பகலில் ஒளியைக் கண்டு பழகும் கண்கள், இரவில் இருளுடனும் இறையும். அது நீங்கி ஒளியுடனும் பழகும் இயல்பு அதற்குண்டு. அவ்வாறே உயிர் ஞானமாகிய ஒளியுடனும் பழகும் அறியாமையாகிய இருளுடனும் பழகும். உயிருக்கு அறியாமைத் தொடர்பால் அளவிறந்த துன்பமுண்டு, ஏன்? இருள் தன்னைக் காட்டும் மக்களே நான் வருகிறேன். மேடுபள்ளங்களை உங்களுக்கு காண்பிக்கமாட்டேன். எப்பொருளையும் நீங்கள் காண இயலாது என்று கூறுவது போல் தன் வருகையை நமக்கறிவிக்கிறது. நம்முடன் வாழும் அஞ்ஞானமோ தன்னைத் தெரிவிக்காது. ஆகவே, இவ்வறியாமை மிகக் கொடிய ஒன்றாகும்.

இவ்வாறு நம்மை மூடிக்கிடக்கும் சடமாயை என்னும் அஞ்ஞானம் அகல வேண்டும். இதனை ஒழிக்கக் கூடியது கடவுள் ஞானமே அந்த ஞானம்வரின் நம் கண்கள் விழிப்படையும் அக்காலத்தில், உலகம், நாம், கடவுள் எனும் முப்பொருளை யும் காணலாம்.

நம் பகைவனாக உள்ளிருப்பவனை வெல்லுதலே நாம் செய்ய வேண்டிய தாகும். எதுகொண்டு வெல்லலாம்? படையால், நாம் கைக்கொள்ளும் படை நம்மைத் துன்புறுத்தாதிருக்க வேண்டும். வீரன் கை ஆயுதம் வெளிப்பகையை, எதிரியை அழிக்கப் பயன்படும். நம் பகை அஞ்ஞானம். இவ்வஞ்ஞானத்தை அழிக்கும் படை எது? வெல்லும் ஆயுதம் எது? தமிழில் பொதுவாக வெல்லுதலைச் செய்வது **வேல்** என்பர். வேல் என்பது வினைப்பகுதி. தொழிலை உணர்த்தும் பெயராகிய தொழிற் பெயர் வகையில் முதனிலை நீண்டு 'வேல்' என்றாயிற்று. இதனை முதநிலை நீண்ட தொழிற் பெயர் என்பர். வெல்லுகின்றது எதுவோ அது **வேல்** ஆகும்.

**பரந்த மனப்பான்மை உள்ளவர்களுக்கு உலகம் முழுவதுமே அவர்களது குடும்பம்தான்**

பொதுப்பெயர், சிறப்புப் பெயர், சிறப்பில் சிறப்பு எனப் பெயர்ச் சொற்கள் மூவகைப்படும். வேல் என்பது பொதுப் பெயர். எமன் கையில் பகைவரை வெல்லும் படையாக அமைந்த சூலம் சிறப்புப் பெயர். சிவன் கையிலும் வேல் உண்டு. சிவன் கையில் உள்ள வேல் பொதுப்படை ஏன்? வேல் மட்டுமன்றி பரசு, மான்மழு முதலிய பல அவனிடம் உள்ளன. துடைத்தற் கருத்தா என்பதை மட்டும் காட்டுவதற்கு இவை அமைந்துள்ளன. சிவபெருமான் கையில், படைகள் இருக்கின்றனவேயொழிய, அவை எப்போதும் உபயோகப்படுத்தப்படவில்லை. சிவபெருமான் முருகனை வழிபட்டு நின்ற நெறியை,

**"நாதா குமரா நமவென் றரனார்**
**ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்"** என்பார் அருணகிரிநாதர்.

சில தகப்பன்மார், தம்மக்கள் நடத்தை ஒழுங்காக இல்லையெனக் கருதுகையில், **"அப்பா உனக்கொரு வணக்கம்"** என்பர். அவ்வாறோ நம் இறைவன் முருகனை நோக்கி **"நாதா குமரா நம"** என்றனர்; இல்லை அடுத்துள்ள 'ஓதாய்' என்ற வினையைக் கவனிக்க. ஓதுதல் என்பது அன்பால் கூறுதல். **"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்"** எனுமிடத்து ஓதுதல் என்ற வினைத்திண்மையைக் காண்க.

'குமராயநம' என்று விளிக்கின்றான் இறைவன். கு=அஞ்ஞானத்தை; மராய=அழிப்பவனுக்கு; நம=நமஸ்காரம். மெஞ்ஞானமே தனதுருவமாகத் திகழும் சிவபெருமான், அஞ்ஞானத்தை நீக்குபவனே உன்னை வணங்குகின்றேன்; எனத் தன்பால் உள்ள அஞ்ஞானத்தை ஒழிக்க வேண்டுவான் போல் வேண்டியதேன்? குழவி நோயுற்றால் மருந்தை தாய் உண்பது போன்று உயிர்களின் அஞ்ஞான அறியாமைப் பாட்டை ஒழிப்பதற்கும், உயிர்கள் முருகப்பெருமான் அடிகளை வணங்கி உய்தல் வேண்டும் என்று அறிவுறுத்துவதற்குத் தாமே நடந்து காட்டுகின்றான் என்க. எனவே சிவன் கையில் உள்ள வேலினும் இறைக்இறையாகிய முருகன் கையிலுள்ள வேல், சிறப்பில் சிறப்பாயுதம் ஆகும்.

அஞ்ஞானப்பகையை வெல்ல வேலினும் ஒன்றில்லை. வேலும் ஞானமும் பெயரால் வேறுபடலாமேயொழிய பொருளால் ஒன்றே. வடமொழியில் ஞானம் என்பதே தமிழில் வேல் என்பதாகும். முருகன் கைவேலினை 'ஞானவேல்' என்பது இதன் அடிப்படையேயாகும். ஒருவரால், ஒருகாலத்தில் ஒன்றினுதவியால் செய்யப்பட்டதன்று வேல். முருகன் கைவேல் **'தனிவேல்'**; இவ்வேல் தனிச்சிறப்புடையது. தனித்த இலக்கணமுடையது. மற்றையவற்றைப் போல் உடம்பை அழிக்காமல், உயிருள் கலந்து உயிரையும் மயக்கும் பெரும் பகையாகிய அஞ்ஞானத்தை அழிக்கும். ஆதலால் இதனைத் **'தனி'** என்ற அடை கொடுத்து வழங்குவர்.

* ***முருகன் தனிவேல் முனிநங் குருவென்***
***றருள் கொண் டறியார் அறியும் தரமோ***

* *சாடும் தனிவேல் முருகன் சரணம்*
*சூடும் படிதந் ததுசொல் லுமதோ*

இவ்வடிகளைக் காண்க. இது ஞான ஆயுதம் என்க. பிற எல்லாவற்றிலும் முருகன் கை வேல் உயர்ந்தது.

**நாம் வீணே கழிக்கும் ஒவ்வொரு வினாடியும்தான் நம் வாழ்வில் கிடைக்க முடியாத பெரும் செல்வங்கள்**

ஞானம் ஒவ்வொருவருக்கும் மிக வேண்டியதொன்றாகும். இல்லையேல் ஆணவ இருட் குழம்பில் துன்பமே படல் வேண்டும். திருநாவுக்கரசர்.

*"ஞானம் காட்டுவார் நன்னெறி காட்டுவார்*
*தானம் காட்டுவார் தம்மடைந்தோர்க்கெலாம்"* என்றார்.

ஞானவருகையும் அஞ்ஞான ஒழிவும் ஒரே காலத்தில் நடக்கின்றன. இருள் ஒழிந்தது எப்போது? ஒளி வந்தது எப்போது? இவ்வினாக்களுக்கு விடை கூறுவதும் ஞானவருகை அஞ்ஞான நீக்கம் என்பவற்றை விளக்கிக் கூறுவதும் ஒன்றாகும்.

- அஞ்ஞானத்தால்
*உறுவதுதான் பந்தம்உயர் மெய்ஞ்ஞா னத்தால்*
*ஆனந்தா லதுபோவது அலர்கதிர்முன் னிருள் போல்*
*அஞ்ஞான மறப்பந்தம் அறும்முத்தியாகும்*
*ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம்*
*இறைவனடி ஞானமே ஞானம் என்பர்*

- சிவஞானசித்தியார்

தெய்வமே வேல். வேல் வேறு, தெய்வம் வேறு என்று எண்ணாதீர்கள். வேலினை ஏற்றும் ஏந்தலாகிய முருகனை பூசிக்கலாமா? வேலினைப் பூசிக்கலாமா? என்ற வினாக்கள் எழுகின்றன. வேலின் பெருமையை அறியாததனால் இத்தகைய வினாக்கள் எழுகின்றன.

ஞானம் வேண்டுமா என்றால் வேண்டாம் என்று எவர் மறுப்பர்? ஆணுக்கும் பெண்ணுக்கும் மிகுதியும் வேண்டியதே. பணம் இரும்புப் பெட்டியில் இருப்பதிலும் கையிலிருத்தல் நல்லதென்று சாதாரண அறிவுடையவனும் கருதுகின்றான் அல்லவா? அவ்வாறே வேல் கோயிலில், வீட்டில், பூசை அறையில் இருப்பதிலும் உடம்பிலிருத்தல் உயர்ந்தது. இதனடிப்படையிலேயே நம் மூதாதையர் உடலில் வேலினைப் பச்சை குத்தினர், என்றால் அவர்களின் அறிவுக்கூர்மையை என்னென்பது.

பணம் தானடைந்த இடத்திற்கேற்ப பகை, துன்பம் முதலியவற்றை உண்டாக்கு கின்றது. **"அற்பரா னவர்க்குச்செல்வ மல்லது பகைவே றுண்டோ"** என்பது பரஞ்சோதி யார் திருவிளையாடல். குழந்தையின் கையில் கூரிய கத்தி தரப்படுமாயின் அது தன்னையும் துன்புறுத்திக் கொண்டு தன்னையொத்த பிற குழந்தைகட்கும் ஊறு உண்டாகும். அவ்வாறே பணம் பல்வகை இன்னலை விளைத்து நிற்கும். இன்பமே தந்து துன்பத்தை என்றுந் தாராத ஞானச் செல்வமாகிய வேல் கையில் இருந்தால் பேரின்பத்தை விளைக்குமென்பது சொல்லாமலே அமைகின்றது.

அண்மைக் காலங்களில் அடியேனுக்குக் கிடைத்து வரும் சில அனுபவங் களில் ஒன்றினைக் கூற விரும்புகின்றேன். நமது பெரியோர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவ லர், தனிநாயகம் அடிகளார், சுவாமி விவேகானந்தர், இராமகிருஷ்ணர், சாரதாதேவி அம்மையார், ரமண மகரிஷி, யோகர் சுவாமிகள் போன்றவர்களின் புகைப்படங்களை சில இடங்களில் காண்கின்றோம். இப்படங்களை இது இன்னாருடைய திருவுருவப்படம் என இனங்காண முடியாத பலர் இருப்பதை அறிந்தேன். வேதனைப்பட்டேன். கற்றவர் களுக்கே இந்நிலை என்றால், இளம் சமூகத்தின் நிலைப்பாட்டில் குறைகாண்பது எங்ஙனம்? வேலுடன் விளங்கும் வேந்தனைக் கண்ட அவர், வேலைக் கண்டதனாலேயே

**உண்மையான செல்வாக்கை நாம் தேடிச் செல்லக் கூடாது. அது நம்மைத் தொடர்ந்து வரவேண்டும்**

முருகன் என்று தெளிவுற அறியவில்லையேல், அவருக்கு சமய அறிவு எங்கே இருக்கிறது? தொப்பையைக் கண்டவுடன் விநாயகரென்றறிதல் அவசியமல்லவா? சூலபாணி என்பது சிவபெருமான் பெயர்களுள் ஒன்று. ஆனால் அவன் சூலமின்றியும் இருப்பான். வேலில்லா முருகனில்லை. இளமைக்கால உருவமாயின் இல்லாதிருத்தலில் குற்றமில்லை.

ஞானமயமே வேல் என்பதற்குப் பல சரித்திரச் சான்றுகள் உண்டு. சிவன் முருகனை நோக்கி சூரனை அழிக்கும்படி சொல்கின்றார். சொல்லும் போது சூரனை அழிப்பதற்குக் காரணமும் உடன் கூறுகின்றார்.

*பாரினை அலைத்துப் பல்லுயிர் தமக்கும்*
*பருவரல் செய்துபண் ணவர்தம்*
*ஊரினை முருக்கித் தீமையே இயற்றி*
*உலப்புறா வன்மைகொண் டுற்ற*
*சூரனை அவுணர் குழுவொடும் தடிந்து*
*சுருதியின் நெறிநி றீஇ மகவான்*
*பேரர சளித்துச் சுரர்துயர்அகற்றிப்*
*பெயர் தியென் றனன்எந்தை பெருமான்.*

உலகத்தைத் துன்புறுத்தலும், உயிர்களுக்குக் கேடு சூழ்தலும், நல்லார்க்குக் கெடு தலைச் செய்தலும், தீய காரியங்கள் புரிதலும் ஆணவத்தின் செய்கைகள்; அஞ்ஞானத் தால் நிகழ்வனவும் இவையே. இவற்றைக்கூறி இவற்றைப் போக்குவதற்கு வேலினைக் கையில் வழங்கினான் என்றால், அசுரனையேயன்றி மாயா காரியங்களையும் அழிக்கும் ஆற்றலுடையது அது என்பது வெளிப்படுகின்றது.

*மேலும் இறைவன் கூறுகின்றான்*

*ஆயதன் பின்ன ரேவின் மூ தண்டத்*
*தைம் பெரும் பூதமும் அடுவது*
*ஏயபல் லுயிரும் ஒருதலை முடிப்பது*
*ஏவர்மேல் விடுகினும் மவர்தம்*
*மாறிருந் திறலும் வரங்களும் சிந்தி*
*மன்னுயி ருண்பதெப் படைக்கும்*
*நாயக மாவ தொருதனிச் சுடர்வேல்*
*நல்கியே மதலைக் கொடுத்தான்*

இங்கு காண வேண்டியது எப்படைக்கும் நாயகமாவது ஒரு தனிச்சுடர் வேல் என்பது. நாயகம் எனும் சொல் பெயரளவில் நில்லாது சக்தி உருவனாகிய கடவுள் கூறுகின் றான். முருகனுக்கு வேல் யார் கொடுத்தது? சிவபெருமான். உலகவழக்கத்தில் அம்பிகை கையிலிருந்து வேலை வழங்குவது மரபாயிருக்கின்றது.

*"உடம்பிடித் தெய்வம் இவ்வாறு உருகெழு செலவின் ரகி*
*மடம்பிடித் திட்ட வெஞ்சூர் மாமுதல் தடிந்த தன்றே"*

இங்கு "உடம்பிடி" என்பது வேலுக்குத் தமிழ்ப்பெயர். இதனைத் தெய்வம் எனக்குறிப்பிடு வதைக் காணலாம். இதனைத் தெய்வம் என்று கண்ட சிறப்பினாலே, ஊருள் வாழ் வோர் ஊர் வெளியே வேலினை நட்டு வணங்கினர். "வேற்கோட்ட" மெனத்தனியே வேலுக்குக் கோயில் வைத்துப் பூசிக்கும் சிறப்பும் உண்டு.

**இலங்கு மமரர் கலங்காமல் எழில்வா னுலகம் குடியேறத்**
**தகைமைச் சுடர்நெட் டிலைவேல் தடக்கை எடுத்தோய் தாலேலோ.**

இது பேரூர் சிதம்பரசுவாமிகள் இயற்றியருளிய திருப்பேரூர்ச் சந்நிதி முறைப் பிள்ளைத் தமிழில் காணப்படும் செய்யுள் ஒன்றின் சில வரிகள் ஆகும். அமரர் கலக் கத்தை அறவே ஒழித்து அவர்களுக்குரிய ஊரினை அவருக்குக் கொடுக்குஞ் சிறப் பினைப்பெற்றது. வேல் என்றால், எளிய நம்போன்றவர் அல்லலை அழித்துக் கல கத்தை நீங்குமென்பதும் சொல்ல வேண்டுமா?

காத்தற்கடவுளாகிய திருமாலும், போகவுருவினனாகிய இந்திரனும் பெருமானது உறுதுணையில் இன்பத்தை எய்தினர். மக்களாகிய நமக்குமட்டும் அவ்வின்பம் கிட்டாமல் போகுமா?

இழிந்த பேய்க்கூட்டத்தின் பசியையும் போக்கிய உயர்வு வேலுக்குண்டல் லவா. ஆதலினால் வழிபடும் மக்கள் பசிதானே அகலுமல்லவா இதனால்த் தானோ? சந்நிதி வேலனை வணங்கியவுடன் சந்நிதியான் ஆச்சிரமம் பசி போக்கியனுப்புகின்றது.

தனிவழி நடக்கும் அன்பர்களுக்கு வலம், இடம், முன்னும், பின்னும் எங்குமாகி இரவு பகலில் துணையாக வேல் விளங்கும்.

உலக வாழ்வைக் காட்டிலும் இறுதியில் நேரும் இயமன் தொந்தரவையே பெரிதென எண்ணுவோரும் உண்டு அத்துன்பத்தை அறவே அகற்றும் பெருமை வேலுக்கு உண்டு. எமன் வருங்காலத்தில் இறைவன் திருவடியாகவே வேல் மாறும். திருவடி **"யான் எனது என்று அற்ற இடமே திருவடியா"** என்றனர் குமரகுருபரர். ஆகவே, ஞானமே உருவாகிய வேல், அகங்கார மமகாரமற்ற இடமாகிய ஞானமெனும் திருவடியாக மாறும் என்பதில் வியப்பொன்றுமில்லை.

வேலைப்பற்றி எழுத எழுத ஊறுகிறது. அது ஒரு கடல் போன்றது. முரு கனுக்கு வேலால் ஒரு தனி உயர்வு உண்டு.
**"சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி"** எனக் கச்சியப்பர் வேலுக்கு இருபோற்றியைக் கூறியது எண்ணத்தக்கது.

***அந்திப் போது அழகுறவே நடித்தருளும்***
***வழித்துனைவர் அருளும் கோவை***
***வந்திப் போர் நினைத்தபடி மயில்ஏறி***
***அயிலெடுத்து வரும்செவ் வேளைச்***
***சிந்திப்போம் புகழ்ந்திடுவோம் மலரணிவோம்***
***அவர்கமலத் தாளும் தோளும்***
***சிந்திப்போம் ஆதலினால் நம்மபழ***
***வினைக ளெல்லாம் சிந்திப்போமே.***

எனும் திருவிரிஞ்சைப் புராணப் பாடல் தந்த சிந்தனை அடியேனை இக்கட் டுரையை எழுதத் தூண்டியது.

**ஓகையாற் றிரைமுன் னாளில் உழக்குமா வினையும் வாட்டும்**
**ஏக வெவ் வரையின் எல்லை பிடித்திடும் இமையோர் போற்றத்**
**தோகை மேல் உலவும் கந்தன் சுடர்க்கரத் திருக்கும் வெற்றி**
**வாகையே சுமக்கும் வேலை வணங்குவ தெமக்கு வேலை**

**புத்திசாலிகள் எதுவுமே உபயோகமில்லாததாக நினைப்பதில்லை**



உ

(தொடர்ச்சி...

# ஒளவையார் அருளிச் செய்த

# கொன்றைவேந்தன்

## மூலமும் உரையும்

74. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
ப-ரை. ஒரு முகூர்த்த காலத்தின் முன் பங்கிலே பிறனுக்கு தீங்கு செய்தால் அதன் பின் பங்கிலே செய்தவனுக்கு அத்தீங்கு தானே உண்டாகும்.

75. மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்
ப-ரை. கல்வி அறிவினாலே முதிர்ந்தவர் சொல்லிய வார்த்தையானது தேவாமிர்தத்தைப் போலும்

76. மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு
ப-ரை. பஞ்சணையில் படுத்தல் ஆனது ஒருவன் செய்கின்ற நித்திரைக்கு அழகு ஆகும்.

77. மேழிச் செல்வம் கோழை படாது
ப-ரை. கலப்பை பிடித்து உழுது பயிர் செய்தலால் உண்டாகின்ற செல்வமானது ஒருபோதும் குறைவை அடையாது.

78. மை விழியார்தம் மனை அகன்று ஒழுகு
ப-ரை. மை தீட்டிய கண்ணுடைய வேசிகளுடைய வீடுகளை நீ அணுகாமலே விலகிப் போ.

79. மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
ப-ரை. கற்றோர் சொல்லுகின்ற உபாயத்தைக் கேளாமற் செய்தால் ஒருவன் செய்யும் தொழில் கெடுவதாகும்.

80. மோனம் என்பது ஞான வரம்பு
ப-ரை. மௌனநிலை என்பது மெய்ஞ்ஞானத்திற்கு எல்லையாகும்.

81. வளவன் ஆயினும் அளவறிந்து அழித்து உண்
ப-ரை. சோழனுக்கு ஒப்பானவனாய் இருந்தாயானாலும் பொருள் வரவின் அளவைத் தெரிந்து செலவழித்து நீ அனுபவி.

82. வானம் சுருங்கில் தானம் சுருங்கும்
ப-ரை. மழையானது பெய்தல் குறையுமாயின் கொடையும் குறைவுபடும்.

83. விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம்
ப-ரை. விருந்தினரை உபசரித்தல் இல்லாதவருக்கு தாம் பொருந்திய இல்லறம் இருந்ததாயினும் இல்லாததற்குச் சமனாகும்.

முரண்பாடுகள் இல்லாமல் வாழ்க்கை இல்லை. அவை இல்லாமல் முன்னேற்றமில்லை

**84. வீரன் கேண்மை கூர் அம்பாகும்**

ப-ரை. வீரனுடைய சினேகம் ஒருவனுக்கு இருந்தால் அவனுக்கு அதுவே தன்பகையை வெல்லுவதற்கு கூர்மை பொருந்திய அம்பு ஆகும்.

**85. உரவோர் என்கை இரவாது இருத்தல்**

ப-ரை. வல்லவர் என்று சொல்லப்படுதல் தமக்குச் சிறுமை வந்த காலத்திலும் பிறரை இரவாமல் இருக்கையாம்.

**86. ஊக்கம் உடமை ஆக்கத்திற்கு அழகு**

ப-ரை. செய்தொழிலிலே மனந்தளராமையை ஒருவன் உடையனாதல் அவன் செல்வத்திற்கு அழகாகும்.

**87. வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை**

ப-ரை. களங்கமில்லாத பரிசுத்த குணமுடையவனிடத்து வஞ்சனை பொருந்திய நினைப்பானது இல்லை.

**88. வேந்தன் சீறின் ஆம் துணை இல்லை**

ப-ரை. அரசனானவன் ஒருவனைக் கோபித்தால் அப்போது அவனுக்கு உபயோக மாகின்ற துணை ஒருவரும் இல்லை.

**89. வையம் தோறும் தெய்வம் தொழு**

ப-ரை. பூமியில் உள்ள தலந்தோறும் போய் கடவுளை நீ தரிசித்து வணங்கு.

**90. ஒத்த இடத்து நித்திரை கொள்**

ப-ரை. மேடு பள்ளம் இல்லாத சமமான இடத்திலே நீ படுத்து நித்திரை செய்.

**91. ஓதாதார்க்கு இல்லை உணர்வொடும் ஒழுக்கம்**

ப-ரை. அறிவு நூல்களைப் படியாதவர்க்கு அறிவுடனே நல்ல நடையும் உண்டாதல் இல்லை.

(முற்றும்)



**கருவூர் சித்தர் இப்பகுதியில் தியானத்தில் இருந்துள்ளார். இவரது அறிவுரைப்படியே ராஜராஜ சோழன் இக்கோயிலை கட்டியதாக கூறப்படுகிறது.**

**லிங்கத்தை பிரதிஷ்டை செய்யும்போது ஆவுடையின் மேல் உள்ள பாணம் சரியாக பிடிக்கவில்லை. இதைக்கண்ட கருவூரார் சிவனை நினைத்து உருகி 11 திருவிசைப்பாக்களை பாடினார்.**

**அதன்பின் தான் பாணமும் ஆவுடையும் ஒன்றாக இணைந்தது. இதனை "நாவினால் உமிழ்ந்த திருவிசைப்பா" என்பர். மூலவர் சன்னதியின் பின்புறம் கருவூர் சித்தருக்கு சன்னதி உள்ளது.**

**ஒரு நல்ல காரியத்தில் எப்போதும் உற்சாகத்துடன் ஈடுபட்டிருப்பது நல்லது**

# மருத்துவம், பஞ்சபூதியம், சமயம்

ஓர் அலசல்

- செல்வன் சி. செல்வலிங்கம் அவர்கள் -

உலகப் பிறப்புக்களுள் மானிடப் பிறப்பைத் தவிர ஏனைய கோடிக்கணக்கான பிறவிகளுக்கும் சமயப்பற்று என ஒன்று கிடையாது. மானிடருக்கு மட்டும் இச்சமயப் பற்று ஏற்படக் காரணம் அம்மானிடர் கொண்டுள்ள பகுத்தறிவு ஆகும். ஆன்மா ஈடேற்றம் அடையும் நோக்கமே சமயப்பற்றின் கடைசி முடிவாகும்.

இதுவே சகல சமயங்களின் போதனை எனவே ஆன்ம ஈடேற்றம் ஒன்று உண்டு என உணர்ந்த மானிடர் எவர்கட்கும் சமயப்பற்று இல்லாமல் போகவும் மாட்டாது.

இதேபோல உயிர் வாழ்க்கைக்கு ஆயுள்வேத மருத்துவத்தையும் தனது பகுத்தறிவினால் கண்டறிந்தான். உலகம் பஞ்ச பூதியங்களினால் ஆனது. உலகப்பிறப்புக்கள் சகலவற்றின் தேகங்களும் பஞ்ச பூதியங்களின் சேர்க்கையினால் ஆனவை. உலக இயக்கத்திற்கு ஆதாரமாக அமைந்தது நவக்கிரகங்கள் என்னும் கோள்களின் சுற்றுலாவேயாம். இக் கோள்களும் பஞ்ச பூதியத் தன்மை கொண்டு அமைந்தவையாகும். எனவே கோள்கள் உலகப் படைப்புக்கள் உலக இயக்கம் யாவுக்கும் பஞ்ச பூதியங்களே ஆதாரமாக அமைந்துள்ளன என்பதாம். பஞ்சபூதியங்களின் இயக்கமே இறைவனின் பஞ்ச கிருத்தியங்கள் எனத் தரப்பட்டுள்ளதாம்.

உலகை இயக்குபவன் இறைவனேயானாலும் அவ் இறைவனும் பஞ்ச பூதியங்களாக அமைந்து உலகை இயக்குகிறான். எனவே பஞ்ச பூதியங்களின் ஆராய்வும் இறைவனின் ஆராய்வாகும். எமது தேகமும் பஞ்சபூத சேர்க்கையால் இப்பஞ்ச பூதியங்களின் பிரிவுகள் தன்மைகள் குணங்கள் போக்குகளை எவ்வளவிற்கு எவ்வளவு ஆராய்ந்து உணர்ந்து கொள்கிறோமோ அவ்வளவிற்கவ்வளவு எம்முள் இறைமையை உணர்ந்தவர்களும் ஆவோம்.

இப் பஞ்ச பூதியங்களுள்ளும் பிருதுவி, அப்பு, தேயு, வாயு என்ற நான்குமே தேகத்தினால் அனுபவிக்க அமைந்தவை உலகப்பற்றுக்கள் யாவையும் நீத்து ஆன்மாவானது ஈடேற்றம் கொள்ளுமிடத்து அனுபவிக்க அமைந்ததுவே ஆகாச பூதியமாகும்.

பஞ்ச பூதியங்களுள் ஆகாசபூதியம் ஆன்மீகலயம் கொண்டது. இது அசைவும் அற்றது. இது தனித்து இயங்கும் தன்மை அற்றது. இது நிர்மலமானது இது

உலகத்தோரால் தனித்து அனுபவிக்க முடியாதது. ஏனைய நான்கு பூதியங்களுமே உலகத்தோர்க்கு நேரடியாக அனுபவிக்க அமைந்தன. இந்நான்கு பூதியங்களுள் பிருதுவி, அப்பு இரண்டும் கனதி (பாரம்) கொண்டன. எனவே இவை இரண்டும் கீழ் நோக்கும் (அதோ சஞ்சாரம்) தன்மையைக் கொண்டுள்ளன. தேயு பூதியம் மேல் நோக்கும் (ஊத்துவ சஞ்சாரம்) தன்மையைக் கொண்டுள்ளது. வாயு பூதியம் கீழ் மேல் பக்கங்களாகிய நாலா பக்கமும் நோக்கும் தன்மையைக் கொண்டுள்ளது. எனவே வாயு பூதியம் யோகவாகி என்னும் பெயரையும் கொண்டுள்ளது.

பிராணாயாமம் என்னும் சுவாச அப்பியாசம் செய்யும் போது பதினாறு மாத்திரை அளவு நேரம் பூரிக்கும் காற்றினை அறுபத்தினான்கு மாத்திரை அளவு நேரம் அடக்கும் வித்துவத்தை முப்பத்திரண்டு மாத்திரையளவு நேரத்துள் பங்கிட்டு வெளி விடும் போது ஏற்படும் திறனினால் தேகத்தில் உதைப்பு ஏற்படுவது இயல்பாகும். இவ் உதைப்பானது முதலில் முள்ளந்தண்டின் மூலஸ்தானத்தையே தாக்குவதாகும். இந்த ஸ்தானத்தை (Occoigal Region) என்பர். இது மக்களின் ஆறு குறுகிய சிறு எலும்புகளைக் கொண்ட ஸ்தானமாகும். அதாவது முள்ளந்தண்டின் அடிப்பாகமாகும்.

சில பிராணிகள் இப்பாகத்திலுள்ள எலும்புக்கோர்வையை கூடுதலாகக் கொண்டுள்ளன. அங்ஙனம் கொண்டுள்ள போதிலும் அவற்றுள் சிலவே குந்தியிருக்கும் தன்மையையும் கொண்டுள்ளன. அவ்விதம் குந்தியிருக்கும் தன்மையைக் கொண்டுள்ள பிராணிகள் மட்டுமே தாவிப்பாயும் சக்தியையும் கொண்டுள்ளவையாகும். தாவிப்பாய்வதற்கு அனுகூலமாக அமைந்தது வாயு பூதியமேயாம். எனவே வாயு பூதியத்தைப் புலப்படுத்த அமைந்த கணபதி தெய்வத்திற்கும் தாவிப்பாயும் சக்தியை மேலதிகமாகக் கொண்டுள்ள பிராணிகளுக்கும் நெருங்கிய தொடர்பு அமைந்தது முக்கியமேயாம்.

எனவே தாவிப்பாயும் சக்தியைக் கொண்ட ஒரு சில பிராணிகளின் போக்குகளையும் கவனிப்போம். பஞ்சபூதியங்களுள் கீழ்நோக்கும் சஞ்சாரம் கொண்டுள்ள பிருதுவி அப்பு என்னும் இரு பூதியங்கள் என்பதும் இவை தமோ குணம் பொருந்தியவை என்பதும் கபத்தின் தன்மை கொண்டுள்ளன என்பதும் தெரிந்ததேயாம். மேல் நோக்கு சஞ்சாரம் கொண்டுள்ள தேயு என்னும் பூதியம் ராஜோகுணம் பொருந்தியது என்பதும் பித்தத்தின் தன்மையைக் கொண்டுள்ளது என்பதும் தெரிந்ததேயாம். கீழ் மேல் பக்கங்களில் சஞ்சாரம் கொண்டுள்ள வாயு ஆகாயம் என்னும் இரு பூதியங்கள் என்பதும் இவை சாத்வீக குணம் பொருந்தியவை என்பதும் இவை யோகவாகி என்பதும் வாயுவின் தன்மையைக் கொண்டுள்ளன என்பதும் தெரிந்து கொண்டதேயாம்.

எனவே தாவிப்பாயும் சக்தியையும் குந்தியிருக்கும் வல்லமையையும் கபத்திற்குரிய தமோகுணம் அமைந்ததும் பிருதுவி, அப்பு பூதிய சஞ்சாரம் கொண்டுள்ளதுமான பிராணி மண்டுகம் என்னும் தவளையைக் கணித்துக்கொள்ளல் சிரேஸ்டமாகும்.

அன்றியும் அனுமான் இராவணனிடத்து தூது சென்றபோது இராவணன் ஆசனமளிக்காதபோது அனுமான் தன் வாலின் மகிமையால் இராவணனின் சிங்கா

அனுபவம் சிறந்த பள்ளி ஆனால் பள்ளிக்கட்டணம் அதிகம்தான்.

சனத்திலும் உயர்ந்த பீடம் அமைத்துக் காட்டியமை மேல்நோக்கு சஞ்சாரத்தை புலப் படுத்த அமைந்ததேயாம். அனுமான் வாலில் மூட்டப்பட்ட பந்தத்தினால் இலங்கா புரியை தகனம் செய்யும்வரை அனுமானின் வால் சற்றேனும் பொசுங்கவில்லை அல்லவா? எனவே அனுமான் வர்க்கமாகிய குரங்குகள் தேயு பூதிய சஞ்சாரத்தினால் அழிவு பெற இலக்கானவைகளல்ல என்பதும் தெட்டத் தெளிவானதேயாம்.

அடுத்ததாக கீழ் மேல் நாலா பக்கங்களாகிய யோகவாகித் தன்மையான வாயு பூதிய சஞ்சாரத்தைக் கொண்டுள்ளதும் தாவிப்பாயும் சக்தியைக் கொண்டதும் குந்தியிருக்கும் வாய்ப்பையும் பெற்றுள்ளதும் சாத்வீக குணம் பொருந்திய வாயு என்னும் தோசத்தின் தன்மையைக் கொண்டுள்ளதுமான எலி என்னும் பிராணியைக் கொள்வ தும் சிரேஸ்டமேயாம்.

வான வேடிக்கைகளுள் சகல வானங்களும் ஒரே திசையை நோக்கி எழும்பி இயங்குவன. குறிக்கப்பட்ட ஒரே திசையை மட்டும் கடைப்பிடிக்காமல் இங் கும், அங்கும் கீழும் மேலும் ஆகிய நாலா பக்கமும் பாய்ந்து எரிந்து இயங்கும் வானத்தை எலி வானம் என்பர். எனவே எலியின் பாய்ச்சலின் தன்மையை மட்டும் யோகவாகித் தன்மை கொண்டுள்ளது என்பதையும் எவரும் நன்கு உணர்ந்து கொள்ள லாம். பிராணயாமத்திற்கு ஆதாரமான வாயுவும் யோகவாகித் தன்மையும் கொண்டது எலி என்றேயாம்.

அதுவுமல்லாமல் கணபதி தெய்வம் குறிக்கும் பிராணயாமத்தின்போது மூலா தாரத்தில் சஞ்சரிக்கும் மூலவாயு என்னும் அபான வாயுவை மேலாகப் பேணிக்கொள் வதற்காக கணபதி தெய்வத்திற்கு மோதகம் எனும் உணவுப்பண்டமே பிரதான நெய்வேத்தியமாக அமைந்துள்ளது.

முப்பழ நுகர்ச்சியை மேலாகக்கொண்டுள்ள மூசிகம் என்னும் எலியானது கணபதிக்கு வாகனமாக அமைந்த விடத்து முப்பழ நுகர்ச்சியில் கருத்துக் கொள்ளா மல் மோதக பண்டத்தையே கவர்ச்சி கொண்டதாகத் தரப்பட்டுள்ளதும் எலியானது பிராணயாமத்திற்கு ஆதாரமான அபான வாயு இயல்புகளைக் கொண்டுள்ளது என்ப தும் கவனத்திற்குரியதேயாம். அன்றியும் எலிகளுக்கு உணவு உட்கொள்வதற்கு அவற் றின் பற்களின் அமைப்பும் பிரத்தியேகமானதேயாம். எலிகளின் கீழ்த்தாடை மேல் தாடைகளின் முன்வாயில் இவ்விரண்டு கூறிய பற்கள் அமைந்துள்ளன. எந்த உணவாக இருந்தாலும் அந்த நான்கு பற்களினாலும் துருவலாக கொறித்த பின்னரே ஒவ்வொரு கொடுப்பினுள்ளும் மும்மூன்று பற்களால் அரைத்து உண்பனவாம். அதாவது எலிகள் வேகமாகவோ கவனம் கவனமாகவோ உணவு உட்கொள்ள அமைந்தவை அல்ல என்பதாம் இந்த அமைப்பும் மூலாதாரத்து அபான வாயுவை பேணிக் காப் பாற்றிக் கொள்வதில் எலி மிக அக்கறை கொண்ட பிராணி என்பதையும் நாம் உணர்ந்து கொள்ளல் வேண்டும். இந்து சமயத்து ஒவ்வொரு ஆலயங்களிலும்

மூலஸ்தான தெய்வங்களுக்கு நேராக நந்தியை அமைத்து ஆதி மூலத்தை பார்த்த வண்ணம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதும் தெரிந்ததேயாம். ஆனால் கணபதியின் வாகன மாகிய எலியானது ஒரு போதும் மூலஸ்தானத்தைப் பார்க்காது.

மூலஸ்தானப் பார்வைக்குப் பதிலாக மேலே முகட்டைப் பார்த்தபடி அமைந் துள்ளதும் நாம் குறிப்பாக கவனிக்கலாம். அதாவது வாயு பூதியத்தை நோக்கியுள் ளது என்பதால். எனவே கணபதி தெய்வம் வாயு பூதிய அம்சம் என்பதை வேறு ஒருவர் காட்டித்தரவும் தேவையில்லை. அதாவது கணபதியின் போக்கு மூலாதாரத்தில் இருந்து குண்டலிசக்தியை மேலெழுப்புவதை புலப்படுத்துவது என்பதும் சரியேயாம்.

குண்டலி சக்தியை எய்தினோர் வாயு பூதியத்தையும் ஆட்சி கொண்டவரே ஆவார். அதாவது வாயு பூதியங்கடந்து ஆகாச பூதிய அனுபவிப்பிற்கும் ஆளானவரா வர். வாயு பூதியத்தின் உதவியால் கணப்பொழுதில் நாம் வேண்டிய ஸ்தானத்தில் (Spot) பிரவகிக்க முடியும் என்பதை குண்டலி சக்தியை போதிக்கும் விநாயகர் அகவலைப் பாடிக்கொண்ட ஔவைப் பிராட்டியார் கயிலாய தரிசனத்துக்கென தமக்கு முந்தியே புறப்பட்ட அதியமான் அடைவதற்கு முன்னரே கைலாய தரிசனத்தை அடைந்தார் எனத் தந்துள்ளதும் குண்டலி சக்தியால் மேலான சக்தியைப் பெறமுடியும் என்பதை விளக்குவதேயாம்.

பிராணாயாம சக்திக்கு கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள் எத்த னையோ அத்தனை போக்குகளையும் ஒருங்கே புலப்படுத்த அமைந்தவரே கணபதி முகூர்த்தமாகும். அத்தகைய போக்குகளுக்கும் இலக்கான அம்சங்களை கொண்டுள்ளது எலி என்னும் பிராணி ஒன்றே என்றமையினால் உலக மக்களுக்கு இரு பகுதி யான போக்குகளின் இணைப்பையும் எடுத்துக் காட்டுவதே கணபதி தெய்வத்திற்கு எலி யானது வாகனமாக அமைத்துத் தந்துள்ளதாகும். இத்தகைய வேதாகமங்களுக்கு மனிதரும் அடிமையே.

இப் பஞ்ச பூதியங்களின் செயற்பாட்டை உடலில் சமநிலை பேணுவதற்காக அவற்றை ஒடுக்கி வாதம் பித்தம் கபம் எனும் தோசங்களுள் உள்ளடக்கப்பட்டு அவற் றில் ஏற்படும் பிரவாகம் சமயம் காரணமாக தோச அசாத்தியத்திற்கு உடல் உட்படு கின்றது. இதனை ஈடு செய்ய உலக மனிதர் உணவுகளை தோசத்திற்கு ஏற்ப உள் ளெடுப்பதினால் நலமாக வாழ்வதற்கு வழி அமையும்.

அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு என்பது கூட பஞ்ச பூதியங் களையே குறித்து நிற்கின்றது. இப் பஞ்ச சமநிலை நோயற்ற மனிதனை உலகிற்கு பரிசளிக்கும்.

**உசாத்துணை நூல்கள்**

* அஷ்டாங்ககிருதயம்
* விநாயகர் அவகல்

ஒரு செய்முறை சரியானதா அல்லது தவறானதா? என்று நமக்குச் சொல்வதே மனசாட்சி ஆகும்.

உ

# 2009 ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| திரு. ஆனந்தராசா குடும்பம் | மல்லாகம் | 5000.00 |
| திரு. பரமசிவை | ஆத்தியடி, பருத்தித்துறை | 5000.00 |
| திரு. பிறேம்குமார் | கொழும்பு | 20,000.00 |
| புகழேந்தி குடும்பம் | அவுஸ்திரேலியா | 20,000.00 |
| T. செல்வராணி | உடுப்பிட்டி | 6000.00 |
| மாவடியான் றேடர்ஸ் கொழும்பு | புவனேந்தி மூலம் (பிள்ளையார்) | 01 மூடை அரிசி |
| ஜெகா மோட்டோர்ஸ் நெல்லியடி | புவனேந்தி மூலம் | 01 மூடை அரிசி |
| ராஜ்குமார் றேடர்ஸ் தர்மலிங்கம் யாழ்ப்பாணம் | புவனேந்தி மூலம் | 01 மூடை அரிசி |
| தங்கராசா (பழம்) | தம்பசெட்டி புவனேந்தி மூலம் | 01 மூடை அரிசி |
| க.சிவனேசராசன் | இமையாணன் உடுப்பிட்டி | 1000.00 |
| Dr. K. சிவஞானசூரியர் | கொழும்பு | 7500.00 |
| ஆ. அழகராசா குடும்பம் | நாகர்கோயில் | 15,000.00 |
| ஆதவன் அரிசி. ஆலை. | அச்சுவேலி | 01 மூடை அரிசி |
| மு. ஞானவேல் | சுழிபுரம் | 9000.00 |
| ஸ்ரீராஜகுலேந்திரம் சஞ்சயன் | துன்னாலை வடக்கு | 1000.00 |
| சின்னத்துரை இரத்தினம் | ஈவினை | 1000.00 |
| சி. பர்மிலா | நவக்கிரி | 1000.00 |
| முருகனடியார் | நீர்வேலி | 3000.00 |
| சாவித்திரிதேவி நினைவாக சிவயோகநாதன் | நீர்வேலி | 5000.00 |
| ந. விசயகுமார் | சுண்ணாகம் கிழக்கு | 1100.00 |
| மாகோ களஞ்சியம் மின்சாரநிலையவீதி | யாழ்ப்பாணம் | 01 மூடை அரிசி |
| சுந்தரம் ஸ்ரோர்ஸ் | அப்புத்தளை | 02 மூடை அரிசி |
| க. சோமசேகரம் மூலம் மகாராணி புடைவையகம் | யாழ்ப்பாணம் | 03 மூடை அரிசி |
| Dr. பாக்கியநாதன் பொன்னையா வைத்தியசாலை | கல்வியங்காடு | 1500.00 |
| தி. துவாரகேஸ்வரன் ஈஸ்வரன்றேடர்ஸ் | யாழ்ப்பாணம் | 03 மூடை அரிசி |
| இரத்தினம் அன்பழகன் 6ம் வட்டாரம் | புங்குடுதீவு (கனடா) | 03 மூடை அரிசி மரக்கறி |

| | | |
|---|---|---|
| செல்வி நல்லம்மா அம்பலவாணன் | பயிரிக்கூடல் காரைநகர் | 5000.00 |
| திரு. பாலசுப்பிரமணியம் | புத்தூர் மேற்கு | 6000.00 |
| திரு. சிவனேஸ்வரன் | நீர்வேலி | 5000.00 |
| திரு. தீபன் | தம்பாலை அச்சுவேலி | 5000.00 |
| திரு. ரகு | கச்சேரி நல்லூர் வீதி யாழ்ப்பாணம் | 1000.00 |
| செ. பரமானந்தம் | கோப்பாய் | 5000.00 |
| சொ. செல்லத்துரை நினைவு | பத்திரகாளி கோயிலடி பருத்தித்துறை | 01மூடை அரிசி |
| சாம்பசிவம் சம்மாட்டியார் | நாகர்கோயில் | 5000.00 |
| திரு. விஷ்ணு பானுகோபன் | | 5000.00 |
| சாமினா இளங்குமாரன் | கனடா | 3000.00 |
| வாகேஸ்வரன் மனோராஜ் | லண்டன் | 5000.00 |
| அப்புத்துரை குடும்பம் | வயாவிளான் | 1500.00 |
| ஸ்ரீ. சிவராம்றேடர்ஸ் | ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணம் | 01மூடைஅரிசி 01மூடை பருப்பு |
| Dr. S. ஞானசம்பந்தர் | | 10,000.00 |
| காசி மகேந்திரம் | கருணாநிதி ச.ச.நிலையம் வல்வெட்டி | 10,000.00 |
| இராஜேந்திரக்குருக்கள் குடும்பம் | நீர்வேலி | 1000.00 |
| மதனராஜா பூமலர் | உடுப்பிட்டி | 5000.00 |
| இ. குகன் | இணுவில் (கனடா) | 5000.00 |
| ஜனனிகா இராசேந்திரம் | கரவெட்டி | 10,000.00 |
| கலைமகள்விலாஸ் | சங்கானை | 01 மூடை அரிசி |
| வேலுப்பிள்ளை ஆசிரியை | உடுப்பிட்டி (கனடா) | 21,200.00 |
| வ.ஹறிஸ்ராம் | உடுப்பிட்டி | 1000.00 |
| புவனேந்திரம் ரமேஸ்வரன் | உடுப்பிட்டி | 1000.00 |
| ஸ்ரீகரன் அபிலாஷா | பிரான்ஸ் | 15,000.00 |
| செ. நவரத்தினசாமி | யாழ்ப்பாணம் | 1000.00 |
| ஜெகதீசன் தனுஜா | வல்வெட்டித்துறை | 4000.00 |
| த. கணேஸ்வரன் | கோண்டாவில் | 5000.00 |
| V.சிவராஜா (க.கு.க) மூலம் | கொழும்பு | 5000.00 |
| S. இராஜேந்திரம் (க.கு.க) மூலம் | பளை | 6000.00 |
| தி.கஜேந்திரவரதன் | சுதுமலை வடக்கு | 500.00 |
| நவரெட்ணம் செங்கோடன் | கனடா | 20,000.00 |

உ

(தொடர்ச்சி...

# நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

ஆ. சிவலிங்கம் அவர்கள் -

## திருக்குறள்

ஏழு சொற்களைக் கொண்டு இருவரிக்குறள் வெண்பாக்கள் ஆயிரத்து முன்னூற்று முப்பதை மட்டும் கொண்டதுதான் **திருக்குறள்** என்னும் நூலாகும். திருக்குறள் என்னும் நூலைத் தோற்றுவித்து மக்கள் யாவரும் தமிழ் அன்னையை மேம்படுத்தவென்றே திருவள்ளுவரால் படைக்கப்பட்டது.

பெற்றோரால் கைவிடப்பட்ட அநாதையாக ஓதாமல் உணர்வு பெற்ற தெய்வப்புலமைச் சமூகத்தில் எழுவருள் ஒருவராகத் தோன்றியவர். இறையருளால் பிறந்தவுடன் கவிபாட ஆரம்பித்த பிறவிக்கவிஞர். இதனால்



தெய்வப் புலவரெனப் பார்போற்றும் பாவலரானார். இறையருளின் தத்துவத்தைத் தம்முள் அடக்கி மலைபோலச் சேமித்து வைத்தவர். "உரு ஏறத் திரு வேறும்" என்றாற் போல இறையருளையே சிந்தித்து உருவேற்றினார். கிடைத்தது திருவருளான திருக்குறள்.

பாலகன் வளரவளர இறையருளால் நல்லறிவென்னும் ஞானமும் வளர்ந்தது. இல்லறத்தை வாழ்ந்து காட்டினார். தாம் அனுபவித்த இல்லற தர்மத்தை தாம் சேர்த்துவைத்த ஞானக்களஞ்சியத்திலிருந்து ஓதாமல் உணர்ந்ததைத் தாமே ஓதி எம்மை உணரவைத்தார். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு தத்துவங்களை உணர்விக்க வந்தார். தமது பாடலை அறம், பொருள், இன்பம் என்னும் முப்பொருளால் தொகுத்துத் தமது நூலில் (திருக்குறளை நன்கு கசடறக் கற்று கற்பவை கற்றபின் அதன்படி ஒழுகுவோர்) வீடுபேற்றையும் அடையலாம் என எண்ணியே வெளிப்படையாகக் கூறாதிருந்தார்.

திருக்குறளின் அர்த்தத்தை நன்குணர்ந்து தமது வாழ்வியலை மேம்படுத்துவோர் எல்லா இன்பங்களையும் அடையவைத்துள்ளார். இந்நூலைச்

சான்றோர் அனுமதிக்க வேண்டிய நியதியும் ஏற்பட்டது. பாடிய புலவர்கள் தமது நூலை நன்கு கற்றறிந்த பழுத்த அனுபவம் மிக்க சான்றோர்கள் கூடும் மகா சபையில் ஒப்புவிக்கவேண்டும். முதலில் தமது நூலை வாசித்து தகுந்த விளக்கம் தரவேண்டும். கல்விமான்கள் சொற்பிழை, பொருட்பிழை நோக்கிக் கேட்கும் சந்தேகங்களை நீக்கினால் மட்டுமே நூல் அரங்கேற்றம் பெறும் (உதாரணமாக கச்சியப்ப சிவாச்சாரியார் கந்தபுராணம் என்னும் நூலை அரங்கேற்ற முனைந்தபோது முருகப் பெருமான் அடியெடுத்துக் கொடுத்த "திகடசக்கரம்" என்னும் பதத்தின் விளக்கம் கொடுக்கவியலாது திணறினார். சபை கலைந்தது. மறுநாள் முருகப் பெருமான் ஒரு புலவர் வடிவில் சபைக்கு வந்து ஆதாரம் காட்டியதும் நூல் அரங்கேறியது).

மதுரையில் முதல், இடை, கடையென மூன்று சங்க காலமிருந்தது. பெரும்புலவர்கள் பொற்றாமரை வாவியில் இருந்த சங்கப்பலகையில் தமது நூலை வைத்து வணங்குவர். திருவருள் நீதியை நிலைநாட்ட சிறப்பான நூல்கள் மிதந்து காட்சிதரும். தகுதியற்றவை அமிழ்ந்துவிடும். இங்கு கற்றவர்கள் மத்தியில் தெய்வீகம் அறத்தை நிலைநாட்டும். இதனையொட்டியே தெய்வநீதியுடன் பரிசீலனை செய்யப்படும். அனல்வாதம், புனல்வாதம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் பாடல்கள் அனல்வாதம் சார்பில் தீயிட்டப்பட்டும், புனல்வாதம் ஓடும் நதியிலிட்டும் நீதி கேட்கப்பட்டது.

இதே அடிப்படையில் நானூறு நாலடி எழுதிய ஏடுகள் நதியில் எதிர் நீச்சலிட்டு வெளிவந்ததை இக்கட்டுரையின் முற்பகுதியில் அறிந்தோம்.

தெய்வநீதி கேட்டு நூல் அரங்கேற்றும் முறையையும் தழுவியே சிறப்பான நூல்கள் அரங்கேற்றப்பட்டன. ஒரு நூலை அரங்கேற்றும்போது கூடிய தகைமையுடையதனை சிறந்த புலவர் போதிய ஆதாரங்களும் சிறப் பான விளக்கமும் தருமிடத்து ஏனைய புலவர்களும் ஆமோதித்துத் தமது கருத்துக்களையும் தெரிவிப்பர்.

திருக்குறள் என்னும் நூலின் அரங்கேற்றத்தில் சில தடங்கல்கள் ஏற்பட்டன. அரங்கேற்ற மகா சபையில் தலைசிறந்த பெண்புலவரும் வள்ளுவரின் சகோதரியுமான ஒளவையாரும் சமூகமளித்திருந்தார்.

ஒளவையார் தக்க சமயத்தில் எழுந்து தமது தூய மதிநுட்பத்தினால் திருக்குறளைப் புகழ்ந்து பின் வருமாறு கூறினார்.

"புருஷார்த்தங்கள் நான்கினுள் தர்மார்த்தகாமமென்னும் மூன்றையும் திருவள்ளுவநாயனார் 1330 திருக்குறள் வெண்பாக்களினுள் சொல்லியதைக் கேட்டருளி மோட்சத்தையும் சேர்த்துப் புருஷார்த்தங்கள் நான்கையும் பின்வரும் வெண்பாவினால்

விளக்கினார்.

**"ஈதலறம் தீவினை விட்டீட்டல் பொருள் எஞ்ஞான்றும்**
**காத லிருவர் கருத்தொருமித் தாதரவு**
**பட்டதே யின்பம் பரனை நினைந் திம்மூன்றும்**
**விட்டதே பேரின்ப வீடு"**

இப்பாடலைக் கேட்டதும் பலர் சிறப்பான தமது கருத்துக்களையும் கவி மூலம் வெளியிட்டனர்.

**"கடுகைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டித்**
**குறுகத் தறித்த குறள்"**

என இடைக்காடர் பாடியதும், ஔவையார் அப்படி யன்று எனக் கூறித் தனது பாடலில்,

**"அணுவைத் தொளைத்தேழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்"**

என்று அக்குறளைப் புகழ்ந்தார்.

**"மும்மணியும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்**
**மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும் மும்மாவும்**
**தரமுடைய மன்னர் தடமுடிமேல் தாரன்றோ**
**பாமுறைதேர் வள்ளுவர் முப்பால்"**

எனச் சீத்தலைச்சாத்தனார் வியந்து பாடியுள்ளார்.

**வள்ளுவர்சீர் அன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே**
**தெள்ளுபரி மேலழகன் செய்தவரை - ஒள்ளரியசீர்த்**
**தொண்டர் புராணம் தொகுசித்தி ஓராறும்**
**தண்டமிழின் தொகுசித்தி ஓராறும்"**

இவ்வாறு உமாபதி சிவாச்சாரியார் பரிமேலழகரின் உரையுடன் கூடிய வள்ளுவர் வாசகத்தைச் சுவைத்த பேரின்பத்தில்நின்று பரவசமடைந்தார்.

பலராலும் போற்றப்படும் வள்ளுவரின் குறள் அதன் சிறப்பினாலும் பொருட் செறிவினாலும் உலக நீதியாக அமைந்ததாலும் உலகின் பல் வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பெற்று உலகின் வாழ்வியலை அலங்கரிக்கிறது. ஏனைய எந்த நூலுக்கும் இல்லாத அடைமொழியான "திரு" வும் சேர்ந்து திருக்குறள் என அமைந்தது. அவ்வாறே வள்ளுவரும் தாம் இயற்றிய நூலின் பெருமையால் திருக்குறள் நூலை இயற்றிய திருவள்ளுவர் எனப் போற்றப்படுகிறார். இவை யாவும் உலக நீதியை யாவரும் உணர

தனது ஆற்றலை உணர்ந்தவன் தன்னுடைய துன்பத்தை இழந்தவன்

வைத்த தெய்வத்தின் அருட்சிறப்பாகவே அமைந்தது.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு எனப் போற்றப்படுகிறது. இந்திய மண்ணில் பண்டுதொட்டு அவதரித்த சித்தர்கள், மகான்கள், சான்றோர்கள், முத்தமிழ் வித்தகர்கள் யாவரும் தமிழன்னையை பலவகையாலும் ஏற்றிப்போற்றினர்.

நற்றமிழ் கற்ற தமிழக அரசினர் தமது மாநிலத்தின் ஒரு மாவட்டத்தின் பெயராக "திருவள்ளுவர் மாவட்டம்" எனச் சூட்டியுள்ளனர். மேலும் இந்து மகா சமுத்திரத்தின் மையமாக அமைந்துள்ள தென்னிந்திய நகரமொன்றில் வானவளாவும் மிகப் பிரமாண்டமான திருவள்ளுவர் சிலையை அமைத்துள்ளனர். இச்சிலையின் பீடத்தில் திருக்குறளின் 1330 குறள் வெண்பாக்களையும் பொன்னெழுத்துக்களாகப் பொறித்துள்ளனர். இச்சிலை பன்னெடுங்காலமாக பராமரிக்கப்படும்போது எதிர்காலச் சந்ததியினர் (வெளிநாட்டு உல்லாசப் பயணிகள்) உட்பட யாவரும் திருக்குறளின் பெருமையை அறியும் ஆவணப் பதிவாகவே அமைந்துள்ளது. இதனால் தமிழ் மொழி சிறப்படைகிறது.

இந்திய தேசிய (தமிழ்) தொலைக்காட்சியில் நிகழ்வுகளின் ஆரம்பத்தின்போது ஒரு திருக்குறள் கூறி விளக்கமும் தரப்படுகின்றது. இந்தியா மட்டுமன்றி இலங்கையிலும் பாடசாலை மட்டத்தில் திருக்குறளின் சிறப்பு நோக்கிப் போதிக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழரின் பாடநூலாக அன்று (1945) நாலடியார் போதிக்கப்பட்டது. பிற்காலத்தில் கல்வியின் தரம் குறையவும் பண்டைய தமிழ் நூல்கள், பாடநூல் வரிசையிலிருந்து அகற்றப்பட்ட போதும் நாலடியார் தனது தரத்திலிருந்து குறையவில்லை. குப்பையிலே போட்டாலும் குண்டுமணி மங்காது என்றாற்போல் என்றும் நல்ல அறிவு தந்து பிரகாசிக்கிறது.

பண்டைய சங்ககால நூல்கள் யாவும் தமிழை வளர்ப்பதில் முக்கிய மூலப்பொருளாக அமைந்தன. கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டையும் படிப்பதால் எமக்கு ஆன்மீகம், நீதிநெறி, நற்பண்பு, நல்லொழுக்கம் போன்ற தத்துவங்கள் புலப்படுகின்றன. இவற்றுள் தலை சிறந்த உலகப்பொதுமறையும், நீதி நூலுமான திருக்குறளையும் அதன் அடிப்படையில் அடுத்த நூலாகவும் அமைந்த நாலடியார் என்னும் நூலையும் கற்றுத் தமிழை உறுதிசெய்யலாம். தூய தமிழைச் சொல்லுறுதியுடன் தேடிக் கற்கும்போது நாலும் (நாலடியார்) இரண்டும் (திருக்குறள்) சொல்லுக்குறுதியாகவே அமைந்துள்ளது.

(முற்றும்)

உ

(தொடர்ச்சி...

# மோகனதாஸ் சுவாமிகளின் வட இந்திய ஸ்தலயாத்திரை




**காலம்: 09.08.2008 சனி - பகற்பொழுது**

**இடம்: புதுடில்லி**

காலையிலிருந்து பகல் 11.45 வரை அவரவர் விரும்பிய பொருட்களை விரும்பிய இடங்களில் வாங்கிக் கொண்டார்கள். பின்னர், பல ஏக்கர் நிலப்பரப்பு கொண்ட பல பல்கலைக்கழகங்கள் ஒன்றிணைந்த வளாகத்தை வாகனத்தில் அமர்ந்த படியே சுற்றிப் பார்த்தோம். இடையே வாகனத்தை நிறுத்தி, அந்த வளாகத்தினுள்ளே அமைந்திருந்த விஸ்வநாதர் கோயிலையும் தரிசித்தோம். இரவு 10.40க்கு எமது வட இந்திய யாத்திரை நிறைவடைந்துமீண்டும் சென்னை நோக்கி ரயிலில் எமது பயணம் தொடர்ந்தது.

**காலம்: 10.08.2008 - ஞாயிறு**

**இடம்: புகையிரதத்தில்**

டெல்லியிலிருந்து முதல் நாள் இரவு 10.40க்கு ஆரம்பித்த எமது நீண்ட தூர ரயில் பயணம், நாள் முழுவதும் இரவு பகலாகத் தொடர்ந்து, 12.08.2008 காலை 9.00 மணிக்கு சென்னை வந்தடைந்தது.

**காலம்: 12.08.2008 செவ்வாய் - காலை 9.00 மணி**

**இடம்: சென்னை**

காலை 9.00 மணிக்கு நாம் சென்னையை வந்து சேர்ந்ததும், பிரயாண முகவருடனான இறுதிக் கட்டப் பேச்சுக்களை நிறைவு செய்து, எம்மை வரவேற்கக் காத்திருந்த வளலாய் உபதபாலதிபரான செ. நடராஜா அவர்களுடன் (பேரவையின் செயற்பாட்டுக் குழு உறுப்பினர்) அவரது இல்லம் நோக்கிப் புறப்பட்டோம். காசி யாத்திரை வேளையில் நாம் எடுத்துவந்த கங்கா தீர்த்தமும், கங்கை மண்ணும் நமது அடுத்த பணியை நினைவுபடுத்தியபடியே இருந்தது. அதனால் அன்று இரவே ரயிலில்

இராமேஸ்வரம் நோக்கி நாம் இருவரும் பயணித்தோம்.

**காலம்: 13.08.2008 புதன்**

**இடம்: இராமேஸ்வரம்**

அதிகாலைப் பொழுதினில் இராமேஸ்வரம் வந்து சேர்ந்தோம். கடலில் நீராடிய வேளை நாம் பக்குவமாகக் கொண்டு வந்த கங்கை மண்ணைக் கடலில் கரைத்து நேர்த்தியினை நிறைவு செய்தோம். அப்படியே ஈர ஆடையுடன் கோயிலின் உள்ளே உள்ள 21 தீர்த்தக் கிணறுகளிலும் தீர்த்தமாடிய பின்னர் நாம் எமது கைப்பையில் கவனமாகக் கொண்டு வந்திருந்த கங்கை நீரை அர்ச்சகரிடம் கொடுக்க, அவர் லிங்கத்துக்கு அபிஷேகம் செய்த காட்சியினைக் கண்குளிரக் கண்டு மெய் மறந்து நின்றோம். 10.07.2008இல் செல்வச் சந்நிதி வேலவனை வேண்டுதல் செய்து ஆரம்பமாகிய எமது வட இந்திய யாத்திரை, இராமேஸ்வரம் இராமநாத சுவாமியின் திருமுன்னே நிறைவு பெற்றமைகண்டு ஆனந்தக் கண்ணீர் பெருக நின்றோம்.

அன்று இரவு ரயிலில் மீண்டும் புறப்பட்டு மறுநாள் காலை சென்னை வந்து சேர்ந்தோம்.

**காலம்: 14 - 15.08.2008 வியாழன் + வெள்ளி**

**இடம்: சென்னை**

இந்த இருநாட்களும் பிரயாணக் குழுவினரில் பலரும் பல பொருட்களையும் வாங்கிக் குவித்தனர். முகவருடனான நமது கொழும்புப் பயண ஒழுங்குகள் இறுதிக் கட்டத்தை எட்டின. அடியேனுக்கும் காத்திருந்த சில கடமைகளுடன் இருநாட் பொழுதும் கழிந்தது.

**காலம்: 16.08.2008 சனி காலை 8.30**

**இடம்: சென்னை விமான நிலையம்**


இந்தியன் எயர்லைன்ஸ் விமானத்தின் மூலம் காலை 8.30க்கு ஆரம்பமான விமானப் பயணம் 9.45க்கு நிறைவு பெற்று கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையம வந்தடைந்தோம். பகல் 11 மணிக்கு கொட்டாஞ்சேனையிலுள்ள எமது நண்பரும் பேரவையின் தலைவருமாகிய சி. நாகலிங்கம் அவர்களின் இல்லம் வந்து சேர்ந்தோம்.

**காலம்: 18.08.2008 திங்கள் - காலைப் பொழுது**

**இடம்: கொழும்பு**

காலையில் இரத்மலானையிலிருந்து புறப்பட்ட உள்ளூர் விமானம் சரியான நேரத்துக்கு பலாலி வந்தடைந்தது. எமக்காக காத்திருந்தவர்களுடன் இணைந்து அடியேன் ஆச்சிரமம் வந்து சேர்ந்து முருகன் பாதம் பணிந்து நின்றேன்.

(முற்றும்)



அமர்நாத் பனிலிங்கம்

பிறரைச் சீர்த்திருத்தும் கடமையைவிடத் தன்னைச் சீர்திருத்துவதே முதற்கடமை

நாவலர் பக்கம் : உ (தொடர்ச்சி...



# திருவிளையாடற்புராண வசனரூபம்

## எல்லாம் வல்ல சித்தர் திருவிளையாடற் படலம்

**- ஆறுமுகநாவலர் -**

**படலம் - 20**

அபிஷேக பாண்டியனுக்கும் பாண்டி நாட்டவர்க்கும் எல்லா நலன்களையும் வளங்களையும் கொடுக்கத் திருவுளங் கொண்ட சோமசுந்தரக் கடவுள் ஒரு சித்தர் வடிவங் கொண்டருளினார். சிறிய சடாமுடியும், விபூதி தரித்த திருநெற்றியும், குண்டலம் தரித்த திருச் செவியும், படிக மாலையும் பூணூலும் தரித்த திருமார்பும், விபூதிப் பொட்டலம் கொண்ட முடிச்சு தோளிலும், அரையில் புலித்தோல் ஆடையுங்கொண்டு திருப்புன்முறுவலோடு கடைவீதி, தெரு, நாற்சந்தி, வீடு, மாளிகை முதலான இடங்கள் தோறும் சென்று வரலானார். தெற்கே இருப்பதுபோலக் காட்டி வடக்கே தோன்றுவார். கிழக்கே தோன்றி மேற்கில் மறைவார். யாவரும் தேடினும் காணாவண்ணம் ஒளிந்து வேறொரு பக்கம் திடீரெனத் தோன்றுவார். இளையவரை முதியவராகவும், முதியவரை இளையவ ராகவும் ஆக்குவார். ஆணைப் பெண்ணாக்குவார். பெண்ணை ஆணாக்குவார். நண்பர் களிடத்தில் விரோதத்தை மூட்டி விடுவார். நன்னீரை உவர் நீராக்குவார். கடல் நீரை நன்னீராக்குவார். இவ்வாறு பல வழிகளிலும் மதுரை மக்களை வசியப்படுத்தி தம் திருவிளையாடல்களைக் காண்பித்தபடி இருந்தார்.

மதுரை நகரத்தார், சித்தர் வடிவங்கொண்ட சோமசுந்தரக் கடவுள் இவ்வாறு செய்தருளிய திருவிளையாடல்களாலே தத்தம் கண்களையும், மனதையும் திருப்பிக் கொள்ள முடியாமற் திகைத்து தத்தம் தொழில்களையெல்லாம் மறந்திருந்தனர்.

இந்நிகழ்ச்சிகளை ஏவலாளர்கள் மூலமாக அறிந்துகொண்ட அபிஷேக பாண்டி யன், சித்தர் சுவாமியைத் தன்னிடம் அழைத்து வரும்படி ஏவலாளர் சிலரைப் பணித் தான். அவர்களும் சித்தர் சுவாமிகளை நெருங்கி அவரது காரியங்களைப் பார்த்து மெய்மறந்திருந்தனர். பின்னர், பாண்டியன் தன் மந்திரிமார் சிலரை விடுத்தான். மந்திரி மார சித்தர் சுவாமியை வணங்கி அரசன் முன் வரும்படி பணிவாக விண்ணப்பித்தனர். சித்தர் சுவாமிகளோ, "எமக்கு அரசனால் எய்தும் பயன் எதுவுமில்லை" என்று கூறி, அரசனிடம் செல்ல மறுத்துவிட்டார். இதனை மந்திரிமார் பக்குவமாக அரசனுக்கு எடுத் துக் கூறினர். "சர்வலோக நாயகராம் சிவனின் திருவருளைப் பெற்று இம்மை மறுமை இன்பங்களை வெறுத்த யோகிகள், இந்திரன், பிரமன் விட்டுணு முதலியோரையே மதிக்க மாட்டார்கள். பூமியை ஆளும் அரசனையா மதிப்பார்கள்?" என்று கூறி அமைதியாக இருந்தனன்.

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்.

## கல்யானை கரும்பு உண்ட படலம்

**படலம் - 21**

அபிஷேக பாண்டியன் சித்தர் சுவாமிகளின் செய்கைகளினால் அவர் மீது அன்பும் அச்சமும் பெருக, "நானே அப்பெரியவரைத் தேடிப் போயிருக்க வேண்டும். இங்கே வரும்படி அழைத்தது தவறு" எனத் தெளிந்தான்.

அன்று தைச்சங்கிராந்தி புண்ணிய கால நாள். பாண்டியன் திருக்கோயிலினுள் சென்று சோமசுந்தரக் கடவுளை வணங்கி வலம் வரும்போது, அவன் வரும் வழி யின் குறுக்காக புலித்தோல் ஆசனத்தின் மேல் அமர்ந்தபடி சித்தர் சுவாமிகள் இறு மாந்திருந்தார். அரசனுக்கு முன்னே வருகின்ற சேவகர்கள் பிரம்பினலே சித்தரைத் தட்டி "எழுந்து போ" என எச்சரித்தனர். அசையாது அமர்ந்திருந்த சித்தரைப் பார்த் துப் பாண்டியன், "நீர் யார்? எந்த இடம்? யாது வேண்டும்? சொல்லும்" என அதட்டி னான். "அப்பனே! நாம் எந்த நாட்டிலும் எந்த ஊரிலும் திரிவோம். ஆயினும், இப்போது நாம் இருப்பது வட நாட்டுக் காசி நகரம். பிச்சைப் பெருவாழ்வுடையவர்களே நம் மக்கள். நாள்தோறும் வித்தை காட்டித் திரிகின்ற சித்தர் நாம். இந்நகரம் இம்மை யிலே சீவன் முத்தியையும் மறுமையிலே பர முத்தியையும் கொடுக்கும் என அறிந்து இங்குள்ள சிவாலயத்தை வணங்க வந்தோம். மதுரை மக்களுக்கு நமது விளை யாட்டைக் காட்டி அவர்கள் விரும்பும் பல சித்திகளையும் வளங்களையும் கொடுப்போம். எல்லாக் கலைகளிலும் வல்லவர்களாகிய நாம் உன்னிடம் பெறவேண்டியது எதுவு மில்லை" என்று சொல்லி புன்னகை செய்தருளினார்.

பாண்டியன், "இவருடைய இறுமாப்பை அளவிட முடியவில்லையே" என மன துள் எண்ணிய வேளையில், ஒருவன் கமுகுபோன்று பருமன் கொண்ட கரும்பு ஒன் றைக் கொண்டு வந்து வணங்க, அதை வாங்கிய பாண்டியன், சித்த சுவாமியைப் பார்த்து, "எல்லாம் வல்ல சித்தர் என்கிறீர். இந்தக் கரும்பினை இந்தக் கல் யானை உண்ணும்படி செய்வீராயின் நீரே எல்லாம் வல்லவர் எனக் கருதி நீர் விரும்பும் அனைத்தையும் தருவோம்" எனக் கூறினான். இதைக் கேட்ட சித்தர், "உன்னிடத்தே நாம் பெறவேண்டியது எதுவுமில்லை. உன் ஆசை தீரும் வண்ணம் உனக்கு வேண்டி யதை நாமே கொடுப்போம். இந்தக் கல் யானை கரும்பினை உண்பதைப் பார்" எனக் கூறி அந்தக் கல்யானையின் மீது சிறிது கடைக்கண் பார்வையைச் செலுத்தி னார். உடனே அக் கல்யானை கண் திறந்து பார்த்து வாய் திறந்து துதிக்கையை நீட்டி பாண்டியன் கையிலிருந்த கரும்பைப் பறித்துக் கடித்து சாறு கடைவாயால் வழியப் பருகி துதிக்கையை ஆட்டிச் செருக்குற்று நின்றது. சித்தர் சுவாமி மீண்டும் கல்யானை மீது கடைக்கண் பார்வையைச் செலுத்த, யானையானது, பாண்டியன் கழுத்திலுள்ள முத்து மாலையை எட்டிப் பறித்தெடுத்தது. இது கண்ட சேவகர்கள் கோபங்கொண்டு யானையை நெருங்கினார்கள். பாண்டியனும் அளவிலாக் கோபங் கொண்டு சித்தர் சுவாமியைப் பார்க்க, சேவகர்கள் சிலர் சித்தர் சுவாமியை அடிக்க வந்தார்கள். அப்போது சித்தர் சுவாமி புன்முறுவல் செய்து கையசைத்து, "நில்லுங் கள்" எனச் சொன்னதும், அவர்கள் காலடி எடுத்து வைக்க முடியாமல் பொம்மைகள்

**கடன் வாங்கி வாழும் வாழ்க்கையில் அழகோ, சுதந்திரமோ இராது**

போல நின்றார்கள். இதனைப் பார்த்த பாண்டியன் அதிசயித்துக் கோபம் மாறி, "சுவாமீ! அடியேன் செய்த பிழையைப் பொறுத்தருளும்" என விண்ணப்பித்து சித்தர் சுவாமிகளின் திருவடியில் வீழ்ந்து வணங்கினான். அன்பிற்கு இரங்கும் கருணைக் கடலான சித்தர் சுவாமி, "பாண்டியனே! நீ விரும்பும் வரம் யாது?" என வினாவ, பாண்டியனும் வணங்கித் தமக்குப் புத்திர பாக்கியம் தந்தருளும்படி பணிந்து நின்றான். சித்தர் சுவாமி பாண்டியனுக்கு அதை அருளியதுடன் தனது திருக்கரத்தை யானை மேல் வைத்து அருட்பார்வை பார்த்ததும், உடனே யானை துதிக்கையை நீட்டி முத்துமாலையை பாண்டியனுக்குக் கொடுத்தது. அவனும் கைநீட்டி வாங்கிக் கொண்டான். சித்தர் சுவாமியும் மறைந்தருளினார். யானையும் முன்போலாயிற்று.

இவையெல்லாம் கண்ட பாண்டியன் அச்சமும் அதிசயமும் அடைந்து, சோமசுந்தரக் கடவுளே இப்படி ஒரு திருவிளையாடல் செய்தார் எனத் தெளிந்து, சிவலிங்கப் பெருமான் திருச்சந்நிதியை அடைந்து கைகுவித்து வணங்கி அழுது தொழுது துதிப்பானாயினான். பின்னர், பலகாலம் அரசு செய்து தன் மகன் விக்கிரம பாண்டியனுக்கு முடிசூட்டி அவனிடம் தன்னரசை ஒப்படைத்து சிவத்தோடு கலந்தான்.

---



# தை மாத ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விசேட உற்சவ தினங்கள்

01.01.2010 மார்கழி 17 வெள்ளி

*மங்கள புத்தாண்டு ஆரம்பம்*

*திருவாதிரை விசேட உற்சவம்*

14.01.2010 தை 01 வியாழன்

*தைப்பொங்கல் தினம்*

25.01.2010 தை 12 திங்கள்

*கார்த்திகை விசேட உற்சவம்*

30.01.2010 தை 17 சனி

*தைப்பூச விசேட உற்சவம்*

உ

தொடர்ச்சி

# இராமலிங்க சுவாமிகள்

## [வள்ளலார்] - த. நாகராசா அவர்கள் -

ஓதாதுணர்ந்த வள்ளலார் கல்வியில் கவனம் செலுத்தாதிருந்தார். ஆனால் இறைவனின் அருளால் கல்வியில் பாண்டித்தியம் பெற்றார். தமிழ் வடமொழியில் ஈடிணையற்றவராகத் திகழ்ந்தார். சமுதாயத்தில் மறுமலர்ச்சி காணப்போராடிய வள்ளலார் ஆத்மீகத்துறையில் அளவு கடந்த ஈடுபாடுடையவராகத் திகழ்ந்தார். ஆரம்பகாலத்தில் கந்தகோட்ட முருகனிடமும் திருத்தணிகை முருகனிடமும் தணியாத பற்றுக்கொண்ட வள்ளலார் பிற்காலத்தில் நடராஜப்பெருமானிடம் பக்தி கொண்டவராகக் காணப்பட்டார். தமையனின் விருப்பத்திற்காக வலுக்கட்டாயப் படுத்தியமைக்காக திருமணம் செய்து கொண்ட போதிலும் பிரமச்சாரியாகவே வாழ்ந்தார். ஆனால் மற்றவர்களைத் திருமணம் செய்யக்கூடாது என்று கட்டாயப் படுத்தவில்லை. அவரிடம் கல்விபயின்ற எண்ணற்ற சீடர்களுக்கு திருமணம் செய்யக்கூடாது என்று கட்டாயப்படுத்தவில்லை. ஆயிரம் திருமணங்கள் செய்யலாம் ஆனால் நடராஜப்பெருமானிடம் பக்தி கொண்டவராக இருக்கவேண்டுமென்று வற்புறுத்திக் கூறினார்.

இவர் தமது வாழ்க்கையில் சமுதாய சீர்திருத்தம் கண்டவராயினும் ஆத்மீகத் துறையில் அதிகளவு பற்றுடையவராகக் காணப்பட்டார். ஒழுக்கம், பழக்க வழக்கங்கள், கல்விகற்றல், சமுதாய சேவை என்பவற்றில் ஆர்வமுடையவராகக் காணப்பட்ட வள்ளலார் பல தர்ம சாலைகளை அமைத்து உணவின்றி துன்புற்ற மக்களுக்கு உணவளித்தார் அதற்காக வடலூரை தனக்குரிய இடமாகத் தேர்ந்தெடுத்து தர்மப்பணிகள் செய்து வந்தார். இவர் அன்று ஏற்றிய நெருப்பு இன்றும் அணையாமல் மக்களுக்கு அன்னமிட்டுக்கொண்டிருக்கின்றது.

"மண்டில் ஞாலத்தில் வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயர் கொடுத்தோரே" என்ற பாடலுக்கு ஒப்புமையாகக்காணப்பட்டார். ஆறுமுகப் பெருமானிடம் அழுதழுது அருள்பெற்ற வள்ளலார் முருகனைப்பற்றி பல நூற்றுக் கவிதைகளைப் புனைந்துள்ளார். இவற்றைப் பாமாலையாக கந்த கோட்டப்பெருமானுக்குச் சாத்தினார். இவரை வெள்ளாடைத் துறவியென்று கூறுவர் இவர் ஒருநாள் தான் நடந்து செல்லுகின்ற பாதையை விட்டு வேறொரு பாதையால் சென்றுகொண்டிருக்கின்ற பொழுது இதுவரை வழியால் போகின்றவர்களை மாடுபோகுது, கழுதைபோகுது, எருமை போகுது என்று சொன்ன ஒரு ஞானியர் இவரைக் கண்டதும் இப்பொழுதுதான் மனிதன் ஒருவன் போகின்றான் என்றாராம் இதைக்கேட்ட வள்ளலார் ஞானியின் கிட்டப் போனதும் அந்தஞானி ஓடி ஒழித்துக் கொண்டாராம். இந்தவகையில் இராமலிங்கர் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்தார்.

மேலும் பிரசங்கவாதியாகவும்


காணப்பட்டார். இவரது தமையன் சபாபதிப்பிள்ளை அவரது நண்பர் செட்டியார் வீட்டில் பிரசங்கம் நிகழ்த்தி வருவது வழக்கம். ஒருநாள் தமையனுக்கு நோய் ஏற்பட்டதால் தனது தம்பியை அனுப்பி வைத்தார். செட்டியார் வீட்டிற்கு சென்றபொழுது இவரைக்கண்ட செட்டியார் தமையன் வேண்டுதலுக்கமைய வந்தவர் என அறிந்து விருப்பமில்லாமல் பிரசங்கம் செய்யச் சம்மதித்தார். அன்று நடந்த பிரசங்கம் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தரைப் பற்றியதாகும். இவரது பிரசங்கத்தைக் கேட்ட செட்டியாரும் மக்களும் மெய்மறந்து போனார்கள். இவர் சொன்ன பாடலுக்குரிய பொருள் எல்லோரையும் கவர்ந்தது. இதைக்கேள்விப்பட்ட தமையனார் இவரது பிரசங்கத்தில் சந்தேகம் கொண்டு இவர் ஒருநாள் பிரசங்கம் நிகழ்த்துகின்ற பொழுது மறைந்திருந்து பார்த்து தனது தம்பியாரின் பிரசங்கத்தில் இருந்த ஐயுறவு நீங்கப்பெற்று தனது தம்பியாரின் திறமையைக் கண்டு மெய்மறந்து போனாராம். எனவே வள்ளலார் சிறந்த பிரசங்கவாதியாகவும் திகழ்ந்தார். வள்ளலார் மணிவாசகரின் திருவாசகத்திலும் பற்றுடையவராகக் காணப்பட்டார். "நானும் பொய் என்நெஞ்சும் பொய் ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்ற மணிவாசகரின் பாடலுக்கு ஒப்புவமை உடையவராகக் காணப்பட்டார். திருவொற்றியூரில் இருக்கும் பொழுது அங்குள்ள தியாகேஸ்வரப் பெருமானை அவர் புனைந்த பாமாலைகளால் அழுதழுது பாடியது மட்டுமல்லாமல் பரிவாரமூர்த்தியாயிருந்த கந்தப்பெருமானைத் தொழுகின்ற பொழுது வெப்பி வெப்பி அழுது அவனருள் பெற்றவர். காதலாகி கசிந்து கண்ணீர் மல்கியென்று பாடிய சம்பந்தப்பெருமானின் தேவாரப்பாடலுக்கு ஒப்புவமையாகவும் காணப்பட்டார்.

வள்ளலார் எல்லோரும் கல்வி கற்க வேண்டுமென்ற கொள்கையுடைவராகக் காணப்பட்டார். ஆனால் ஆண்கள் மட்டும் கல்வி பெறுவதை அடிகள் விரும்பவில்லை. பெண்களும் கல்வி பெறவேணடுமென்ற சமகல்வித் திட்டத்தை வள்ளலார் வற்புறுத்தினார். கல்வி என்பது அரசினிடமே இருக்க வேண்டுமென்பது வள்ளலாரின் வாதம். வள்ளலார் தம்மிடம் வந்தவர்களை (கல்வி கற்பதற்கு) ஆதரித்து அவர்களை வசதியுள்ளவர்களிடம் அனுப்பி கல்வி பெறச் செய்தார். எனவே மனிதன் கற்கவேண்டுமென்பதை அடிகளார் தமது கொள்கையாகக் கொண்டார். காந்தியடிகள் சத்தியாக்கிரகம் என்ற நெறியைப் பின்பற்றியது போல வள்ளலாரும் ஆன்மநேய ஒருமைப்பாட்டு நெறியைப்பின்பற்றினார். அடிகளார் பணத்தில் பற்றுவைக்கவில்லை தேவைக்கு மிகுதியாக பணம் வைத்திருக்கக்கூடாது என்பது அவரது சித்தாந்தம். செல்வந்தர் பலர் அவரை அணுகி பணத்தை அவரிடம் கொடுப்பதற்கு முனைந்தனர். ஆனால் அவர் அதை ஏற்கவில்லை. இந்த வெள்ளாடைத் துறவி "உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்" என்ற புறநானூற்று நெறிப்படி வாழ்ந்தார். நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்ற நெஞ்சுரம் பெற்றவராகக் காணப்பட்டார். வள்ளலார் முற்காலச் சித்தர்கள் போல் மருத்துவக் கலையில் வல்லுனராக விளங்கினார். தம்மிடம் நோய் தீர்க்க வந்தவர்களிடம் உயிர் காக்கும் மருத்துவத்தை வழங்கி நோயாளியின் உடலைத் திடமாக வைத்திருக்க உணவும் வழங்கினார். ஏழைகள் துன்புற்று தன்னை

நாடிய போதெல்லாம் அவர்களை அணுகி அவர்களுக்கு ஆறுதல் கூறி ஏழைகளின் துன்பம் நீக்குவதற்காக தொண்டாற்றி னார். எனவே எந்த உயிர் மீதும் இரக்கம் காட்டும் கருணை வள்ளலாகத் திகழ்ந் தார். வள்ளலார் சமயத்துறையில் சீர்திருத் தம் காண எண்ணியவராதலால் காஷா யம் தரிக்காமல் வெள்ளாடைத் துறவி யாகவே காட்சியளித்தார். அடிகளார் இளமை யிலேயே கருணை, அன்பு, ஞானம் பெற்ற வராதலால் அவர் துறவியாவதற்கு துவ ராடை தேவைப்படவில்லை. காஷாய மணிந்த உண்மைத்துறவிகளை மதித் தார். கபடசந்நியாசிகளை வெறுத்தார். ஞானமார்க்கத்தில் ஈடுபடுவோர் தகுந்த ஆசானைச் சந்தித்து தீட்சைபெற வேண் டும். ஆனால் வள்ளலார் எவரிடமும் தீட்சை பெறவில்லை. தெருவீதியில் விளையாடித் திரிந்த வேளையில் இறைவன் வலிய வந்து தன்னை ஆட்கொண்டு தீட்சை வைத்த செய்தியை "தெருவிற் கலந்து விளையாடும் சிறியேன் தனக்கே மெய்ஞ் ஞான சித்தியளித்த பெருங் கருணைத் தேவே" சின்னஞ்சிறிய வயதில் இறை வன் வலியவந்து ஆட்கொண்டதால் அவருக்கு தீட்சை தேவைப்படவில்லை. வள்ளலார் தீட்சை பெறாமல் பாடியதால் இதை மருட்பா என்று வைதீகச் சைவர் கள் வாதிட்டனர். வள்ளலாரிடம் சொல் வேறு செயல்வேறு என்ற இழிநிலை இருக்கவில்லை.

(தொடரும்....

# செல்வச் சந்நிதிக் கந்தன் கழற்கோர் கவிமாலை (4)



கருவதுரு வாக வைத்து கவனமுட னேவ ளர்த்து
கதியடைய தீர வித்து - அருள்வேலா
கழலிணைய தேது திக்கத் கதிரமலை பூசை வைப்பைக்
கசிசனைய தாய்ப்பு குத்து - மயில் வீரா
பொருதவரு சூர ●க்க மருவுபெரு வேல்வி டுத்து
புரிதவறை யேபு கட்டி - யருள்கோனே
புவனிதனி லேய முத்து வினை வழிய தேத டக்கும்
புலையனிவ னேனு முய்ய - வரந்தாராய்
திருவருள தாழ்கொ ழித்து திருமொழுக வேக வித்து
திகழுபுக ழோடி ருக்க - அருளாயோ?
திணையுதனின் மாவை யிட்டு நறையுதுட னேகு ழைத்து
திரியொடு நெய் சேர விட்டு - விளக்கேற்ற
வருமடியர் வாழ்வு பெற்று வறுமையது ஏக வைத்து
வரையதனை வேயு யர்த்தி - விடுவோனே!
வளமொடரு ளீய விச்சத் தீதியுதனி லேய மர்த்து
வரமதனை வாரு கத்தப் - பெருமானே.

- இராசையா குகதாசன்,
நாயன்மார்க்கட்டு.

உண்மையாகவே தத்துவம் பேசும் பெரியோர்கள் சுவையாக மக்களின் மனதைக் கவர்வது கடினம்

உ

(தொடர்ச்சி...

# வேண்டுதல்கள்

- திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் -

பக்குவமடைந்த அடியவர்கள் இறைவனது அருளையும் வீடு பேற்றையும் வேண்டி நின்றாலும் சிலரது வேண்டுதல்களிலே அவரவரது மனப்பதிவுகளும் சேர்ந்து வெளிப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கும். மனதைப் பாதித்த விடயம் மீண்டும் மீண்டும் கூறப்படுவது வழமை.

ஒருவர் நல்ல பதவியில் இருக்கிறார். மற்றவர்களுக்கு அப்பதவி கிட்டவில்லை. படிக்காத காரணத்தால் ஒருவனுக்கு அது கிடைக்காத ஒன்றாகியிருந்தால் "சிறுவயதில் படிக்காது விளையாடித் திரிந்தேனே. அதனாலே நல்ல பதவியிலமரும் தகுதியில்லாது போய்விட்டதே" என வருந்துவான். படித்தும் அந்தக் கல்வியால் நல்ல தொழில் வாய்ப்புப் பெறமுடியாதிருந்தால் "தவறான துறையிலே கல்வி கற்றுக் காலத்தைக் கடத்திவிட்டேனே. வேலை வாய்ப்பு உடன் கிடைக்கக்கூடிய துறையிலே கற்றிருந்தால் இப்போது நல்ல பதவியிலே இருந்திருப்பேனே" என்று கவலைப்படுவான். இதை ஒருமுறை சொல்லி ஓயமாட்டான். காலம் முழுவதும் கூறிக்கூறிச் சஞ்சலப்படுவான். தனக்கு வாய்ப்புக்கிட்டாது என எண்ணியிருந்தவனுக்கு அது கிட்டினால் மிகுந்த மகிழ்ச்சியடைவான். இதைப் போன்றுதான் தோத்திரப் பாடல்களைப்பாடியோரும் தம் மன எண்ணங்களைத் தமது பாடல்களிலே புலப்படுத்தியுள்ளனர்.

மாணிக்க வாசகர், அபிராமிப்பட்டர் முதலியோர் "என்னையும் ஒரு பொருளாக எண்ணி ஆட்கொண்டாயே. என்ன பேறு பெற்றேன்" எனக் கூறிக்கூறி உருகி நிற்பதைக் காணலாம்.

திருநாவுக்கரசரோ "சிவபிரானை வணங்காது வேறு சமயத்தைப் பின்பற்றிக் காலத்தை வீணாக்கிவிட்டேனே" எனக் கழிவிரக்கப்படுவதை அவரது தேவாரங்களிலே பார்க்கலாம்.

அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்களை எடுத்துக் கொண்டால் "பெண்களின் அழகிலே வயப்பட்டுக் கெட்டழியாது காத்தாயே" என முருகனைப் போற்றுவதைக் காண லாம். பல பாடல்களிலே அவர் பெண்ணின் அழகை வர்ணித்து அது ஆபத்தானதெனப் பாடியுள்ளனர்.

பக்தி இலக்கியத்திலே சக்தியைப் பல்வேறு உருவங்களில் கண்டு வர்ணனை செய்யும் பாடல்கள் உள்ளன. இறைவனைத் தலைவனாகவும் ஆன்மாவைத் தலைவி யாகவுங்கொண்டு அவர்களது காதல் பற்றிப் பாடல்கள் பாடப்பட்டிருக்கின்றன. பெண் ணின் அழகை வர்ணித்து "அது மனிதனைக் கெடுத்துவிடும். பெண்ணாசை கூடாது. காமத்தின் பிடிக்குள்ளே சிக்கிவிடக்கூடாது" என்று உபதேசிக்கும் பாடல்களுமுள்ளன.

உறவுகள், மண், பொன் போன்றவற்றை நிலையற்றன என்று பாடிய பாடல்கள் இருந்தாலும் திருப்புகழிலே அதிகமான பாடல்கள் பெண்ணின் அழகும் அவளின்

மேற்கொள்ளும் காமமும் மிக மிக ஆபத்தானவை எனத் திரும்பத் திரும்பக் கூறியுள்ளன. அருணகிரிநாதருக்கு அவற்றிலுள்ள வெறுப்பைப் பலவாறு தம் பாடல்களிலே புலப்படுத்தியுள்ளார். உதாரணத்திற்கு ஒன்றைப் பார்ப்போம்.

**"தமருமமரு மனையுமினிய"** என்னும் திருப்புகழ் பாடலிலே **"தறுகண் மறலி"** எனக் காலனுக்கு அடைமொழியாகத் **'தறுகண்'** என்பதை உபயோகித்துள்ளார். **"இறுகுமணி முலை"** எனத் தொடங்கும் திருப்புகழிலே

**தறுகண் ரதிபதி மதனன் விடுகொடு**
**சரமி லெளியனும் அழியாதே**

என அதே **'தறுகண்'** என்பதை மன்மதனுக்கு அடையாக வைத்துப் பாடியுள்ளதிலிருந்து அவர் பெண்மேற் கொள்ளும் காமத்தையும் காமனையும் எவ்வளவு வெறுத்தாரென்பதை விளங்கிக்கொள்ளலாம். அவரது வேண்டுதலொன்றைப் பாருங்கள்.

**மாப்பூ ணாரங் கச்சணி முலையினர்**
**வேட்பூ ணாகங் கெட்டுனை யுனதுமெய்**
**வாக்கான ஞானம் பெற்றினி வழிபட அருளாயோ**

இந்த வகையிலேயே அவரது வேண்டுதல்கள் பல அமைந்துள்ளன.

திருப்புகழைப் பாடுவோரின் மனங்களிலே பதிந்து "இவ்வுலக வாழ்க்கை இவ்வளவுதான். இதைப் பாராட்டி இவ்வாழ்வு நித்தியமானதெனக் கருதுவது தவறு" என்பதை உணரக்கூடிய வகையிலே மூப்பு, பிணி, அந்தகன் வந்து உயிர் பறிக்கும் காலம் என்பன பற்றிப் பல பாடல்களிலே அருணகிரிநாதர் பாடியுள்ளார். **"அறுகுநுனி, பனியனைய சிறிய துளி"** என ஆரம்பமாகும் திருப்புகழ் மனித வாழ்க்கை முழுவதையும் விவரித்து அதன் இறுதிக் காலத்தையும் வர்ணிக்கிறது. **"தலைமயில் கொக்குக் கொக்க நரைத்து, "தொந்தியசைய மயிரே வெளிற"** முதலிய பாடல்களிலே முதுமையும், நோயும், மரணம் அணுகிவரும் வேளையும் விரிவாகப்பாடப்பட்டுள்ளன.

"கூற்றுவன் வந்து நிற்கும் இறுதி நேரத்திலே காப்பாற்றி வீடு பேற்றைத் தந்தருள்" என்பதே அவரது முக்கிய வேண்டுதலாகப் பல பாடல்களிலுள்ளது. இதனைப் பலவாறாக அவர் முருகனிடம் வேண்டியுள்ளார். அவற்றுள் மிகவும் அருமையாக அமைந்த ஒரு வேண்டுதலை மட்டும் இங்கு பார்ப்போம்.

முருகன் என்றதும் அவன் சூரனுடன் செய்த போரும் சேர்ந்தே நினைவிற்கு வரும். அருணகிரிநாதர் தன்னுடைய உயிரை எடுக்க மறலி வரும்வேளையிலே சூரன் போரையொத்த போர் நிகழவேண்டுமென வேண்டுகின்றார்.

உறவினர் கதறியழுகிறார்கள். ஊராரின் பந்தம் அகல்கிறது. வானளாவ பறையதிர்கிறது. வாய்க்கரிசி போட்டாகிவிட்டது.

அப்போது ஒருவன் வரவேண்டும். அவன், கொடிய முயலகனின் மீது ஆடுகின்ற வருடைய ஒரு பக்கமாக உள்ள அம்மை பெறாமல் அருளப்பட்டவன். அவன் பிறை போன்ற பற்களுடன் பொருத வந்த அசுரரைப் போரிட்டு பாரில் விழச் செய்தவன்.

**கடமையைச் முன்னிட்டுச் செய்து பணிக்கு நாம் வெகுமதியை எதிர்பார்க்கக்கூடாது.**

அந்தப் போர் உக்கிரமான போர். பதின்னான்கு உலகங்களும் ஓலமிட, காடு, மலைகளெல்லாம் அழிந்திடிந்து தூளியெழ, பெரிய வயிறுடைய மஹா காளி கூளியோடு வந்து பிணநிணத்தை உண்டு பேயோடு ஆடல் செய்ய நடந்த போரிலே அசுரரை வென்ற வீரன். அவன் வேதங்கள் முழங்க, தேவர்கள் பூமாரி பொழிய அடியவர் கூடிவர வருவான். எப்படி வருவான்? ஆறுமலர்கள்! சாதாரண மலர்களல்ல. கருணையேயுருவான மலர்கள்! அவை முகங்கள். பன்னிரு கரங்கள். நூபுரந்தரித்த இரு பதங்கள். முப்புரி நூலொளிரும் மார்பு. அழகு பொலிய மயிலிலே வந்து அருணகிரிநாதரிடம் வந்து நிற்கும் கூற்றுவன் படைகளை யமபுரத்துக்கு ஓடுமாறு பொருது, அடிநாயேனை அந்த முருகன் ஆளவேண்டும்.

இந்தக் காட்சியை மனக்கண்களிலே காணவைக்கும் அந்த அற்புதமான திருப்புகழ் இதுதான்.

உறவின் முறை கதறியழ வூராரு மாசையற
பறைதிமிலை முழைவினிசை யாகாச மீதுமுற
வுலகிலுள மலரரிசி வாய்மீதி லேசொரியும் மந்தநாளில்

உனதுமுக கருணைமல ரோராறு மாறிருகை
திரள்புய மெழில்பணிகொள் மார்காது நீள்விழியு
முபயபத மிசைகுலவு சீரேறு நூபுரமும் அந்த மார்பும்

மறையறைய யமரர்தரு பூமாரி யேசொரிய
மதுவொழுகு தரவில்மணி மீதேமு நூலொளிர
மயிலின்மிசை யழகு பொலியாளாய் முனடியார் வந்துகூட

மறலிபடை யமபுரமு மீதோட வேபொருது
விருதுபலமுறை முறையிலேவூதி வாதுசெய்து
மதலைபொரு குதலையடி நாயேனையாளவிங்ன் வந்திடாயோ

பிறையெயிறு முரணசுரர் பேராது பாரில்விழ
வதிரவெழு புவியுலக மீரேழு மோலமிட
பிடிகளிறி னடல்நிறைகள் பாழாக வேதிசை யன்ின்ற நாகம்

பிரியநெடு மலையிடிய மாவாரி தூளியெழப்
பெரியதொரு வயிறுடைய மாகாளி கூளியொடு
பிணநிணமுமுணவு செய்து பேயோடுமாடல்செய வென்றதீரா

குறமறவர் கொடியடிகள் கூசாது போய்வருடக்
கரடிபுலி திரிகடியவாரான கானின்மிகு
குளிர்கனியி னிளமரம தேயாகி நீடியுயர் குன்றுலாவி

கொடியதொரு முயலகனின் மீதாடு வாருடைய
வொருபுறம துறவளரு மாதாபெறாவருள் செய்
குமரகுருபர வமரர்வானாடர் பேணவருள் தம்பிரானே

மரண வீட்டைக் கண்முன் கொண்டுவந்து, அசுரருடன் செய்த யுத்தத்தின் பயங்கரத்தை விளக்கி அதில் வென்ற தீரா, என அழைத்து, முருகன் வரும் அழகை வர்ணித்து, மறலிபடையுடன் பொருது எனை ஆள இங்கே வந்திடாயோ என அழைக்கும் போது தன்னை மதலையொரு குதலை அடிநாயேன் எனக் கூறுவதும் பாடலை நயக்கவைக்கின்றன. யமனின் படையுடன் சண்டையிட வல்லவனைத்தான் அழைக்கிறார். அவன் சூரனை ஒரு கொடும் போரில் வென்றவனல்லவா? தன்னையும் கருணைக் குரியவனாக்கிக் கொள்கிறார். பாடப்பாட மனதிலினிக்கும் வேண்டுதலல்லவா இது?

---

# தை மாத 2010 குரு பூசை தினங்கள்

| | |
|---|---|
| *06. 01. 2010 மார்கழி 22* | - **இயற்பகையர் குருபூசை** |
| *09. 01. 2010 மார்கழி 25* | - **மானக்கஞ்சாறர் குருபூசை** |
| *19. 01. 2010 தை 06* | - **அப்பூதியடிகள் குருபூசை** |
| *22. 01. 2010 தை 09* | - **கலிக்கம்பர் குருபூசை** |
| *27. 01. 2010 தை 14* | - **கண்ணப்பர் குருபூசை** |
| *28. 01. 2010 தை 15* | - **அரிவட்டாயர் குருபூசை** |

பச்சைக் களிமண்ணை எந்த உருவமாகவும செய்யலாம் ஆனால் சுட்ட களிமண்ணை அவ்விதம் செய்யமுடியாது. அதுபோல், உலக ஆசைகள் என்னும் தீயினால் சுடப்பட்ட இதயத்தில் ஆன்மீக எண்ணங்கள் சிறிதளவும் பதியாது.

நிதானித்துக் கவனித்துப் பேசுவதன் மூலம் நம்மால் தவறுகள் செய்வதைத் தடுக்க இயலும்

உ

# இருபடிப்பினைகள்

- பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் அவர்கள் -

உலகம் முழுவதையும் சிவபெருமான் அசுரர்க்கே கொடுத்துவிட்டு தாம் ஒரு யோகியைப் போல இருந்தார். அவர் தேவர்களாகிய எங்களுக்கு கொடுத்ததால் துன்புற்ற நாம் அவரிடம் சென்று எம் துன்பத்தைப் போக்கியருள்க என முறையிட்டோம். எம்பொருட்டு இரங்கி அவர் உமையம்மையைத் திருமணம் செய்தார். உடனடியாக ஒருமகனை உதவி எம் துன்பத்தைப் போக்காது இருக்கிறாரே, நாம் என் செய்வோம். நாடிழந்து அகதியாய் அலையும் துன்பம் சூரன் சிறையில் நம்மவர் படும் துன்பம் நாமெல்லாம் துன்புறவேண்டுமென்பதற்காக சூரன் செய்யும் கொடுமை என்னும் இவைகளிலிருந்து விடுபட்டு நாம் இன்புறுவது எப்படி என்று தேவர்கள் மேருமலையில் கூடிப்புலம்பினர்.

பின் அவர்கள் தம்மைத்தாமே தெளிவுறச் செய்தவர்களாய், தேவர், அசுரர் என்று பாகுபடுத்தி ஒரு பகுதியாரிடம் வெறுப்பும் கோபமும் மற்றப்பகுதியாரிடம் இரக்கமும் அன்பும் என்றில்லாமல் அனைத்து உயிர்களும் உய்வும் மகிழ்வும் அடையவென ஐந்தொழில் புரிபவராக சிவபெருமான் இருக்கிறார். ஒவ்வொரு உயிரதும் நன்மைக்காகவே அந்த அந்த உயிர் செய்த இரு வினைப்பயன்களைச் சந்தர்ப்பமறிந்து ஊட்டும் பரமபதியாகவும் பசுபதியாகவும் சிவபெருமான் இருக்கிறார். எனவே நாம் சிவபெருமான் நம்மேல் இரக்கமின்றி உள்ளார் என வெறுத்தல் குற்றமாகும். உண்மை என்னவென்றால் நம் மகிழ்வுக்குத் தேவையான தவம் செய்ய வேண்டிய நேரத்தில் தீமைகளை நாம் செய்தபடியால்த்தான் நமக்கு இத்துன்பம் வந்தது. எனவே நம்மை நாம் வெறுப்பது தான் பொருத்தமான செயல். நம் தீவினை நம்துன்பத்துக்குக் காரணம் என்றாலும் நாம் அவரை அடுத்து வணங்கினால் நன்மையடைய முடியும் எனவும் தேவர்கள் கருதினார்கள். இக்கருத்துக்கள் கந்தபுராணம் திரு அவதாரப் படலத்தில் உள்ள மூன்றுபாடல்களில் அடங்கியுள்ளன.

உமையம்மையார் மலையரசன் மகளாகப் பிறந்து சிவபெருமானைத் திருமணம் செய்யவேண்டுமென்று தவம் புரிந்தார். அவருக்கு அருள் புரியவென்று சிவபெருமான் அந்தண முதியவராய்ச் சென்று அம்பிகையின் மனநிலையைச் சோதிப்பவர் போல் "சிறந்த முனிவர்களும் தேவர்களும் காணமுடியாத சிவபெருமான் உன் தவத்துக்கு இரங்கி வெளிப்பட்டு அருள்வாரா? நீ தவத்தை விட்டு வேறொருவரைத் திருமணம் செய்ய எண்ணுவதே தகுதி" என்று கூறினார். உமையம்மையார் "நான் செய்யும் தவத்துக்கு இரங்கிச் சிவபெருமான் அருளாவிடில் இன்னும் கடினமான தவத்தைச் செய்து உயிரை விட்டு (அடுத்த பிறவியிலும் தொடர்ந்து தவத்தைச் செய்து அவரருள் பெறுவேனேயல்லாமல்) விடுவேனேயல்லாமல் தவத்தை விடமாட்டேன் எனப் பதில் கூறினார் இப்பகுதி கந்த புராணத்து தவங்காண் படலத்திலுள்ளது.

திருமுருக கிருபானந்தவாரியார் இப்பகுதியைப் பிரசங்கம் செய்யும்போது "தவத்தை மேற்கொண்டவர் மனந்தளரலாகாது என்பதையும் பயன்கிடைக்காத நிலையில் மேலும் மேலும் கடினமான தவத்தைச் செய்து அருள் பெறுவதில் உறுதியாக இருக்கவேண்டுமென்பதையும் நமக்கு உணர்த்தவே கந்தபுராணத்தில் இப்பகுதி உள்ளது" என்பார்.

தேவர்கள் போல் துன்ப நீக்கத்துக்கும் இன்பப் பேற்றுக்குமாக வழிபாடுகளை மேற்கொள்வதும் அம்பிகையைப் போல் வழிபாடு பயன்கொடாத நிலையில் கடும் நியமங்களோடு வழிபாட்டைத் தொடர்ந்து இறையருள் பெறுவதில் உறுதியாக இருப்பதும் கந்தபுராணத்தால் நமக்குக் கிடைக்கும் படிப்பினைகளாம் இவைபோல் நூற்றுக்கணக்கான படிப்பினைகளைத் தகுதி வாய்ந்தவர்கட்குக் கந்தபுராணம் உதவிக்கொண்டும் இறையருள்பெற உதவும் வழிபாட்டு முறையான படனமுறை பாராயண முறைக்களுக்கு உரியதாகவும் உள்ளது.

# உங்களுடன்...! உரிமையுடன்...!

இணுவில் வடகிழக்கு முதியோர் நலன்புரிச் சங்கம் 16.10.2008இல் ஸ்தாபிக்கப்பட்டு தனது ஒரு வருடத்தை அண்மையில் பூர்த்தி செய்துள்ளது. இதன் தலைவராக திரு. வ. பாலேந்திரா (இளைப்பாறிய அதிபர்) அவர்களும் செயலாளரா திரு. ம.க. ஸ்ரீதரன் (இளைப்பாறிய கணக்காளர்) அவர்களும் செயலாற்றுகின்றார்கள்.

இச்சங்கத்தில் 76 ஆண்களும் 58 பெண்களுமாக 134 முதியோர்கள் உள்ளனர். அவர்களுக்கு எம்மாலியன்ற மருத்துவ சேவைகள், இலவச மூக்குக் கண்ணாடிகள், நூலக சேவை, அன்பளிப்புகள் என்பவற்றை வழங்கி வருகின்றோம். தொடர்ந்தும் அநாதரவாயுள்ளோருக்கும் அவசர மருத்துவ உதவிகள், மரணமுற்ற வேளை கொடுப்பனவுகள் என்பனவற்றை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கு போதிய நிதி வசதிகள் தேவைப்படுவதால், தயை கூர்ந்து நலன்விரும்பிகள் ஆதரவு வழங்கினால் மிகவும் வரவேற்கத்தக்கதாகும். உதவிகளையோ, அன்பளிப்புகளையோ நல்க விரும்புவோர் **பொருளாளர் திரு. இ. சண்முகநாதன், "திருப்பரங்குன் றம்", இணுவில் கிழக்கு, இணுவில்** என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம். எமது வங்கிக் கணக்கு இலக்கம் 200701 (சே/க) - மக்கள்வங்கி, இணுவில் கருமபீடம்.

**சரியான படிப்பு இல்லாமல் சிந்திப்பவன் மனதின் சமநிலையை இழந்துவிடுகிறான்**

உ

# பசு புத்திர செல்வம்



**- சி.மு. தம்பிராசா ஆசிரியர் அவர்கள் -**

**அம்மா வெனவலற ஆவினத்தை கொன்றுரித்து**
**எம்மா னிடர்சிலபேர் உண்கின்றார்- இப்புவியில்**
**எம்மா வினமெல்லாம் வாய்திறந்து பேசுமென்றால்**
**சும்மா விருக்குமோ சொல்.**

### கட்டுரையின் பெயர்

பசுவும்; அதன் சந்ததியும், அவற்றின் பயன்பாடுகளும், வரலாறும் இக்கட்டுரையில் உள்ளடக்கப்படுதலால் இக்கட்டுரை சுருக்கமாகப் 'பசு, புத்திரசெல்வம்' என்னும் பெயர் பெறுகிறது.

### பசு வரலாற்று நூல்கள்

வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள். தருமசாத்திரங்கள், சிவதருமோத்திரம. புராணங்கள், தமிழ்மூவாயிரம் என்னும் திருமந்திரம், திருமுறைகள், நீதிநூல்கள் என்பன பசு பற்றிய சிந்தனைகளையும் பயன்பாடுகளையும் வரலாறுகளையும் எடுத்துரைக்கின்றன. பெரியபுராணத்தில் மனுநீதிகண்டசோழன் புராணம், ஆனாய நாயனார் புராணம், சண்டேசுரநாயனார் புராணம், என்பன பசு பற்றிய சிந்தனை களை நன்கு எடுத்தாண்டுள்ளன. மணி மேகலையில் ஆபுத்திரன் கதை பசு பற்றிக் கூறுகிறது. யாழ்ப்பாணத்து ஞானப்பிரகாச முனிவர், ஐந்தாங் குரவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஆகியோரும் பசு பற்றிய விளக்கங்களைத் தந்துள்ளனர். மேலும் தற்கால விலங்கு வேளாண்மை நூல்கள் பசு சம்பந்தமான அறிவுரைகளை எடுத் துரைக்கின்றன.

### பசுவின் பிறப்பு

தேவர்கள் அமிர்தம் பெறவேண்டி திருப்பாற்கடலைக் கடைந்தனர் அது சமயம் உச்சைசிரவசு என்னும் குதிரை, ஐராவதம் என்னும் யானை, காமதேனு, நவரத்தினங்கள் என்பன தோன்றின. தேவ உலக மருத்துவரான தன்வந்திரி பகவான் அமிர்தகலசத்துடன் அடுத்ததாகத் தோன்றினார். ஸ்ரீ மகாலக்குமி தேவி இறுதியாகத் தோன்றினார். காமதேனு என்பது தேவருலகில் உள்ள தெய்வீகப் பசு. அது தேவருலகில் கேட்டது எல்லாம் கொடுக்கவல்லது. பசுவும் காமதேனு வழி வந்தது. பசு பூவுலகில் மனித வாழ்விற்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்கள் பல தருகின்றது. மனித ஆன்மாவைப் 'பசு' எனச்சுட்டி, அது முப்பொருள்களில் ஒன்றாகச் சைவசித்தாந்தம் பேசுகிறது. எனவே மனிதனுக்கும் பசுவிற்கும் நெருங்கிய தொடர்பு காணமுடிகிறது. ஆதலின் பசு பூவுலகில் ஓர் உயர்பிறவி. பசு மனிதப் பிறவிக்குச் சமனாகிறது.

### பசுவின் பெயர்கள்

பசுவின் பெயர் கூலம், கோ, குடம்,

ஆ, நிரை, தேனு, பெற்றம் என்றும், தெய்வப் பசுவின் பெயர் கபிலை, தேனு என்றும்; இடபத்தின் (எருது) பெயர் ஏறு, உக்கம், நரை, நந்தி, சூளி, காளை என்றும் சூடாமணி நிகண்டு பொருள் தருகிறது. எருது என்றால் இடபம் என்றும்; மாடு என்றால் செல்வம் என்றும்; மேலும் மாடு என்றால் ஆங்கிலத்தில் Cow or Bull என்றும்; காமதேனு என்றால் தெய்வப்பசு என்றும், நந்தி என்றால் இடபராசி, எருது, நந்திதேவர் என்றும், பசு என்றால் இடபராசி, நந்திதேவர், உயிர், எருது, ஆன்மா, என்றும் அகராதிகள் பொருள் தருகின்றன. மேற்படி சூடாமணி நிகண்டு, அகராதிகள் ஆகியவற்றின் பொருள்களை உய்த்துணரும் போது பசு, காமதேனு என்னும் இரண்டும் ஒன்றென்றும்; பசு, எருது என்னும் இரண்டும் ஒன்றென்றும்; நந்தி, இடபம் என்னும் இரண்டும் ஒன்றென்றும் கொள்ளக்கிடக்கிறது. பசு, மாடு என்பன பொதுப்பாற் சொற்களாகக் காணப்படுகின்றன. எமது நாட்டு வழக்கில் பசு வளர்த்தல் அல்லது மாடு வளர்த்தல் என்றால் பசு, எருது இரண்டினையும் உள்ளடக்கிக் கூறுவதுங் காணலாம். மேலும் பசு, கோ, ஆன்மா என்றுஞ் சுட்டப்படுவதனால்; பசு இறைவன், மனிதன் என்னும் இரண்டுடனும் தொடர்புபடுகின்றதும் காணமுடிகிறது. இவ்வகையிற் பசு ஓர் உயர் தனிப்பிறவி என்பது தெளிவு.

**பசுவின் பெருமை**

ஸ்ரீமகாலக்குமிதேவி செல்வங்களுக்கு அதிபதி. ஸ்ரீமகாலக்குமிதேவி விரும்பி உறையும் இடம் பசுவின் வயிறு எனப் பிரமவைவர்த்த புராணம் கூறுகின்றது. பசுவிற்கு ஒரு பெயர் மாடு. மாடு என்பது செல்வம் எனவும் பொருள் தருகின்றது. இந்நிலையிற் ஸ்ரீமகாலக்குமிதேவி உறையும் இடம் பசுவின் வயிறு என பிரமவைவர்த்தன புராணம் கூறுவது மிகவும் பொருத்தமானதாகக் காணப்படுகிறது. சைவசமயத்திற் சிவபெருமானின் கோவிற் காவலன் நந்தி. நந்தி இடபதேவர் எனப்படுவர். சிவபெருமானின் கொடி நந்திக்கொடி, அவரது வாகனம் வெள்ளெருது, சிவாலயங்களிற் காலையிற் கோபூசை செய்வதும் பசுவின் பெருமையறிந்து என்பது குறிப்பிடத்தக்கது.

வைணவசமயத்தின் முழுமுதற் கடவுளான ஸ்ரீமந்நாராயணப் பெருமான் ஆயர்பாடி மாளிகையிற் திருவவதாரம் செய்ததும் பசுவின் பெருமையை மேலும் எடுத்துக் காட்டுகிறது. இவர் பசு மாடுகளுடன் கூடித்திரிந்தமைக்குச் சான்றாக புல்லாங்குழல் ஊதிக்கொண்டு பசுவுடன் கூடி நிற்கும் இவரது திருவுருவப் படம் அமைகிறது. திருமூலநாயனாருக்கு நந்தி (மாடு) நவாகமங்களை உணர்த்தியதும் சிந்தித்துத் தெளிதற்கு உரியது. மனுநீதி கண்டசோழன், தன்மகன் உயிரையும், பசுக்கன்றினது உயிரையும் ஒன்றெனக்கருதித் தன் மகனுக்கு மரணதண்டனையைத் தானே முன்னின்று நிறைவேற்றியதும் பசுவின் உயர்வைக் காட்டுகிறது. தேவதூதனான யேசுபெருமான் பசுத்தொழுவத்தில் திருவவதாரம் செய்ததும் பசுக்குலத்திற்கு பெருமை சேர்க்கின்றது. ஒரு மனிதத் தாய் தன் பிள்ளைக்கு மாத்திரம் பால் கொடுத்து வளர்த்துப் பிற்காலத்தில் தன் பிள்ளையாற் பயனடைகிறாள். பசுத்தாய் தன் கன்றிற்குப் பசி தீரப் பால் கொடுத்தும், மிகுதியான பாலை இன, மத, வயது வேறுபாடின்றி யாவருக்கும் கொடுக்கின்றது. அத்தோடு

கடவுளுக்கு அபிடேகம் செய்கின்றது. ஆனால் தான் ஈன்ற கன்றினால் பசு எவ் வித பயனும் அடைவதில்லை. பசு தன்ன லங்கருதாப் பரோபகாரி.

**பசு வளர்த்தல்**

ஆதிகாலத்தில் நாடோடியாகத் திரிந்த மனிதன், தன் இருப்பிடத்தினை நிரந்தரமாக அமைத்துக் கொண்ட போது வேளாண்மையோடு, விலங்குவேளாண் மையை மேற்கொண்டான். விலங்கு வேளாண்மையில் பசு வளர்த்தல் ஒன்று. உலகில் தோன்றுதொட்டுப் பசு வளர்த்து வந்தமையை அறியமுடிகிறது. வேத காலத்தில் பசு பிரதானமாக வளர்க்கப் பட்டது. அதாவது அக்காலத்தில் செல் வத்தின் அளவுகோல் பசுவே. இன்று உல கில் இன மத வேறுபாடு இன்றிப் பசு வளர்க்கப்படுகின்றது. உழவுத்தொழிலில் வலது பக்கம் உழவன்; இடது பக்கம் பசுவினங்கள் என்பது உண்மை.

**பசுபடு திரவியங்கள் (பசு தரும் செல்வங்கள்)**

கடல்படு திரவியங்கள், காடுபடு திரவியங்கள், மலைபடு திரவியங்கள் போன்று பசுபடு திரவியங்களையும் நோக்க முடிகிறது. பசுபடு திரவியங்கள் கோமயம், கோசலம், பால், தயிர், நெய், கோரோசனை என்பனவாம். இவற்றுள் கோமயம், கோசலம், பால், தயிர், நெய் என்பவற்றைப் பஞ்சகவ்வியம் என்பர். பால், தயிர், நெய் இறைவனுக்கு உரிய அபிடேகப்பொருட்களாகும். கோமயம் சாணம் எனப்படும். பசுவின் சாணம் ஒரு தொற்று நீக்கி. இது வீடு மெழுகவும், கரைத்துத் தெளிக்கவும், பயிர்களுக்கு பசளைக்கும் பயன்படுகிறது. மேலும் பசுவின் சாணம் சிவசின்னங்களில் ஒன் றான திருநீற்றின் மூலப்பொருள் என்பது பெருமைக்கு உரியது. சைவசமயத்தில் விக்கினேஸ்வரர் முதலாவதும், முக்கிய மானதும் ஆவர். இப்பூசைக்கான பிள்ளை யாரை பசுவின் சாணத்தினால் ஆவாக னம் செய்வது பசுவின் சாணத்தின் பெரு மையை எடுத்துக்காட்டுகிறது. பசுவில் இருந்து பெறும் கோரோசனை சித்தமருத் துவத்தில் மாத்திரை, சூரணம், குளிகை என்பவற்றின் மூலப்பொருளாக அமை கிறது. பால், தயிர், மோர், நெய் என்பன சித்தவைத்திய, விஷ வைத்தியத்திற் பெரிதும் பயன்படுகின்றன. இவை மருந் துகள் தயாரிப்பதற்கும், அநுமானத்திற் கும், பத்தியத்திற்கும் பயன்படுவன. விஷ வைத்தியத்தில் சகல பாம்புக் கடிக்குமான மருந்து தயாரிப்பதற்குச் சுந்தரியை (மூஞ் சூறை) பிடம் போடுவதற்கு அதை வேப்பெண்ணைக் குடுகையில் அடைத்து ஒரு மண்டலம் (45 நாட்கள்) மாட்டுத் தொழுவத்தில் புதைத்துவைத்துப் பின் எடுத்து அதற்கான மருந்து தயாரிப்பர். அம்மை நோய்த்தடுப்புப் பால் குற்றும் மருந்து தயாரிப்பதற்கும் பசுவினங்கள் பங்களிப்புச் செய்கின்றன. பசுவின் உட லுறுப்புக்களில் புண்ணியதீர்த்தங்கள், அக்கினி மண்டலங்கள், யாகங்கள், கற் புடைய மகளிர் இருத்தலே பசுபடு திர வியங்களின் சிறப்பிற்குக் காரணம். இந் நிலையிற் தேவர்கள் அமிர்தம் பெற வேண்டித் திருப்பாற்கடலைக் கடைந்த போது, அது சமயம் காமதேனு, தேவரு லக மருத்துவரான தன்வந்திரி பகவான், ஸ்ரீமகாலக்குமிதேவி, ஆகியோர் தோற்றம் பெற்றதன் நோக்கம் தெளிவாகப் புலனா கிறது. பசுபடு திரவியங்கள் நோயற்ற வாழ்விற்குக் குறைவற்ற செல்வங்களாக விளங்குகின்றன. **(தொடரும்.........**

# ஆழ்வார்கள் கண்ட பக்தித் தமிழ் வழிபாடு

**- செல்வன் தி.மயூரகிரி சர்மா அவர்கள் -**

ஆழ்வார்கள் பன்னிருவர். இவர்கள் தமிழகத்தில் கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி 9ஆம் நூற்றாண்டுக்கு இடையில் வாழ்ந்தவர்கள். விஷ்ணுவே பரம்பொருள் எனக் கருதித் திருமாலுக்கு திருவடித் தொண்டு புரிதலையே தம் கடனாக கொண்ட வைணவமரபினர். ஆழ்வார் என்ற தனித்தமிழ்ச் சொல்லுக்கு "இறைவனாகிய ஸ்ரீமந் நாராயணனின் கல்யாண குணங்களில் ஆளும்காற்பட்டவர்கள்" என்று வைணவர்கள் பொருள் கொள்வர். இவ் ஆழ்வார்கள் பன்னிருவரும் நமக்குத் தந்தவையே "நாலாயிரம் தமிழ்" என்றும் "ஆழ்வார்களின் அருளிச் செயல்கள்" என்றும் போற்றப்படும் தமிழ் நாலாயிரம் திவ்விய பிரபந்தங்கள் ஆகும்.

## இலக்கிய வளமும் நலமும்

ஆழ்வார் பெருமக்கள் புதிய, புதிய இலக்கிய வடிவங்களைப் பாடியுள்ளனர். பெரியாழ்வார் என்ற ஆழ்வார் திருப்பல்லாண்டும் தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருப் பள்ளியெழுச்சி, திருமாலை என்பனவும் பாடியுள்ளார். குலசேகராழ்வார் கண்ணபுரம் பெருமாள் மீது திருத்தாலாட்டு பாடியுள்ளார். பெரியாழ்வார் பிற்கால பிள்ளைத்தமிழ் இலக்கிய வளர்ச்சியின் முன்னோடியாக கருதப்படுகிறார். தவிரவும் இவர் உந்தீபற பாடுகிறார். (மாணிக்கவாசகரும் திருவுந்தியார் பாடியுள்ளார்) முதலாழ்வார் மூவர் என்று கூறப்படும் பூதத்தாழ்வார், பொய்கையாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் திருமழிசையாழ்வாரும் நம்மாழ்வாரும் திருவந்தாதி பாடியுள்ளனர். (காரைக் காலம்மை யாரும் திருவந்தாதி பாடியுள்ளார்) திருநாவுக்கரசரைப் போலவே சமகாலத்தவரான திருமங்கையாழ்வார் திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம் பாடியுள்ளார். இவர் ஞானசம்பந்தரைப் பின்பற்றி 'திருவெழுகூற்றிருக்கை' செய்துள்ளார். ஆண்டாள் மாணிக்க வாசகரைப் போல, திருப்பாவை, குயிற்பத்து, போன்றன பாடியுள்ளாள். இவைகள் இலக்கியவளமும் இனிமையும் பொருந்தியுள்ளன.

## பரந்த உள்ளம் பூண்டவர்கள்

ஆழ்வார்கள் இறைவனில் ஆழ்ந்தவர்கள்.

**"இற்றைக்கும் ஏழ்ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு**
**உற்றமே ஆவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்" (திருப்பாவை 29)**

இவ்வாறு ஆழ்ந்தவர்களான ஆழ்வார்கள் சாதிபேதத்தை மறுதலித்தார்கள். அதனால்,

**"இழி குலத்தவர்களேனும் நும் அடியார்களாகில்**
**தொழுமின் நீர்"** என்று பாடியுள்ளனர்.

இது தவிரவும் வான்மீகி முனிவர் பாடிய வடமொழி இராமாயணத்தில்

இல்லாத பல செய்திகளும் ஆழ்வார்களால் பாடப்பட்டுள்ளன. தொண்டரடிப்பொடி யாழ்வார்

"குரங்குகள் மலையைத் தூக்கக்
குளித்துத் தாம் புரண்டிட்டோடி
தரங்க நீர் அடைக்கலுற்ற
சலமிலா அணிலும் போலேன்" (திருமாலை 27)

என்று சேதுபந்தனத்தில் அணில் மண்ணில் புரண்டு அதை கடலில் உதிர்த்து இராமனுக்கு உதவியதாகப் பாடியுள்ளார். இவ்வாறு ஆழ்வார்கள் ஜீவகாருண்யம், இயற்கை ரசனை, பரந்த உள்ளம், அடியார் பணி விருப்பு முதலியனவுடையோராக உள்ளனர். காதல், வீரம் முதலியன பற்றியும் இவர்கள் பலவற்றைப் பாடக் காணலாம்.

## பிற்காலத்தையப் பெருமைகள்

ஆழ்வார்களுடைய காலத்திற்குப் பின் அழிவடைய இருந்த அவர்கள் பாடிய நாலாயிரம் திவ்விய பிரபந்தத்தை "நாதமுனிகள்" என்பவர் தொகுத்து உதவினார். பிற்காலத்தில் இராமானுஜர் காலந்தொட்டு மணவாளமாமுனிகள் காலத்தின் வரை பெரும் பெரும் விரிவுரைகள் இந்தத் தமிழ் நாலாயிரத்திற்கு உருவாகியுள்ளன. திருக்கோயில்களில் கதாகாலட்சேபம் (பாட்டுடனான பேச்சு) மூலமாயும் 'அரையர் சேவை' என்று கூறப்படும் நடனத்துடன் கூடிய பாடல், ஆடல் மூலமும் ஓதுவார்களால் ஓதப்படுதல் மூலமும் இவை வளர்ச்சி பெற்றன.

இன்றும் வைணவ திருக்கோயில்களில் ஆழ்வார்களின் பாடல் பெற்ற தலங்கள் "திவ்விய தேசங்கள்" எனப்படுகின்றன. இவற்றை மங்களாசாசன ஸ்தலங்கள் எனவும் கூறுகின்றனர். இவை 108 என்று கூறப்படும். இவற்றில் 94 தலங்கள் தமிழகத்திலேயே உள்ளன. ஆழ்வார்கள் தமிழை நேசித்தார்கள். அவர்களின் தமிழை இறைவனும் ...த்தான். இன்றும் ஆலய கருவறைகளில் அந்தண அர்ச்சகர்களான வைணவ பட்டாச்சாரியார்கள் திவ்யபிரபந்தம் பாடுகிறார்கள். இறைவனின் திருவுலாவிலும் இறைவனுக்கு முன் வைணவ மரபில் இப் பாசுரங்களையே பாடிச் செல்கின்றனர்.

## இலங்கையும் பிரபந்தமும்

இலங்கையில் வைணவர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்வோர் குறைவு. ஆனால் மாயவன் கண்ணன் அடியார்கள் அதிகம். அந்த வகையில் "பச்சை மாமலை....." (திருமாலை 2) முதலிய பாடல்களை அறியாத இந்துக்களும் குறைவு. மேலும் இங்கு வல்லிபுரம், பொன்னாலை, போன்ற இடங்களில் பெரும் விஷ்ணுவாலயங்களும் அமைவு பெற்றுள்ளன. சைவத்திருமுறைகளுடனும் "திருப்புகழ்" முதலிய தோத்திரப்பாக்களுடனும் இப்பாசுரங்களும் பலரால் பாடப்படுகின்றன. அனேக விஷ்ணு ஆலயங்களில் ஆழ்வார்கள் பன்னிருவருக்கும் ஆண்டாளுக்கும் இராமானுஜருக்கும் சிற்றாலயங்கள் கூட காணமுடியும். வல்லிபுரத்திலும், வண்ணார் பண்ணையிலும் கூட இவற்றை அவதானிக்கலாம்.

எனினும் இலங்கையில் எத்தலத்தின் மீதும் ஆழ்வார்கள் பாடியுள்ளதாக அறியமுடியவில்லை.

## இலங்கை பெற்றபேறு

வைணவர்கள் திருவரங்கத்தையே "கோயில்" என்று போற்றுகின்றார்கள். பன்னிரு ஆழ்வார்களும் ஒருங்கே பாடிய தலமது. இராமபிரான் வழிபட்ட ஸ்தலம், விபீஷணன் போற்றிய ஸ்தலம், இராமானுஜர் வாழ்ந்த ஸ்தலம். இங்குள்ள பெருமாளைப்பாடிய தொண்டரடிப்பொடியாழ்வார்

**"குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி**
**வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி**
**கடல் நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமாகண்டு**
**உடல் எனக் குருகுமாலோ, என் செய்கேன் உலகத்தீரே"**

என்று பாடுகிறார். இப்பாடலுக்கு உரை செய்ய விழைந்த பெரியவாச்சான் பிள்ளை என்ற பிரபல வைணவ உரையாசிரியர் "வடதிசை பின்பு காட்டி" என்ற வசனத்திற்கு "ஆழ்வார்களின் ஈரத்தமிழ் நடையாடாதே முரட்டு சமஸ்கிருதம் நடமாடும் தேசமன்றே" என வடதிசை பின்பு காட்டி செந்தமிழ் பேசும் நாடாம் இலங்கையை நோக்கி பெருமாள் ஆதிசேடன் மீது சயனித்திருப்பதாக எழுதியுள்ளார். இவ்வாறு ஸ்ரீரங்கம் நம்பெருமாள் இலங்கை நோக்கி, நம்மை நோக்கி, பொன் வேயப்பட்ட விமானம் கீழே சயனித்திருப்பது நாம் பெற்ற பேறன்றோ? அவனிடம் சமாதானமும் சாந்தியும் மலர வேண்டுவோம்.

"பொலிக பொலிக பொலிக போயிற்று வல்லுயிர்ச் சாபம்
நலியும் நரகமும் நைந்த நமனுக்கு இங்கு யாதொன்றுமில்லை
கலியும் கெடும் கண்டு கொள்மின் கடல் வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்திசை பாடி ஆடியுழி தரக் கண்டோம்"

என்று நம்மாழ்வார் திருமொழியில் பாடியது போல "சர்வநலமும் வளமும் வாழ்வும் பொலிக, மாயவன் மணிவண்ணன் கண்ணன் அருள் பெருக," எனப்போற்றி வணங்குவோம். கோவிந்தா! கோவிந்தா!

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.No. 021-2263406
021 3219599

காசோலை
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www. sannithiyan. org

வாரியார் பக்கம்: உ

# மரணத்தின் பின்....

- வாரியார் சுவாமிகள் -



***உறவின் முறை கதறி அழ:***

நமது ஆதரவில் இருந்தவர்களும், இத்தனை காலமாக யார் பொருட்டு இரவும் பகலும் உழைத்தோமோ அந்தத்தாய், மனைவி, மக்கள் முதலியோர்களுமாகிய சுற்றத்தினர் உயிர் பிரியும்போது சுற்றியிருந்து அவமே இரங்கி அழுவார்கள். இயமனுடன் வாதிட்டு அவரை விரட்டவோ, நம் பொருட்டு உயிரை விடவோ மாட்டாதவர்களாகிக் கைவிட்டு நிற்பார்கள்.

***ஊரார்கள் ஆசையற:***

எத்தனையோ காலமாகப் பழகி வந்த ஊரில் உள்ளவர்கள் உயிர் பிரிந்தவுடன் நம்மீது வைத்திருந்த ஆசையை விட்டு விடுவார்கள்.

***பறை திமிலை முழிவினிசை ஆகாசமீதுமுற:***

உயிர் பிரிந்தவுடன் நமது வீட்டிற்கு முன் பலப்பல வாத்தியங்களை ஒலிக்கச் செய்வார்கள். அவ்வொலி ஆகாயம் வரை செல்லும்.

***அரிசி வாய்மீதிலே சொரியும்:***

காது குத்தும்போது வெல்லந்தடவிய அரிசியைத் தந்தார்கள். காது வழி பஞ்சாக்கரம் ச... ரம் புகுந்து உயிரில் சிவமாகிய இனிமை ஏறவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். கல்யாண சமயத்தில் மஞ்சள் தடவிய அரிசியைத் தூவினார்கள். உயிரில் அன்பு என்ற மஞ்சள் நிறம் உண்டாக வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். சிவமாகிய இனிமையும், அன்பாகிய பசுமையும் என்பால் உண்டாகாமல் உயிர் துறந்ததினால் இறந்தவுடன் என்வாய் மீது வெறும் அரிசியைப் போடுவாராயினார்கள்.

***அந்த நாளில் :***

முடிவான நாள. அநநாளில் நான்கு நிகழ்ச்சிகள் நிகழும். அவையாவன: 01. உறவினர் அழுவார்கள், 02. ஊரவர் வந்து கூடி ஆசையை விடுவார்கள், 03. பறையறைவார்கள், 04. வாய்க் கரிசியிடுவார்கள்.

இந்த நான்கு நிகழ்ச்சிகளுக்குப் பதிலாக வேறு நான்கு நிகழ்ச்சிகள் நிகழ வேண்டும். உறவின் முறையாருடைய அழுமுகங்களைப் பார்க்கக் கூடாது. அதற்குப் பதிலாக முருகா! உன் திருமுகங்களைப் பார்க்க வேண்டும்.

ஆசையறுகின்ற ஊரவர்க்குப் பதிலாக, உமது திருத்தொண்டர் கூட்டம் வர வேண்டும்; எனது வாழ்நாள் முடிவிலே பறையறையக் கூடாது; அதற்குப் பதிலாக மறையறைய வேண்டும். வாய் மீது அரிசி சொரிவதற்குப் பதிலாக அமரர் பூமாரி சொரிதல் வேண்டும்.

# செய்திச் சிதறல்கள்

- அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு 2010ஆம் ஆண்டு சைவப்புலவர்களின் விபரங்கள் அடங்கிய பொன்விழாச் சிறப்பு மலர் வெளியிடவுள்ளார்கள்.

- வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச கலாச்சாரப் பேரவையின் திருவுடை யாள் பிரதேச மலர் வெளியீட்டு விழா 05.12.2009 அன்று கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

- தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியின் 157ஆவது ஜன்மதின நிகழ்வு 08.12.2009 அன்று பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமத்தில் நடைபெற்றது. அத்துடன் 31.12.2009 அன்று இவ்வாச்சிர மம் ஆரம்பிக்கப்பட்டு 40 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

- தொண்டைமானாறு, வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய மாணவர் களால் தமிழ் அருவி என்ற மாணவர் சஞ்சிகை 08.12.2009 அன்று பாடசாலை மண்டபத்தில் வெளியிடப்பட்டது.

- யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 130ஆவது குருபூசைத் தின நிகழ்வுகள் 08.12.2009 நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்றது.


- ஸ்ரீலஸ்ரீ குரு ஆறுமுகநாலவர் அவர்கள் ஆற்றிய சமய, கல்வி, சமூகப் பணிகளை நினைவு கூர்ந்து அவரது குருபூசை நாளை சமய நிறு வனங்கள் பாடசாலைகள் கொண்டாடி வருவது சிறப்பான விடயமாகும். அவரால் வெளியிடப்பட்ட நூல்கள் பெரும் பாலானவையைக் காண்பது அரிதாக உள்ளது. எனவே வசதி படைத்த சமய நிறுவனங்கள் நூல் வெளியீட்டாளர்கள், வசதிபடைத்தோர் வெளியிட்டு மக்கள் பாவனைக்கு ஊக்கமளிக்கவேண்டும் என சரசாலை சிதம்பரவிநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் சமாதான நீதவானுமாகிய க. சிவசங்கரநாதன் 2010ஆம் ஆண்டின் ஓர் வேண்டுகோளாக குறிப்பிட்டுள்ளார்.

(தொடர்ச்சி...



# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



இயல்பாகவே புனிதம் நிறைந்த தலமான ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயம் கந்தசஷ்டிக் காலமாகையால் அன்று மேலும் புனிதமான சூழலில் புனிதம் நிறைந்த அடியார்களால் நிறைந்திருந்தது. நேரம் மாலை ஆறுமணி ஆகிக்கொண்டிருந்தது. அது மழைக்காலமாக இருந்தமையால் ஆலயத்தின் மேற்குப் பக்கத்திலுள்ள ஆற்றில் நீர் சல சலவென ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றுக்கு மேற்குத் திசையில் பொன்நிறப் பந்து போல காட்சியளிக்கின்ற கதிரவனும் அடிவானத்தைவிட்டு மெல்ல மெல்ல மறைந்து சென்று கொண்டிருந்தான். இவ்விதமான ரம்மியமான அந்த மாலைப் பொழுதில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் சாயரட்சைப்பூசை தீர்த்தப் பூசையாக பூசகர்களால் உணர்வு பூர்வமாக நடாத்தப்பட்டுக் கொண்டிருந்தது.

அங்கே வயது முதிர்ந்தவர்கள், நடுத்தரவயதினர், இளம் வயதினர் என அனைத்துப்பிரிவில் உள்ள ஆண்களும் பெண்களும் உடலாலும் உள்ளத்தாலும்

புனிதத்துடன் அந்தப் பூசையில் பங்குகொள்கின்ற பாங்கு ஒரு மறக்க முடியாத பக்தி அனுபவத்தை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொண்டிருந்தது. விரதத்தை அனுஷ்டிப்பவர்களுக்கு மட்டுமன்றி அங்கே பூசையில் பங்குகொண்டிருக்கின்ற அனைவருக்குமே அவர்களை அறியாமலே பக்தியையும் பக்குவத்தையும் ஏற்படுத்துகின்ற சூழ்நிலை அங்கே வெளிப்பட்டுக்கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

ஆம்! 2001ஆம் ஆண்டு கந்தசஷ்டி காலத்தில் அந்த விரதத்தை அனுஷ்டிக்கின்ற அடியவர்களுள் ஒருவராக அடியேனும் இருந்தமையால் உணர்வுபூர்வமான அந்தத் தீர்த்தப் பூசையில் பங்குபற்றிய நிலையில் மிகுந்த மனநிறைவுடன் ஆலயத்திலிருந்து ஆச்சிரமத்திற்குத் திரும்பிக் கொண்டிருந்தேன். ஆலய வாசலுக்கு நேர் எதிராக உள்ள வீதியினூடாக ஆச்சிரமத்தில் உள்ள எனது மோட்டார் சைக்கிளை எடுப்பதற்காகவே அவ்வாறு நான் திரும்பிக் கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் அந்த உணர்வு பூர்வமான சம்பவம் அங்கே நடைபெற்றது.

ஆலய வாசலுக்கு எதிராக உள்ள அந்த வீதியில் ஆலயத்திலிருந்து வருகின்றபொழுது வலது பக்கமாக பருத்தித்துறை ப.நோ.கூ. சங்கத்திற்கு சொந்தமான சங்கக்கடை ஒன்று காணப்படுவதை அடியார்கள் அவதானிக்க முடியும். அந்தப் ப.நோ.கூ. சங்கக் கடைக்கு எதிர்ப்பக்கமாக கதவுகள் இல்லாத உற்சவ காலங்களில் மட்டும் பயன்பாட்டிற்கு உட்படும் இரண்டு கடைகள் அருகருகாக இருப்பதை தற்பொழுதும் அங்கே அடியார்கள் காணமுடியும்.

அடியேன் ஆச்சிரமத்தை நோக்கி வந்துகொண்டிருக்கும் பொழுது பயன்படுத்தப்படாதிருக்கின்ற அழுக்கு நிறைந்த அந்தக் கடைக்குள் பிச்சைக்காரர் போல தோற்றமளித்த ஒருவர் காணப்படுவதை இயல்பாக என்னால் அவதானிக்க முடிந்தது. அதேநேரம் அங்கே காணப்பட்ட அந்தப் பிச்சைக்காரர் தனது கைகளை அசைத்து என்னை அங்கே வருமாறு அழைப்பதையும் நான் தெளிவாக அவதானித்தேன். பிச்சைக்காரர் போல தோற்றமளித்த அந்த நபரிடம் செல்வதா? விடுவதா? என எனது உள்ளம் ஒரு கணம் சஞ்சலப்பட்டாலும் அவரிடம் செல்வதற்கே எனது உள்ளம் தூண்டியது. இவ்வாறு அந்த அன்பரிடம் செல்லவேண்டும் என்பதற்காக சங்கக்கடைப் பக்கமாக நடந்து கொண்டிருந்த நான் வீதியைக் கடந்து எதிர்ப்பக்கமாக கடைக்குள் இருந்த அந்த அன்பரைச் சென்றடைந்தேன்.

அடியேன் ஏற்கனவே குறிப்பிட்டது போல அழுக்கு நிறைந்த இடத்தில் காணப்பட்ட அந்த அன்பரும் அழுக்கு நிறைந்தவராகவே காணப்பட்டார். அதுமட்டுமல்ல நீண்ட நாட்கள் தோய்க்காத அழுக்கு நிறைந்த ஆடையை அந்த அன்பர் அணிந்திருந்ததையும் என்னால் அவதானிக்க முடிந்தது.

இத்தகைய சூழ்நிலையில் அவ்விடத்திற்குச் சென்ற அடியேன் என்னை ஏன் அழைத்தீர்கள்? என்ன விடயம்.... என்று அவரிடம் வினவினேன். அவர் என்னை நோக்கி "நான் சாப்பிட்டு இரண்டு நாட்கள் ஆகிறது எனக்கு நன்றாகப் பசிக்கிறது. நான் சாப்பிடுவதற்கு ஏதாவது வாங்கித் தாருங்கள்" என்றும் என்னிடம் கேட்டுக்

முட்டாள் தன் உள்ளத்தில் உள்ளதையெல்லாம் கொட்டி விடுகிறான்.

கொண்டார்கள். அடியேனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. பொழுது மறைந்து இருட்டாகிவிட்டது. இவருக்கு இந்த நேரம் சாப்பிடுவதற்கு எதை வாங்கிக் கொடுப்பது? எங்கே வாங்குவது? என்ற விடயங்கள் தொடர்பாக சிறிது நேரம் யோசித்தேன்.

ஆனால் நான் அவ்வாறு தொடர்ந்து யோசித்துக் கொண்டிருப்பதற்கு பசியுடன் இருந்த அந்தப் பிச்சைக்கார அன்பர் அவகாசம் தரவில்லை. "எனக்கு பசிக்கிறது வாங்கித்தர முடியுமென்றால் வாங்கித்தா இல்லையென்றால் போ" என்று எவ்வித தயக்கமுமின்றி என்னிடம் தெரிவித்தார்கள்.

இவ்வாறான இறுக்கமான வார்த்தைகளை அவர் பயன்படுத்துவார் என்று அடியேன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. என்றாலும் என்னை நான் சுதாகரித்துக் கொண்டேன். அடியேன் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில்த்தான் நிற்கிறேன் என்பதையும் ஆலயச் சூழலில்த்தான் இந்த நிகழ்வு நடைபெறுகிறது என்பதையும் அமைதியாக மனதிற்குள் மீட்டுப் பார்த்துக்கொண்டேன். இதனால் இந்த நிகழ்வு எந்த விதமான மனக்கிலேசத்தையும் எனக்கு ஏற்படுத்தவில்லை. அதுமட்டுமல்ல இவ்வாறானவர்களை "கௌரவமான பிச்சைக்காரர்" என்றோ அல்லது "யோக்கியமான பிச்சைக்காரர்" என்றே அழைக்கலாம் என்று எங்கேயோ வாசித்ததும் எனக்கு அப்போது ஞாபகத்திற்கு வந்தது.

துன்பப்படுகின்ற ஒரு ஜீவனிடம் இருந்து இவ்வாறான வார்த்தைகள் வருவதனால் அது தொடர்பாக நாம் கோபமோ வெறுப்போ அடையக் கூடாதென்பதையும் உணர்ந்துகொண்டேன். மேலும் பசியுடன் அந்த அன்பர் துன்பப்படுகிறார் என்பதை நன்கு உணர்ந்து கொண்டதனால் மேலும் யோசித்து நேரத்தை தாமதமாக்காது அந்த அன்பரை நோக்கி "சிறிது நேரம் இருங்கள். நான் சாப்பாடு கொண்டுவருகின்றேன்" எனக் கூறிவிட்டு நேரே ஆச்சிரமத்திற்கு சென்றடைந்தேன்.

ஆச்சிரமத்திற்கு சென்ற நான் சமையல் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இடத்தைச் சென்றடைந்தேன். அங்கே சுவாமிகளின் துணைவியார் அடியார்களுக்கு இரவுச் சாப்பாட்டினை வழங்குவதற்குரிய சமையல் வேலைகளிலும் அதனை வழங்குவதற்குரிய முன் ஆயத்த வேலைகளிலும் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அடியேன் அவரிடம் சென்று எனக்கு ஒரு பார்சல் தருமாறு கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் என்னை நோக்கி "மாஸ்ரர் சாப்பாடு உங்களுக்கோ, எத்தனை இடியப்பம் வைத்துக்கட்டுவது?" என்று என்னிடம் கேட்டார்கள். நான் "எனக்கு இல்லை இன்னொருவருக்குக் கொடுப்பதற்கு ஒரு அளவாகக் கட்டுங்கள்" என்று பதிலளித்தேன். அவர் இரவுச்சாப்பாட்டிற்கு ஒருவருக்குப் போதுமான அளவு இடியப்பங்களை வைத்து அதற்குத் தேவையான கறி முதலியவற்றையும் தாராளமாக வைத்து அதனைப் பொதிசெய்து அடியேனிடம் கையளித்தார்கள்.

அதனைப் பெற்றுக்கொண்ட அடியேன் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு நேரே ஏதிலியாய் இருக்கும் அந்த ஏழை அன்பரிடம் சென்று அந்த இடியப்ப

பொதியை கையளித்தேன். மிகுந்த ஆவலுடனும் மகிழ்ச்சியுடனும் அதனை என்னிடமிருந்து பெற்றுக்கொண்ட அந்த அன்பர் பக்குவமாக அதனைப் பிரித்து மிகுந்த ஆர்வத்துடன் சுவைத்து உட்கொள்ள ஆரம்பித்தார்கள். அவ்வாறு உட்கொள்ள ஆரம்பித்தவர் சில இடியப்பங்களை உட்கொண்டபின் தனக்கு குடிப்பதற்குத் தண்ணீர் எடுத்துத் தருமாறும் என்னிடம் கேட்டுக்கொண்டார்கள். அவர் தந்த பாத்திரத்தில் தண்ணீரும் எடுத்து அவரிடம் வழங்கினேன்.

மிகுந்த மனத்திருப்தியுடனும் மலர்ந்த முகத்துடனும் தனது கைகளை உயர்த்தி அந்த அன்பர் எனக்கு தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள். அதேநேரம் மிகுந்த பசியுடன் அதுவும் ஆலயச்சூழலில் தவித்துக்கொண்டிருந்த ஏதிலி ஒருவருடைய பசியைப் போக்க முடிந்ததே என்ற திருப்தியுடன் அடியேனும் வீடு திரும்பினேன்.

சாயரட்சைப் பூசையான தீர்த்தப் பூசை முடிவடைந்த பின் ஆலயத்தில் மூலஸ்தானக் கிணற்றிலிருந்து தீர்த்தம் எடுத்துச் சென்று அதனுடன் பழங்களையும் சேர்த்து வீட்டில் தீர்த்தம் கரைத்து விரதத்தை நிறைவு செய்வது எனது வழமையான செயற்பாடு. இச்சம்பவம் நடைபெற்ற அன்றைய தினமும் இவ்வாறே வீட்டில் தீர்த்தம் கரைத்து அதனை அருந்தி எனது விரதத்தை நிறைவு செய்துகொண்டேன். இவ்வாறு அன்றைய பொழுதை போக்கிக் கொண்ட அடியேன் ஒருவித மன நிறைவுடன் நித்திரைக்குச் சென்றுவிட்டேன். ஆனாலும் சந்நிதியானது சந்நிதியில் எப்படிப்பட்ட துன்பங்களுடனும் உணர்வுகளுடனும் அடியார்கள் ஒன்று கூடுகிறார்கள் என்பது பற்றியும் குறிப்பாக ஏதும் அற்ற ஏதிலியாக பசியுடன் துன்பப்பட்ட அந்த அன்பரைப் பற்றிய சிந்தனையும் என் மனத்திற்குள் அலை மோதிக்கொண்டிருந்தது.

அடுத்த நாளும் சாயரட்சைப் பூசைக்காக ஆலயத்திற்குச் சென்று வழமை போல எனது துணைவியாரை ஆலயத்தில் இறக்கிவிட்டபின் மோட்டார் சைக்கிளை ஆச்சிரமத்தில் விடுவதற்காக ஆச்சிரமத்தை சென்றடைந்தேன். அங்கே ஆச்சிரமத்தின் சுவாமிகள் ஓய்வாக இருந்தமையாலும் சில வார்த்தைகள் அவருடன் கதைக்க வேண்டியிருந்ததாலும் அவரிடம் சென்று உரையாடினேன். அப்பொழுது சுவாமிகள் கதையுடன் கதையாக என்னை நோக்கி "மாஸ்ரர் நேற்று இரவு இங்கே கோயிலடியில் ஒருவர் இறந்துவிட்டார். காலையில் கடைக்குள் பிரேதம் இருந்து அதனை விதானையார் மூலம் அரசாங்க செலவில் அடக்கம் செய்தார்கள். இன்று பூசை எல்லாம் பிந்தித்தான் நடந்தது" என கோயிலடி நிலமைகளை எனக்கு எடுத்துக் கூறினார்கள்.

இதனைக் கேட்டபொழுது எனக்கு என்ன செய்வது என்றோ என்ன சொல்வது என்றோ தெரியவில்லை. நேற்றைய தினம் நடந்த சம்பவம் தொடர்பாக சுவாமிகளுடனும் எதுவும் நான் உரையாடவில்லை. எனது மனத்திற்குள்ளேயே நடந்த சம்பவத்தை மீண்டும் ஒருமுறை மீட்டுப்பார்த்தவாறும் ஏற்பட்ட துன்பத்தை மனத்துக்குள்ளேயே உள்வாங்கிக் கொண்டும் ஆலயத்தை நோக்கி நடக்கலானேன்.

அவ்வாறு ஆலயத்தை நோக்கி நடந்து செல்லும் பொழுது நேற்றைய

தினம் அந்த அன்பர் தங்கியிருந்த அந்தத் திறந்த கடையை நோட்டமிட்டேன். அது வெறுமையாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது. ஆனால் அங்கே நேற்றைய தினம் நடந்த சம்பவம் எனது மனதை விட்டு நீங்காது மனத்திற்குள் திரும்பத் திரும்ப அலை மோதுகின்ற சம்பவமாக இடம்பெற்றுவிட்டதையும் உணர்ந்து கொண்டேன்.

அந்த ஜீவன் ஏழ்மையில் வாடிய ஒரு ஏதிலியான ஜீவனாக இருந்தாலும் ஏதோ ஒரு வகையில் புண்ணியம் செய்த ஜீவன் என்பதையும் நான் உணர்ந்துகொண்டேன். உடலில் இருந்து உயிர் பிரிகின்ற நேரத்தில் நிறைவாக உணவு அருந்திய திருப்தியுடன் சந்நிதியான் வாசலில் சந்நிதியான் தன்னை மனத்திருப்தியுடன் வழியனுப்புகின்றான் என்ற உணர்வுடனேயே அவரது உயிர் பிரிந்திருக்கும் என்று எனது உள்ளுணர்வு கூறியதால் எனது மனம் ஓரளவு ஆறுதலும் அடைந்தது.

நீண்டகாலம் கடுமையான தவத்தையும் தியானங்களையும் அனுசரித்து ஒருவர் பெறக்கூடிய மிக அற்புதமான அத்வைத நிலையை காசியில் உயிர் விடுவதாலேயே பாமர மக்கள் கூட மிகச் சுலபமாக அடைந்து கொண்டிருக்கிறார்கள் என இராமகிருஷ்ண பரமகம்சர் குறிப்பிட்டுள்ளார்கள். இதேபோன்று சந்நிதியில் உயிர் விடுவதாலேயே இந்த ஜீவன்களும் ஈடேற்றத்திற்குரிய ஜீவன்களாக ஆகின்றன என்று அப்பொழுது அடியேன் சிந்தித்தேன். அதுமட்டுமல்ல. அந்த நிலைக்காக பலர் ஏங்குகிறார்கள் என்பதையும் பின்பு நான் உணர்ந்து கொண்டேன்.

கீழைத்தேச மதங்கள் பற்றி ஆய்வு செய்வதற்கு வருகை தந்து இறுதியில் சந்நிதியிலேயே தங்கி தவ வாழ்க்கை மேற்கொண்ட ஜேர்மன் சுவாமிகள் பற்றி நாம் எல்லாம் அறிந்திருக்கின்றோம். அவருடைய இறுதிக்காலம் நெருங்கிக் கொண்டிருந்தது. இதனை அறிந்துகொண்ட அவருடைய மிக நெருக்கமான உறவுமுறையான பெண் ஒருவர் சந்நிதிக்கு வந்து அவரை ஜேர்மன் நாட்டிற்கே வருமாறு அழைத்தார்கள். ஆனால் அவர் அங்கே செல்ல மறுத்துவிட்டார். இறுதியில் ஜேர்மன் சுவாமிகள் சந்நிதியிலேயே சங்கமமானார்கள். அந்த உறவுப் பெண் அவருடனேயே தங்கியிருந்து அவருடைய இறுதிக்கிரியைகளை சந்நிதியிலேயே நிறைவுசெய்தபின் தனது நாட்டிற்கு திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது.

அதே போலத்தான் முருகேசு சுவாமிகளும் செயற்பட்டார்கள். அவர் தனது இறுதிக் காலத்தில் ஆலயச் சூழலில் அருணாசலம் என்ற அன்பருடைய வீட்டில் தங்கியிருந்தார்கள். அப்பொழுது ஆச்சிரமத்தின் சுவாமிகளும் அடியேனும் அவரைச் சென்று பார்வையிட்டோம். அப்பொழுது முருகேசு சுவாமிகள் அடியேனை நோக்கி "மாஸ்ரர் நான் இனி சந்நிதியானை விட்டு வேறு எங்கும் செல்லப் போவதில்லை. இங்கே தான் இருப்பேன்'' எனக்கூறி அங்கேயே தங்கியிருந்து அவர் குறிப்பிட்டது போலவே 16.03.1997 ஆம் ஆண்டு ஒரு ஞாயிற்றுக்கிழமை சந்நிதியானுடன் சங்கமமானார்கள்.

ஆம் தவ வாழ்க்கை வாழ்ந்து ஞான நிலை அடைகின்ற ஞானிகளின் ஞானக்கண்களுக்கு சந்நிதி ஆலயம் புனிதம் நிறைந்த ஆலயமாக தென்படுகிறது. இதே போல அவனிடம் அளவில்லாத பக்தி கொண்ட அடியவர்களும் கூட இதன் புனிதத்தை

நன்கு உணர்ந்துகொண்டவர்களாகவே உள்ளனர். இதனால்த்தான் தினம் தினம் அவனது திருவடிகளை நாடித் திரள்திரளாக அடியவர்கள் இங்கே ஒன்று கூடுகின்றனர்.

ஓம் முருகா!

---

வவுனியா கோவில்குளம்

## அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேசுவரர் திருக்கோவில்

## மார்கழி மாத திருவாசக முற்றோதல் – 2009 – 2010

| திகதி | நாள் | கிழமை | ஆலய விபரம் |
|---|---|---|---|
| 16.12.2009 | மார்கழி 01 | புதன் | வைரவப்புளியங்குளம் ஸ்ரீ ஆதிவிநாயகர் ஆலயம் |
| 17.12.2009 | 02 | வியாழன் | கூமாங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் |
| 18.12.2009 | 03 | வெள்ளி | ஆசைப்பிள்ளையார்குளம் ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலயம் |
| 19.12.2009 | 04 | சனி | சமயபுரம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் |
| 20.12.2009 | 05 | ஞாயிறு | தெற்கிலுப்பைக்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் |
| 21.12.2009 | 06 | திங்கள் | இறம்பைக்குளம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் |
| 22.12.2009 | 07 | செவ்வாய் | நெளுக்குளம் ஸ்ரீ முருகன் ஆலயம் |
| 23.12.2009 | 08 | புதன் | வவுனியா ஸ்ரீ கந்தசுவாமி ஆலயம் |
| 24.12.2009 | 09 | வியாழன் | கற்பகபுரம் ஸ்ரீ முத்துமாரி ஆலயம் |
| 25.12.2009 | 10 | வெள்ளி | சாம்பல் தோட்டம் ஸ்ரீ விநாயகர் ஆலயம் |
| 26.12.2009 | 11 | சனி | குடியிருப்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் |
| 27.12.2009 | 12 | ஞாயிறு | தவசிக்குளம் ஸ்ரீ பால விநாயகர் ஆலயம் |
| 28.12.2009 | 13 | திங்கள் | கிடாச்சூரி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் |
| 29.12.2009 | 14 | செவ்வாய் | திருக்கேதீஸ்வரம் |
| 30–12.2009 | 15 | புதன் | சமணங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் |
| 31.12.2009 | 16 | வியாழன் | சிவபுரம் சிவலாயம், புதுக்குளம் ஸ்ரீ விநாயகர் ஆலயம் |
| 01.01.2010 | 17 | வெள்ளி | திருக்கோவில் ஆருத்திர தரிசனம் |
| 02.01.2010 | 18 | சனி | தாண்டிக்குளம் ஸ்ரீ முருகன் ஆலயம் |
| 03.01.2010 | 19 | ஞாயிறு | வேப்பங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் |
| 04.01.2010 | 20 | திங்கள் | திருக்கோவில் |
| 05.01.2010 | 21 | செவ்வாய் | குருமன்காடு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் |
| 06.01.2010 | 22 | புதன் | அண்ணா நகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், பத்திரகாளியம்மன் ஆலயம் |
| 07.01.2010 | 23 | வியாழன் | தட்சணாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் |
| 08.01.2010 | 24 | வெள்ளி | சிதம்பரபுரம் தான்தோன்றி நாகம்மை ஆலயம், ஆசிபுரம் சித்திவிநாயகர் ஆலயம் |
| 09.01.2010 | 25 | சனி | குட்செற் வீதி ஸ்ரீ கருமாரியம்மன் ஆலயம் |
| 10.01.2010 | 26 | ஞாயிறு | தவசிகுளம் ஸ்ரீ ஞானவைரவர் ஆலயம் |
| 11.01.2010 | 27 | திங்கள் | மகாறம்பைக்குளம் ஆலடி விநாயகர் ஆலயம் |
| 12.01.2010 | 28 | செவ்வாய் | இறம்பைக்குளம் ஸ்ரீ நாகபூசனி ஆலயம் |
| 13.01.2010 | 29 | புதன் | வவுனியா ஞானவைரவர் ஆலயம் |

தமிழகத் திருக்கோயில் வரிசை: உ

# பட்டீச்சரம்

– வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்–

கும்பகோணத்திற்கு தென்மேற்கே 8 கி.மீ தூரத்திலும், சுவாமி மலையிலிருந்து குறுக்குப்பாதையில் (கும்பகோணம் போகாமல்) 3 கி.மீ தூரத்திலும் உள்ளது பட்டீச்சரம் எனப்படுகின்ற பழம் பெரும் பதி. கும்பகோணத்திலிருந்தும் சுவாமி மலையிலிருந்தும் அடிக்கடி பேருந்து வசதிகள் உண்டு.

காமதேனுப் பசுவின் மகள் "பட்டி" பூசித்ததால் "பட்டீச்சரம்" எனப்பட்டது. கோயிலின் தூண் ஒன்றில் "பட்டி" லிங்கம் மீது பாலைச் சொரிந்து வழிபடுவது போன்ற சிற்பமுள்ளது. இறைவன் சந்நிதியிலும் இச்சிற்பம் சுதையினால் ஆக்கப்பட்டுள்ளது. தேவி தவம் செய்த இத்தலத்துக்கு "தேவிவனம்", "சக்திவனம்" என்னும் பெயர்களும் வழங்கப்படுகிறது.

சோழர்களின் பழைய தலைநகரம் "பழையாறை". அவ்விடத்திலேதான் பட்டீஸ்வரமும், திருச்சத்திமுற்றம் திருத்தலங்கள் அருகருகே உள்ளன. திருச்சத்தி முற்றத்தை வணங்கியபின், அருகே உள்ள பட்டீஸ்வரநாதரைத் தரிசிக்க விரும்பிய திருஞானசம்பந்தர் வெப்பம் மிகுந்த கடும் வெய்யிலில் வீதியில் இறங்கி நடந்து வருகிறார். அடியார் கூட்டமும் அவரைப் பின் தொடர்ந்து வருகிறது. "பட்டீசர் எங்களை இதனுடன் சென்று உதவுமாறு உரைத்தருளினார்" எனக்கூறியபடி முத்துப்பந்தரை அவரது தலைக்கு மேலாகப் பூதகணங்கள் பிடித்துவர, தேவர்கள் பூமாரி பொழிய, பொழிந்த பூக்கள் அனைத்தும் முத்துப்பந்தர் மீது விழுந்து தண் நிலவை ஒத்த குளிர்ச்சியை ஏற்படுத்த தனது சிறிய பாதங்களால் நடந்து பட்டீஸ்வரம் கோபுர வாசலை நெருங்கி வருகிறார் திருஞானசம்பந்தர்.

பந்தலின் அடியில் "தன் குழந்தை" நடந்து வரும் அழகைக்காண சிவனாருக்கு ஆசை வந்தது. கருவறையில் இருந்தபடியே எட்டி எட்டிப் பார்க்கிறார் பட்டீசரநாதர். அதோ! அந்தச் சம்பந்தப் பிள்ளை, பார்வதியின் திருமுலைப்பால் பருகிய அழகுக் குழந்தை, தலையிலே மடித்துக்கட்டிய கொண்டை, கையிலே பொற்றாளம்... ஆஹா... அழகேயழகு... தலையைத் திருப்பித் திருப்பிப் பார்த்த பட்டீசர் எத்தனை முயன்றும் முழுமையாகப் பார்க்க முடியவில்லை.

அடுத்த கணம்... "நந்தீஸ்வரா! நகர்ந்து கொள்! ஞானசம்பந்தன் வரும் அழகை நான் முழுமையாகப் பார்க்க வேண்டும்" என்று ஈசன் கட்டளையிட, அருள் நந்தி விலகி வழிகூட்ட, செல்லப்பிள்ளையாம் சிர்காழிச் செம்மலின் எழில்கண்டு மகிழ்ந்தார் இறையனார்.

விலகி நின்ற நந்திகள் ஒன்றா? இரண்டா? வெளிப்பிரகாரத்தில் உள்ள பெரிய நந்தி முதலாக, உட்புறம் கருவறை முன்பாக உள்ள (பலிபீடத்துடன் கூடியது) சிறிய நந்தி உட்பட மொத்தம் 5 நந்திகள். கருவறை வாசலிலிருந்து பார்த்தால் 5 நந்திகளும் ஒரு நூலிடை பிசகில்லாமல் வலதுபக்கமாக நகர்ந்து காணப்படுகின்றன. "அது யார்? உள்ளே வருவது! அத்தனை பெரிய பிரமுகரோ!" என்று அறியும் ஆவலில் ஒரே விதமாக - ஒரே அளவாக தலையைத் திருப்பிப் பார்த்தபடி உள்ளன.

அருள்மிகு ஞானாம்பிகை உடனாய தேனுபுரீஸ்வரர் திருக்கோயில் கிழக்கு நோக்கியது. நான்கு பக்கமும் நெடிதுயர்ந்த கோபுரங்கள் கொண்டது. கோயிலுக்கு எதிர்ப்பக்கத்தில் தெப்பக் குளம். கிழக்குக் கோபுரம் ஏழு நிலைகள் கொண்ட ராஜகோபுரம். வெளிப்பிரகாரத்தில் தல விருட்சமான வன்னி மரமும், "ஞானவாவி" தீர்த்தமும், திருஞான சம்பந்தர் மடமும், நந்தவனமும் உள்ளன.

வெளிப்பிரகாரத்தின் வடக்குக் கோபுர வாசலருகே நின்ற திருக்கோலத்தில் எட்டுக் கைகளுடனும், மூன்று கண்களுடனும் சிம்ம வாகனத்தில் துர்க்கையம்மன் சாந்த சொருபியாக அருள் பாலிக்கிறாள். பொதுவாக துர்க்கையின் சிம்ம வாகனம் வலப்பக்கம் தலை வைத்திருப்பதையே பார்த்திருக்கிறோம் ஆனால் இங்கே சிம்மவாகனம் இடது பக்கம் தலை வைத்திருப்பது ஒரு வித்தியாசமான அம்சம்.

இரண்டாம் பிரகாரத்தில் தேவார மூவர் சந்நிதி, அனுக்ஞை விநாயகர் சந்நிதிகளும், உட்பிரகாரத்தில் சப்த கன்னிகைகள், சுவர்ணவிநாயகர், பாலமுருகன், சண்முகர், ராமலிங்கம், மகாலெட்சுமி ஆகியோர் தனித்தனி சந்நிதிகளில் உள்ளனர்.

உட்பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் அறுபத்துமூவர் சந்நிதியும் தொடர்ந்து நடராஜர் சந்நிதி, தவம் செய்யும் அம்பாள் சந்நிதி, சூரியன், சண்டிகேசர் உள்ளனர். உட்பிரகாரத்தில் உள்ள இரண்டு தீர்த்தக் கிணறுகளில் ஒன்று "கோடி தீர்த்தம்" எனப்படுகிறது.

இராமன், இராவணனைக் கொன்று மீண்டும் அயோத்தி செல்லும் வழியில், பட்டீஸ்வரத்தை அடைந்து ஒரு சிவலிங்கத்தைப் பிரதிஸ்டை செய்து வழிபட்டார் என்றும், அந்த சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்யத் தன் வில்லின் நுனிகொண்டு ஒரு கிணற்றை உண்டாக்கி நீரெடுத்து லிங்கத்திற்கு அபிஷேகம் செய்தார் என்றும் கோயில் குறிப்புக் கூறுகிறது.

நவக்கிரகங்களுக்கு எதிராக அம்பாள் தவமியற்றும் திருக்கோலச் சந்நிதியை தரிசித்தோமே! அந்தச் சந்நிதிக்கு முன்பாக கேணி வடிவிலான "தபஸ் கிணறு"ம் நந்தவனமும் உள்ளது. இதனாற்றான் இந்தப் பகுதிக்கு தேவிவனம், சக்திவனம் என்னும் பெயர்களுமுண்டு. அம்பாள் தவமிருந்த போது, அம்பாளுக்கு உதவுவதற்காக காமதேனு தன் மகள் "பட்டி"யை அனுப்பி வைத்தாள். அம்பிகையின் தவத்தை அவதானித்த பட்டி தானும் சிவவழிபாடு நடத்த எண்ணி

மணலால் லிங்கம் பிடித்து வைத்து, தன் தூயபால் கொண்டு அபிஷேகம் செய்து வணங்கி ஆராதித்தார். பட்டியின் தூய அன்பினை மெச்சிய இறைவன் அந்த லிங்கத்திலேயே தன் சக்தியை ஏற்றி நிலையாக அமர்ந்து "பட்டீஸ் வரநாதர்" ஆனார் என கோயில் வரலாறு கூறி நிற்கிறது.

மகாமண்டபம், மற்றும் அதன் முகப்புத் தூண்களில் அழகழகான சிற்பங்கள் உள்ளன. காளி, அர்த்தநாரீஸ் வரர், யாழ் மீட்டும் நங்கை, வில்லேந்திய குமரன் - இவற்றினைக் காண உள்ள மெல்லாம் உவகை கொள்கிறது. கருவறையில் தேனுபுரீஸ்வரர் - பட்டீஸ்வரநாதர் அழகே உருவாக அமர்ந்திருந்து அருள் பாலிக்கிறார்.

மூலவர் சந்நிதிக்கு வடபக்கத்தில், கிழக்குப் பார்த்தபடி அம்பாள் ஞானாம்பிகை அருள் பாலிக்கிறார். அம்பாள் கோயிலின் முன் மண்டபத்தில் எழில்மிகு சிற்பங்களும், யாளிகளும் காணப் படுகின்றன. மண்டப மேல் விதானத்தின் நடுப்பகுதியில் கற்சங்கிலிகளும், அவற்றில் தொங்கும் பாம்புகளும் (எல்லாமே கற் சிற்பங்கள்) ஒரு வட்டச் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இந்த வட்டச் சிற்பம் தலைகீழாக இன்னுமொரு வட்டக் கல்லில் அளவோடு பொருந்தி தனியாகச் சுழலக்கூடியதாக உள்ளது. இந்தச் சிற்பத்தின் ஆக்கற்திறன் இன்னமும் எமது நெஞ்சினில் அழியாமல் பசுமையாக நிற்கிறது.

"பத்தியுற்றோர்
முட்டீச் சுரத்தின் முயலா வகையருளும்
பட்டீச் சுரத்தெம் பராபரமே.

-அருட்பா -


## புத்தாண்டில் (2010) புதிய பொலிவுடன்

## ஞானச்சுடர்

⌘ சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்களின் *"புதியதேடல்"*
தினம்... தினம்.. ஆனந்தமே..... (தொடர்)

⌘ சங்க நூற் செல்வர் பண்டிதமணி சு. அருளம்பலவனார் அவர்களின்
*"திருவாசக ஆராய்ச்சியுரை"* (தொடர்)

⌘ சிறுவர் பகுதி: ¤ **நீதிக் கதைகள்**
¤ **மூதுரைக் கதைகள்**
¤ **திருக்குறள் கதைகள்**
¤ **பஞ்ச தந்திரக் கதைகள்**
¤ **பெரிய புராணக் கதைகள்**

இன்னும் பல புதிய அம்சங்களுடன் 2010 தைமலர் வெளிவரும்

# மார்கழி மலர் 2009 ஞானச்சுடர்

# தை மாத வாராந்த நிகழ்வுகள்

**01.01.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

மறவனூர் T.M. வாசகர் குழுவினரின் மங்கள இசையுடன் அமரர் தி.மகேஸ்வரன் அவர்களின் நினைவாகக் கட்டப்பட்ட

**வைத்தியசேவை மற்றும் முன்பள்ளி மாணவர்களுக்கான**

**புதிய கட்டடத் திறப்புவிழா**

**08.01.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :-"இன்னிசை" (பக்கவாத்தியசகிதம்)

வழங்குபவர் :-செல்வி. யோகராசா யோகாஞ்சனா அவர்கள்

(நுண்கலைமாணி)

**15.01.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :-"வேல் கை கொண்டவன்"

வழங்குபவர் :-திரு. K.கைலநாதன் அவர்கள் (ஆசிரியர்)

**22.01.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :-"பண்ணிசை" (பக்கவாத்தியசகிதம்)

வழங்குபவர் :-திரு.சி.தில்லைமணி அவர்கள் (நல்லைஆதீன ஓதுவார்)

**29.01.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :-"தேவிபாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :-திரு.அ.குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்டவிரிவுரையாளர்.யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை)

**31.01.2010 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

வாராந்த நிகழ்வு வழங்கியோரைக் கௌரவித்தல்

## ஞானச்சுடர் 145 ஆவது

## மாத வெளியீடு

**தை 2010**

**வெளியீட்டுரை :- செஞ்சொற் செல்வர் திரு. ஆறுதிருமுருகன் அவர்கள்**

[அதிபர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி]

**மதிப்பீட்டுரை :- திரு. ஆ. சிவநாதன் அவர்கள்**

[அதிபர், யா/வல்லை சிவகுரு வித்தியாசாலை]

பதிவு இல. Q.D/38/NEWS/2009

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம் 2009

